# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 01-04-1994

அன்பளிப்பு 40P


### உலகின் முதல் முன்மாதிரி

'விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தினாலும், அவ்வமைப்பின் தலைவர் பிரபாகரன் அவர்களின் மனிதாபிமானத்தினாலும் நாம் பத்துப் பேரும் விடுதலை செய்யப்பட்டோம். அத்துடன் உலகில் முதல் தடவையாக, எமது பெற்றோரை கைதிகளாக இருந்த எமக்கருகில் இருந்து பணிவிடை செய்ய அனுமதித்தனர். சாதாரண கைதிகளுக்குக் கூட ஒரு குறிப்பிட்ட நேரம் மட்டுமே அவர்களின் பெற்றோரைச் சந்திக்க அனுமதிப்பது வழமை. மேலும் மற்றைய யுத்தக் கைதிகளின் விடுதலைக்கும் விடுதலைப் புலிகள் சந்தர்ப்பங்களை அளித்தபோதும் சிறீலங்கா அரசாங்கம் அவற்றைத் தட்டிக்கழித்துவிட்டது'.

இவ்வாறு அண்மையில் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்ட இரண்டு யுத்தக்கைதிகளும் தெரிவித்துள்ளனர்.

# சிறீலங்கா அரசாங்கத்தின் போலித்தனம் அம்பலமாகியது

இலங்கைத் தீவின் தேசிய இனங்களுக்கிடையான முரண்பாட்டிற்கு அரசியல் தீர்வு காணவிரும்புவதாக சிறீலங்கா அரசாங்கம் கூறிவந்தவைகள் வெறும் ஏமாற்றுவித்தைகளே என்பதை, சிறீலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனின் பத்திரிகையாளர்களுக்கான உத்தியோக பூர்வ அறிவிப்பு தெளிவாக்கியுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, யாழ்ப்பாணத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தியிலும் சமாதானத்திற்கான கதவுகள் இன்னும் திறந்திருப்பதாக அறிவித்திருந்தார். இதற்கு, கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாட்டில் பதிலளித்த சிறீலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், "விடுதலைப் புலிகளை பேச வருமாறு சிறீலங்காப் பிரதமரும் தொடர்ச்சியாக அழைத்து வருகிறார். ஆனால் புலிகள் பேச வருவதாயின் மூன்று நிபந்தனைகளை அவர்கள் ஏற்க வேண்டும். 1) ஆயுதங்களைக் கீழே போட வேண்டும். 2) சிறீலங்கா அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் தமிழ்க்குழுக்களை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். 3) தலைவர்களே பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்" என அவர் அறிவித்துள்ளார்.

இதன் மூலம் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை என்னும் சூழ்நிலையை மாற்றி, தமிழீழ மக்களின் தேசியத் தலைமைத்துவம் ஒன்றே என்ற யதார்த்தத்தை சிதறடித்து, பல்குழுக்களது சுய நலத் தன்மைகளுக்கு தமிழ் மக்களின் தலைமைகள் என்ற மகுடத்தைச் சூட்ட சிறீலங்கா அரசாங்கம் முயற்சிப்பதை, பிரட்மன் வீரக்கோனின் நிபந்தனைகள் தெளிவாக்குகின்றது. அத்துடன் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்கு அவசியமாக உள்ள ஆயுத எதிர்ப்பை முறியடிக்கும் முகமாக, எவ்வித பாதுகாப்பு உறுதிமொழியும் தமிழீழ மக்களுக்கு இல்லாத அரச பயங்கரவாதச் சூழலில் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்கிற அடக்குமுறைத்தனமான நிபந்தனையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய சிறீலங்கா இராணுவத் தலைமையகப் பேச்சாளரான கெமுனு குலதுங்க, விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெருமளவிலான தாக்குதல்களை நடாத்துவதற்கான சகல திட்டங்களும் தயாராக்கப்பட்டுவிட்டதாகவும், ஆயினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவற்றின் விபரங்கள் வெளியிடப்பட முடியாதுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழீழக் கடல் பிரதேசம் மீதான சிறீலங்காவின் கடல் வலயத்தடை, மீன்பிடித் தடை என்பன தொடர்ந்து அமுலில் உள்ளதெனவும் இது அகற்றப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளில் உண்மையில்லை எனவும் இவர் அறிவித்துள்ளார். இதன்மூலம் சிறீலங்கா அரசாங்கம் எந்த நேரத்திலும், தமிழீழப் பிரதேசங்கள் மீதான பாரிய யுத்தம் ஒன்றை நடாத்துவதற்கு ஆயத்தநிலையில் தன் படைகளை வைத்துள்ளது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**நல்லெண்ணக் குழுக்களை முறியடிக்க**

நல்லெண்ணக் குழுக்கள் யாழ் குடாநாட்டுக்கு விஜயங்களை மேற்கொள்வதன் மூலம், யாழ் குடாநாட்டின் உண்மை நிலையும் அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் தமிழீழ மக்களினதும் அமைதிக்கான அவாவும் வெளியுலகிற்கு தெரிய வருவது, சிறீலங்கா அரசாங்கத்தின் போர் வெறித்தனமான இன அழிப்பு முயற்சிகளுக்கு கருத்து நிலைத் தடைகளை ஏற்படுத்துகிறது. அத்துடன் நல்லெண்ணக் குழுக்களை பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குமாறும், நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை, யுத்த நிறுத்தம் என்பவற்றை முன்னெடுக்க உதவுமாறும் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் வலியுறுத்தியதனால் நல்லெண்ணக் குழுக்க

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

## தென்மாகாணச்சபைத் தேர்தல்

# யுத்த சூழ்நிலையை சிங்களவர் நிராகரிப்பு

# ஆளும் ஐ.தே.கட்சி படுதோல்வி

சிறீலங்காவின் தென் மாகாணசபைத் தேர்தலில் சிறீலங்கா ஜனாதிபதிக்கும், அவரது ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் கிடைத்துள்ள தோல்வியானது, சிறீலங்காவிலுள்ள சிங்கள தேசிய இனமக்களும் இத்தீவில் அரசாங்கம் தோற்றுவித்துவரும் யுத்த சூழ்நிலையை நிராகரிக்கின்றனர் என்பதற்கு தெளிவான சான்றாக உள்ளது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆசனங்கள் வாரியாக 21 ஆசனங்களும், எதிர்க்கட்சிகளின் மக்கள் கூட்டணிக்கு 32 ஆசனங்களும் கிடைத்துள்ளன. அதேவேளை தேர்தல் நடைபெற்ற 21 தொகுதிகளை கணக்கில் எடுப்பின் 20 தொகுதிகளில் எதிர்க்கட்சியினரின் மக்கள் கூட்டணிக்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ளன. இதனை அடிப்படையாக கொண்டு நோக்கினால் ஆளும் ஐ. தே. கட்சிக்கு நாடளாவிய நிலையில் சிங்கள மக்களின் ஆதரவு பெருமளவில் குன்றி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தேவையற்ற யுத்த சூழ்நிலை ஒன்று சிறீலங்காவின் ஆளும் கட்சியால் தோற்றுவிக்கப்பட்டு வருகிறது எனவும், இதன் பயனாக ஏற்படும் ஆளணிச் சேதங்களும் பொருளாதார நட்டங்களும் முழுச் சிங்கள இனத்தையும் பாதிக்கும் காரணியாக உள்ளதென கொழும்பில் உள்ள சிங்கள அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இப்படியான மனநிலை சிங்கள மக்களிடையே வேரூன்றி வருவதை உணர்ந்த சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்க, தனது இனவாதப் பேச்சுக்கள் மூலம் சிங்கள பௌத்த வெறித்தன்மையை சிங்கள மக்களிடையே புகுத்தலாமென்று பெருமுயற்சி செய்துவருகிறார். இவ் இனமத வெறி மூலம் சிங்கள மக்கள் தமக்கு ஏற்படக்கூடிய ஆளணிச் சேதங்களையும் பெருநட்டங்களையும் தாங்கி தமது பேரினவாத தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துவர் என்பது சிறீலங்கா ஜனாதிபதியின் நோக்கம்.

இதற்காகவே தமிழர்களது தாயகக் கோட்பாட்டை தான் ஒருபோதும் அனுமதிக்க முடியாது எனவும், சிறீலங்காவில் இனப்பிரச்சினையல்ல வெறும் பயங்கரவாதப் பிரச்சினையே காணப்படுகிறது எனவும், தமிழர்களுக்கு வெளிநாடு சென்று வாழமுடியும் எனவும், வடக்கு கிழக்கு பிரிப்பை தெற்கில் தேர்தல் முடிந்ததும் நடாத்தப் போவதாகவும் பச்சை வகுப்புவாத பேச்சுக்களை, சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்க அரசியல் நாகரீகமற்ற முறையில் பேசிவந்தார்.

ஆயினும் எதிர்க்கட்சிகளின் மக்கள் கூட்டணியின் தலைமையாளரான சந்திரிக்கா பண்டாரநாயக்கா, இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையில்லை என்னும் ஜனாதிபதியின் பேச்சை வன்மையாக கண்டித்து வந்தார். மேலும் மகாணசபைகள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்க முடியாது என்பதை ஏற்றுக் கொண்ட சந்திரிகா, எவ்விதமாக நியாயமான தீர்வு வழங்க வேண்டும் எனக் கூறாதது, இவரும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை மேவ முடியாத நிலையில் இருப்பதை தெளிவுபடுத்தியது. ஆயினும் யுத்த சூழ்நிலையால் சிங்களவர்களுக்கு ஏற்படும் ஆளணி

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# மக்களுக்கு எதிரான யுத்தக் குற்றங்கள்

## தென்தமிழீழத்தில் படுவேகமாக அதிகரிப்பு

சிறீலங்கா அரசாங்கம் ஆயுத மேலாண்மையுடன் போலித் தேர்தல் நடாத்திய மட்டக்களப்பு பிரதேசத்தில் பழிவாங்கல் நடவடிக்கையாக மக்களுக்கு எதிரான யுத்தக்குற்றச் செயல்களை அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பில் ஒன்பது வயதுச் சிறுவனான கந்தசாமி தனசாந்தன் என்னும் பள்ளிமாணவன் சிறீலங்காப் பொலிசாரைக் கண்டு ஓடியபோது, சிறீலங்காப் பொலிசார் நடத்திய இரக்கமற்ற தாக்குதலில் அச்சிறுவன் அவ்விடத்திலேயே துடிதுடித்துச் செத்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. தென் தமிழீழத்தின் இன்னொரு கிராமமான பழுகாமத்தில் 22 வயது இளைஞரான மேகரன் என்பவர் சிறீலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும் நீலாவணை, நாவலடி, புன்னைக்குளம், கோம்மேட்டுத்துறை, 38ம் கிராமம் ஆகிய இடங்களில் சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் விசேட அதிரடிப் படை முகாம்களையும் பாவற்கொடிச்சேனை, தவராசா கடையடி, 6ம் கட்டை, பழுகாமம், பாவற்குடா பிள்ளயார் கோவிலடி ஆகிய இடங்களில் அதிரடிப்படை முகாம்களையும் அமைத்துள்ளனர். இவற்றில் சிறீலங்கா படைகளுடன் இணைந்து செயற்படும் புளட் குழுவினரின் அட்டகாசங்களினால் மக்கள் பலத்த தொல்லைகளை எதிர்நோக்குகின்றனர். இக்குழுவைச் சேர்ந்த மோகன் என்பவர் தலைமையில் இக்குழு கொள்ளையடித்தல், கப்பம் கேட்டல் போன்ற சமூக விரோத நடவடிக்கைகளில் தாராளமாக ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை பழுகாமம் பகுதியைச் சுற்றி வளைத்த சிறீலங்கா ஆயுதப்படையினர் 80 பொதுமக்களை கைது செய்து மிருகத்தனமாகத் தாக்கினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காரணம் தெரியாத நிலையில் தீப்பற்றி எரிந்த மட்டக்களப்பு காரைதீவு அகதிமுகாமில் இருந்த அகதிகள் தெய்வாதீனமாக உடமை நாசத்துடன் உயிர் தப்பியுள்ளனர் என மற்றொரு செய்தி தெரிவிக்கின்றது.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# பதில் நடவடிக்கை

"விடுதலைப் புலிகளின் அமைப்பின் தலைவர் வெளிப்படுத்தியுள்ள நல்லெண்ணத்திற்கான சமிக்ஞைகள் யுத்த நிறுத்தத்தை உடனடியாகக் கொண்டு வரக்கூடிய பதில் நடவடிக்கைகள் மூலம் கௌரவிக்கப்பட்டு, சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்".

இது யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், சமூக -மத நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டமைப்பான 'வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்' சிறீலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கை. வேறு மொழியில் சொல்வதானால் இது தமிழ் மக்களின் விருப்பு.

ஆனால் தமிழ் மக்களை, அந்நிய மக்களாகக் கருதும் சிறீலங்கா அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி விஜயதுங்கா தன்னை (யுத்த) அறுவைச் சிகிச்சை வைத்தியனெனவும், தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு சத்தியப்பிரமாணம் எடுத்துள்ள ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியே எனவும், தமிழர் தாயகம் என்ற சிந்தனையைக்கூட தான் அனுமதிக்கப் போவதில்லை எனவும், பயங்கரவாதப் பிரச்சினையேயுண்டு எனவும், தனது தர்ம்ம உபதேசத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். அதே வேளை பௌத்த அமுக்க குழுக்களும் "யுத்தமே ஒரு வழி" என கருணோபதேசம் செய்யத் தொடங்கியுள்ளன. ஆகவே தமிழ் மக்களின் மகஜர் மூலமான கோரிக்கைக்கு பதில் நடவடிக்கையாக ஆக்கிரமிப்பு யுத்தமொன்றைத் தான் சிறிலங்கா அரசு முன்வைக்கப் போகிறது.

அத்துடன் இவ்யுத்தத்தை தரைவழியாக, கடல்வழியாக ஆரம்பித்தால் பெருமளவிலான ஆயுத எதிர்ப்பை தமிழர்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ அரசு நோக்கிய அரசின் பொறுப்பாளர்களான தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்படுத்துவர் என்பது எதிர்பார்க்கப்படுகின்ற ஒன்று. இதனால் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு பலத்த ஆளணிச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டு, படைநகர்வு தோல்வியுற வேண்டிவரும் என்பதும் சிறீலங்கா அரசாங்கத்துக்கு நன்கு தெரியும்.

எனவே, வான்வழியாக, மக்கள் மேலும், குடிமனைகள் மேலும் குண்டுமழை பொழிதல் என்கின்ற மக்கள் மீதான யுத்தத்தையே சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்கா தேர்ந்தெடுக்கப் போகிறார். இதன் மூலம் தமிழினப் படுகொலைகளும், தமிழர் பொருளியல் வாழ்வியல் அழிப்புக்களும் இலகுவாக நிறைவேற்றப்படலாம் என்பது டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் உள்ளக் கிடக்கை. இதனை நியாயப்படுத்துவதற்கான முதல் முயற்சியாக "புலிகளின் ரேடார் நிலையங்களை அழிக்க விமானப் படையினருக்கு உத்தரவு" என்ற புதிய கதை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான தாக்குதல் என்ற போர்வையில் அப்பாவித் தமிழ் மக்கள் மேல் மிலேச்சத்தனமான விமானக் குண்டுவீச்சை ஆரம்பிப்பதற்கான உத்தியே இது.

அதேவேளை நல்லெண்ணம் உள்ள சில சிங்களவர்களுக்கும் சிங்களத் தொடர்புச் சாதனங்கள் சிலவற்றுக்கும் வாய்ப்பூட்டு போடுவதற்காக இலங்கைத் தீவில் தமிழீழத்திற்கு வெளியே இருந்து வெளிவரும் சிங்கள -ஆங்கில -தமிழ் பத்திரிகைகள் எல்லாவற்றுக்கும், சிறீலங்கா அரசாங்கம், தான் வைக்கும் பத்திரிகையாளர் மாநாட்டில் கொடுக்கப்படும் அறிக்கைகளை மட்டுமே பிரசுரிக்க வேண்டுமென்ற நாகரீகமான பத்திரிகைத் தணிக்கையை அறிவித்துள்ளது.

அதுமட்டுமல்ல, சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளுக்கு ஏற்படும் தோல்விகளை பிரசுரிப்பது தேசத் துரோகச் செயலாகவும் வர்ணிக்கப்பட்டு வருகிறது. திருமதி. சந்திரிகா பண்டாரநாயக குமாரணதுங்கா, "மோசமான இராணுவத்தினர்" என சிறீலங்காப் படைகளின் நடத்தை பற்றி கூறிய கருத்துக்கு சிறீலங்காப் பிரதமர் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அதிருப்தி தெரிவிக்கும் அளவுக்கு கருத்துச் சுதந்திரத்தை சிறீலங்கா அரசாங்கம் கட்டுப்படுத்தத் தொடங்கிவிட்டது. தமிழ் மக்களின் மகஜருக்கு பதில் நடவடிக்கை யுத்தம், அதுவும் இன்னொரு நாட்டின் மேல் போர் தொடுக்கும் பொழுது செய்யப்படுகின்ற செயல்களான 'மக்களுக்கெதிரான வான்வழிக் குண்டுவீச்சு', 'கருத்துச் சுதந்திரத் தடை' போன்ற பல செயற்பாடுகள். இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது சிறீலங்கா அரசாங்கம், ஒருபோதும் தனது மக்களாக, தமிழ் மக்களை பார்க்கவில்லை, பார்க்கப் போவதும் இல்லை -அவர்களுடன் கூடிவாழும் மனோநிலையையும் கொண்டிருக்கவில்லை என்பது தெட்டத்தெளிவாகிறது.

ஆகவே தமிழீழம் பிறந்துவிட்டது என்பதே யதார்த்தபூர்வமான உண்மை. தமிழ் மக்கள் தனியான ஒரு நாட்டினம் (NATION) என்பதை சிறீலங்கா ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் தமது ஒவ்வொரு செயலாலும் வெளிப்படுத்துகிறது. எனவே தமிழீழத் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து சட்டபூர்வமாக நிறுவியுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் தலைமையிலான அரசு நோக்கிய அரசை, சட்டபூர்வமான தமிழீழ அரசாக ஏற்பது என்றே அமைதி உருவாவதற்கான ஒரே பதில் நடவடிக்கை என அமைதியை விரும்பும் அனைவரும் உணர வேண்டும். அவ்விதம் அங்கீகரிப்பதன் மூலம் தான், தாங்கள் உயிர்வாழ உடமைகளைப் பாதுகாக்கத் துடிக்கும் தமிழீழ மக்கள் மேல் குண்டுவிழாது சர்வதேச சமூகத்தால் தடுக்க முடியும். இதுவே தமிழ் மக்களின் கூட்டமைப்பான வெகுஜன அமைப்பின் கோரிக்கைக்கு சிறீலங்கா எடுக்கப் போகும் பதில் நடவடிக்கைக்கு எதிரான ஒரே பதில் நடவடிக்கையாக அமையும். ■

# விடுதலைப்போராட்டம் பயங்கரவாதமல்ல

## யாழ் சென்று திரும்பிய இலண்டன் லூசியம் மேயர்

"தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள். அங்கு இனவிடுதலைப் போராட்டம் நடைபெறுகின்றது; பயங்கரவாதமல்ல. தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை சிறீலங்கா சிங்கள அரசாங்கம் கொடுக்க மறுத்ததினாலேயே இந்தப் போராட்டம். தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கின்றார்கள் என்ற யதார்த்தத்தை சிறீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிறீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டுமே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப தீர்வுகாண் சமாதான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அதற்கு அடுத்த கட்டத்திலேயே மற்றைய விடயங்கள் பற்றி இவ்விரு பகுதியினரும் முடிவு செய்ய வேண்டும். அங்கு யுத்தம் நடைபெறுகிறது. இரு தேசியங்களுக்கிடை நடைபெறும் இந்த யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

தமிழர்களாகிய எமது சகோதர சகோதரிகள், உறவினர்கள் தான் அங்கே யுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நேரத்தில் கருத்துவேறுபாடுகளை மறந்து இந்த அழிவுதரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும்படி தமிழர்களாகிய நாம் எல்லோரும் வற்புறுத்த வேண்டும். அத்துடன், சிறீலங்கா அரசாங்கம் எமது தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் மீது விமானக்குண்டு வீச்சு நடாத்தக் கூடாது என சிறீலங்கா அரசை வற்புறுத்த வேண்டுமென நாம் பிரித்தானிய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும். யாழ் நகர் வைத்தியசாலையில், யுத்த சூழ்நிலைகளினால் நீரழிவு நோய்க்கு தகுந்த சிகிச்சை பெற முடியாது பலர் கண்பார்வை குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதை நேரில் கண்டேன். இவர்களுக்கு உதவும் வகையில் இலண்டன் மேயர் அலுவலகத்தால் Mayor's Appeal (Jaffna Hospital) என்ற நிதியம் ஒன்றைத் தொடங்கியுள்ளேன். இந்தப் பெயருக்கு அனுப்பி வைக்கப்படும் பணத்தில் கண்சிகிச்சைக்கான லேசர் மருத்துவ உபகரணம் ஒன்றை வாங்கி யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்க உள்ளேன்."

இவ்வாறு சமீபத்தில் யாழ்ப்பாணத்திற்குச் சென்று திரும்பிய இலண்டன் லூசியம் நகரபிதா சின்னமணி அவர்கள் பிரித்தானிய பாராளுமன்ற Commitee Room 14 ம் இலக்கத்தில் தனது யாழ் விஜயம் பற்றிய அறிக்கை ஒன்றை விடுத்து பேசுகையில் கூறினார். இவ்வறிக்கை 50க்கு மேற்பட்ட பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட இருப்பதாக திரு. சின்னமணி அவர்கள் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "யாழ்ப்பாணத்தில் மக்கள் மிகச் சுதந்திரமாக நடமாடித் திரிவதைக் கண்டேன். அங்கு விடுதலைப் புலிகளால் நிறுவப்பட்டுள்ள பொலிசார் மிகத் திறமையாகச் சேவையாற்றுகின்றர். 95 வீதம் பெண்களைக் கொண்டுள்ள இப் பொலிஸ் பிரிவினர் 30 பொலிஸ் நிலையங்களில் இருந்து செயற்படுவதாக அறிந்து கொண்டேன்.

இப்பொலிசார் பிரித்தானிய பொலிசாரைவிட திறமையாக சேவையாற்றுவதைக் கண்டு வியப்புற்றேன். நான் 3 நாள் விஜயத்தின் பொழுது 400க்கும் மேற்பட்ட பொதுமக்களைச் சந்தித்து பேசினேன். சென். - ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி, யாழ் வைத்தியசாலை, இரண்டு அகதி முகாம்கள் ஆகியவற்றுக்கும் சென்றிருந்தேன்.

மக்கள் எவ்வித பயமும் இன்றி தமது கருத்துக்களை கூறினர். 1988 இல் நான் இந்திய இராணுவம் இருக்கும்போது யாழ் சென்றிருந்தேன். அவ்வேளை 200 பேரைச் சந்தித்தால் அதில் ஒருவர் மட்டுமே வாய் திறந்து பேசினார். இந்தியப் படையினருக்கு அஞ்சி நடுங்கியபடி அவர்கள் வாழ்ந்தனர். இன்று அப்படியல்ல. மிகச் சுதந்திரமாக - திறந்த மனத்தோடு மக்கள் என்னோடு பேசினார்கள். அவர்களது பேச்சுக்களில் இருந்து அவர்கள் குண்டு வீச்சினால், செல் அடியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டேன். யாழ். அரசாங்க அதிபர் என்னுடன் நீண்ட நேரம் பேசினார். அவரது அலுவலகம் சிறீலங்காக் குண்டு வீச்சுக்கு இலக்காகி 5 1/4 மில்லியன் ரூபா சேதமடைந்துள்ளது. அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். இப்படித்தான் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எந்த ஒரு நாட்டில் தனது குடிமக்கள் மீது தானே குண்டு வீசும் அரசாங்கத்தைப் பார்க்க முடியும்?

நான் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் உரையாடியபோது அவர், சிறீலங்கா அரசாங்கத்தால் முன்வைக்கப்படும் தமிழர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய நீதியானதும் சமத்துவமானதுமான தமிழர் தாயக ஒருமைப்பாட்டை பேணும் எந்தத் தீர்வையும் விடுதலைப் புலிகள் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாகக் கூறினார். அரசியல் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகள் ஆயத்தமாக உள்ளனர். ஏற்ற மாற்றுத் திட்டமொன்றுடன் விடுதலைப் புலிகளை சிறீலங்கா அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும்.

ஆனால் நான் சிறீலங்கா ஜனாதிபதியைச் சந்தித்தபோது அவர், இந்த நாடு சிங்களவர்களுக்குரியது; சிங்களவர்களைப் பலப்படுத்துவதே தனது நோக்கு என்றார். முதலில் சிங்களவரை படகேற்றி கரைசேர்த்தபின்னர் தமிழர்கள், முஸ்லீம்களையும் படகேற்றி கரை சேர்ப்பேன் என்கிறார். மூத்த சிறீலங்கா அமைச்சர் ஒருவர் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பதை ஏற்றுக்கொண்டார். அப்போது ஏன் வீணாகச் சண்டை செய்கிறீர்கள் என்றபோது, புலிகளை நம்பமுடியாது. பிரேமதாசா பேச அழைத்தபோது ஏமாற்றிவிட்டார்கள் என்றார். ஆனால் உண்மையில் பிரேமதாசா புலிகள் கவனத்தில் எடுக்கக் கூடிய எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்காததினாலேயே அப்பேச்சு வார்த்தை முறிவடைந்தது. பிரேமதாசாவை நான் முன்னர் சந்தித்தபோது அவர், "இது இரு தேசியங்களுக்கிடையான பிரச்சினை. இரு தேசியங்களும் ஏற்ற தீர்வை நான் ஏற்படுத்துவேன்" என்றார். அவர் பயங்கரவாதமென்ற சொல்லையே உச்சரிக்கவில்லை. பிரேமதாசா சிறப்பான கொள்கைகளை கதைத்தார். ஆனால் அவற்றை செயற்படுத்த அவர் முயலவில்லை. ஆனால் இன்றைய ஜனாதிபதி முழுக்க வகுப்புவாத ரீதியிலேயே பேசுகிறார். அவர் வெளிநாடுகள் கூறும் ஆலோசனைகளை ஏற்க மறுப்பதற்கு காரணம், முறையான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டுவிட்டால் அதனை செயற்படுத்த வேண்டும் என்கிற மனப்பயம் தான். இதனாலேயே இந்தப் பிரச்சினை உள்நாட்டுக்குள் தீர்க்கப்பட வேண்டும் எனக்கூறி வெளிநாடுகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவிக்கு வருவதை மறுக்கின்றார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு போக அவரை வற்புறுத்தும்படி, நாம் பிரித்தானிய அரசாங்கத்தையும் சர்வதேச அமைப்புக்களையும் வலியுறுத்த வேண்டும். நாம் சில தீர்ப்புக்கள் பற்றி சிறீலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். அவற்றுக்குக் கிடைக்கும் பதில்களுக்கு ஏற்ப எமது பங்களிப்பு இருக்கும். சிறீலங்கா அரசாங்கம் யாழ் குடாநாட்டுக்கு மாவும், உணவு வகைகளும் அனுப்புவதாகக் கூறிக்கொள்கிறது. ஆனால் யாழ் நகரில் குழந்தைகள் போசாக்குப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருப்பதை நேரில் கண்டேன். கர்ப்பிணித் தாய்மார் போசாக்கின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதையும் கண்டுகொண்டேன். மீன்பிடித்தல் சிறீலங்கா அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருப்பதால் புரோட்டீன் சத்துக்குறைபாடு மக்களை மிகக் கடுமையாக தாக்குகிறது.

இந்த யுத்தத்தினால் தமிழ் மக்கள் பாதிப்படைகின்றனர். சிங்கள மக்களுக்கும் பாதிப்புண்டு. இந்திய மக்கள் கூட மறைமுகமாகப் பாதிப்படைகின்றனர். இங்கு பிரித்தானிய மக்கள் கூட மறைமுகமாகப் பாதிப்பு அடைகின்றனர். எனவே அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கும் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உழைக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாக உள்ளது. மேலும் ஜேர்மனியில் இன்று பிறநாட்டவர்கள் வாழ முடியாத அளவுக்கு இனவாதம் வளர்ந்து வருவதை எல்லோரும் அறிவோம். நாளை இனவாதம் இந்த நாட்டில்கூட வளர்ச்சி பெறலாம். அவ்வாறான நேரத்தில் நாங்களோ அல்லது எங்களுடைய பிள்ளைகளோ மீளவும் திரும்பிப் போவதற்கு எங்களுடைய தாய் நாட்டை சிங்கள ஆக்கிரமிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குண்டென்பதை சிறீலங்கா ஜனாதிபதி விஜயதுங்காவுக்கு எடுத்துக்கூறி, பேச்சுவார்த்தைக்குப் போகும்படி வற்புறுத்துவது எமது தாய் நாட்டுக்கு மட்டுமல்ல, எமது தேவையும், எமது பிள்ளைகளின் தேவையும் உண்டு என்பதை நாம் மறுக்க முடியாது.

எனவே இந்தக் கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பாடுபட வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனுடையதும் கடமை" என்றார்.

இக்கூட்டத்தில் தொழிற்கட்சியைச் சேர்ந்த பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. - கெய்த் வாஸ் பேசுகையில், அமைதி ஏற்படுவதற்கு தமது கட்சி எல்லாவிதமான முறையிலும் பாடுபடத் தயாராக இருப்பதாக வாக்குறுதி அளித்தார். ■

# நிலப்பரப்பை கைப்பற்றினாலும் கூட போராட்டத்தை கொன்றுவிட முடியாது

## மக்கள் மனஉறுதியை வெளிப்படுத்திய மகஜர்

- பொருளாதாரத் தடை நீக்கி பண்டங்கள் நகர்வுக்கு வழி விடுக.
- சிறீலங்கா பாதுகாப்புப் படைகளை வாபஸ்பெற்று மக்கள் கிராமங்களுக்கு திரும்ப வகை செய்க.
- விடுதலைப்புலிகள் தலைவரின் நல்லெண்ணத்திற்கான அறிவிப்புக்கள் யுத்தநிறுத்தத்திற்கு நல்ல அறிகுறிகள் என கௌரவிக்கப்பட்டு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குக.

அரசாங்க சார்பற்ற பல தொண்டர் நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள், சமூக மற்றும் மத அமைப்புக்கள் போன்றவற்றை உள்ளடக்கிய வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் சல்மன் எஸ். சிறில் மகஜர் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். வட -கிழக்கு மாகாணசபை ஆளுநர் லயனல் பெர்னாண்டோ உட்பட இலங்கையிலுள்ள சகல தூதரகங்களுக்கும் இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

**இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

"யுத்தத்தின் காரணமாக 60,000 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளதுடன், எண்ணிக் கணக்கிட முடியாதோர் அனாதைகளாகவும், பிள்ளைகளற்றவர்களாகவும், விதவைகளாகவும், தனிமையானவர்களாகவும் மாறியுள்ளனர். உயிரியல் ரீதியாக ஆயிரக் கணக்கானோர் ஊனமடைந்தும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டும் உள்ளார்கள். மேலும் பல்லாயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்து அல்லது வீடிழந்து, அல்லது வேலையிழந்துள்ளார்கள்.

பொருளாதார, போக்குவரத்து மற்றும் தமிழர்களின் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்கள் மீதும் விதிக்கப்பட்டுள்ள தடைகள் விடுதலைக்கான அவசர தேவையை அவர்களுக்கு மேலும் உணர்த்துவதாகவுள்ளது.

சரித்திரத்திலுள்ள சகல விடுதலைப் போராட்டங்களிலும் உள்ளது போல, தமிழர்களைக்கூட யுத்த வெற்றிகளின் மூலம் அடக்கிவிட முடியாது என்பது, இங்கு மேலும் நிரூபணமாகியுள்ளது. புவியியல் அடிப்படையில் நிலப்பரப்பை இராணுவம் கைப்பற்றினால்கூட இந்தப் போராட்டத்தைக் கொன்றுவிட முடியாது.

அத்துடன் தமது சொந்த நாட்டில் தமது சொந்த உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் அவர்கள் தயாராகவே உள்ளனர். அவர்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்களல்ல. ஆனால், கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் பரஸ்பரம் உதவிபுரியும் அயலவர்களாக வாழவே அவர்கள் விரும்புகின்றனர்.

தென்னிலங்கையில் எண்ணிலடங்காதோர் தமது அன்பிற்குரியவர்களை இழந்துள்ளனர். அல்லது ஊனமடைந்துள்ளார்கள்.

இந்த நாடு பொருளாதார ரீதியாக தரம் குறைந்து செல்கின்றது. என்றுமேயில்லாதவாறு கடனாளியாகச் செல்கின்றது. ஆயுதம் தாங்கியவர்களின் சட்டவிரோத செயல்கள், ஒழுக்கக்கேடான சம்பவங்கள் அபாயகரமான மட்டத்தில் அதிகரித்துள்ளன.

இந்த நாட்டின் நலனின் அடிப்படையிலும், சர்வதேச மனித விழுமியங்களின் அடிப்படையிலும் இந்த யுத்தம் எந்தவித முன்நிபந்தனைகளும் இன்றி நிறுத்தப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது. பதிலாக இதற்குச் செலவிடப்படும் வளங்கள் சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும்.

சீர்கேடடைந்து செல்லும் இந்த நிலைமையும், ஆழமாகச் செல்லும் நிலைமையும் தவிர்க்கப்பட வேண்டுமாயின் விடுதலைப் புலிகளிடமிருந்து வந்துள்ள அர்த்த புஸ்டியுள்ள சைகைக்ள் தீவிர கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். தென்னிலங்கையிலுள்ள அறிவுடைய, சரியான முறையில் சிந்திக்கும் பிரஜைகள் இதனை காலத்திற்கு ஏற்ற ஒரு சைகை என அடையாளம் கண்டுள்ளதுடன், அர்த்தபுஸ்டியுள்ள கருத்துக்களையும், ஆலோசனைகளையும் துணிவுடன் முன்வைத்துள்ளனர்.

### பொருள்கள் தட்டுப்பாடு

யுத்த காலத்தில் வட பகுதிக்குத் தேவையான அளவு உணவு மற்றும் மருந்துகள் அனுப்பப்படவில்லை. தடை காரணமாக தனியார் மற்றும் கூட்டுறவுத் துறைகளைச் சார்ந்தவர்களால் இவ்வாறான பொருள்களைப் போதியளவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. இதனால், ஏற்கனவே தமது வருமானத்திற்கான வழிவகைகளை இழந்துள்ள மக்கள் அதிகளவு விலையைப் பொருள்களுக்காகக் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

குறிப்பாக கடந்த மூன்று மாத காலத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மூன்று மாத காலத்திற்காவது அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து வைக்கக் கூடியவிதமாக களஞ்சிய வசதிகள் திருத்தப்பட வேண்டும்.

1990 யூனிலிருந்து 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 4,00,000 பேர் இராணுவ ஆக்கிரமிப்புக்களின் காரணமாக தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

### நான்கு கோரிக்கைகள்

இறுதியாக பின்வரும் கோரிக்கைகளை நாம் முன் வைக்கின்றோம்.

1. சகல பொருளாதாரத் தடைகளும் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, பொருள்கள் கட்டுப்பாடின்றிச் செல்வதற்கு அனுமதிக்க வேண்டும்.
2. பாவனைப் பொருள்கள் அனைத்தினதும் விலைகள் வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரே விதமானதாகப் பேணப்பட வேண்டும்.
3. இடம்பெயர்ந்த குடியிருப்பாளர்கள் தமது இடங்களுக்குத் திரும்பிச் செல்லக் கூடியதாக ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களிலிருந்து பாதுகாப்புப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டும்.
4. விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வெளிப்படுத்தியுள்ள நல்லெண்ணத்திற்கான சமிக்ஞைகள் யுத்த நிறுத்தத்தை உடனடியாகக் கொண்டு வரக்கூடியதாகக் கௌரவிக்கப்பட்டு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்".

இவ்வாறு இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு இவ்வருடம் இல்லை

சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அநேகமாக இவ்வருடம் நடைபெற மாட்டாது என செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக எதிர்வரும் யூன் மாதம் எட்டாம் திகதி உதவி வழங்கும் நாடுகளின் குழுக்கூட்டம் பாரிசில் கூடவிருந்தது. இது பின்னர் காலவரையறையின்றி பின்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உலக வங்கியுடன் சிறீலங்கா அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடே உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிற்போடப்படுவதற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் இப்போது சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இவ்வாண்டு நடைபெறவே மாட்டாது எனத் தெரியவருகிறது. ஆண்டுதோறும் நடைபெறும் இந்த பாரிஸ் கூட்டம் இவ்வாண்டே முதற்தடவையாக நடைபெறாமல் விடுவது குறிப்பிடத்தக்கது. இதனால் சிறீலங்காவிற்கான வெளிநாட்டு நிதியுதவியில் பெரும் வெட்டு விழும் என அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர். கடந்த வருடம் நடைபெற்ற உதவிவழங்கும் நாடுகளின் குழுக்கூட்டத்தில் சிறீலங்கா அரசு கோரிய நிதியுதவியிலும் அதிகமாக 83 கோடி டாலர் நிதி இந்நாடுகளால் வழங்கப்பட்டது தெரிந்ததே. ■

# சிறீலங்காவிற்கு வழங்கும் உதவிகள் குறித்து கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் விசனம்

"சிறீலங்கா அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மிக விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான தயாரிப்பு வேலைகளை மேற்கொண்டு வருவதாக எமக்கு அண்மையில் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் எமது அரசினூடாக வழங்கப்படும் உதவிகள் சிறீலங்காவில் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து எமது நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விசனத்துடன் நோக்குகின்றனர்" இவ்வாறு கனடா நாட்டு அரசாங்கத்தின் சார்பில் இலங்கையின் கனேடியத் தூதுவருக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா நாட்டில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான கனடா அரசின் இணைப்பதிகாரியும் இலங்கையின் இனப்பிரச்சினையில் அதிக ஆர்வம் காட்டுபவருமான திரு. மாக்ஸ் பேகர் கனடா நாட்டு அரசின் சார்பில் இக்கடிதத்தை தமது தூதுவராலயத்திற்கு எழுதியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை அகதிகள் விவகாரம் குறித்தும் கனடா அரசின் சார்பில் சிறீலங்கா ஜனாதிபதிக்கு ஏற்கனவே கடந்த நவம்பர் 6ம் திகதியும், டிசம்பர் 3ம் திகதியும் கடிதம் எழுதப்பட்டது. ஆனால் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களுக்கு சிறீலங்கா அரசின் சார்பில் இதுவரை எந்தப் பதிலும் வழங்கப்படவில்லையென்றும், தாம் இன்னமும் மேற்படி கடிதங்களுக்கான பதிலை எதிர்பார்த்திருப்பதாகவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ■

# நல்லெண்ண அறிக்கைக்கு நல்ல பலாபலன் இல்லை

## அருட்திரு அல்பிரட் அலெக்சாண்டர் அடிகளார்

"சமாதானப்பேச்சு வார்த்தைக்காக இரண்டாம் கட்டமாக கொழும்பு சென்று இங்கு தற்போது நிகழ்ந்தவற்றை மிகவும் தெளிவாக அரசாங்கத்திற்கும் ஏனைய உயர் அதிகாரிகளுக்கும் தெளிவாக விளக்குவேன்" இவ்வாறு விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட இரு யுத்தக் கைதிகளையும் பொறுப்பேற்ற கத்தோலிக்க துறவற சபையின் தலைவர் அருட்திரு அல்பிரட் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாம் இறுதியாக இங்கு வந்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம். அதன் பின்னர் கொழும்பு சென்று பல அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் அரசாங்க தரப்பினருடன் பேசினோம். விசேடமாக சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர் ஜோன் அமரதுங்கா சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா ஆகியோருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம். அதன் பின்னர் ஜெரி டி சில்வா தலைமையில் பலதரப்பினர் கொண்ட ஒரு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் எடுத்த முடிவுகள் பற்றி எமக்கு எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக நாம் மிகவும் மெதுவாகவும் நிதானமாகவும் செல்லவுள்ளோம். எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் நாம் சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்வோம். விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இதுவரை சமாதானத்திற்கான நல்ல சமிக்ஞை காட்டியுள்ளனர். இதனை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அந்த சமிக்ஞைக்கு நல்ல பலாபலன்கள் இதுவரை கிடைக்கவில்லை என்பதே இன்றைய உண்மையான நிலை. இதற்கான சரியான பலாபலன்களை உள்ளூர் கத்தோலிக்க, கிறிஸ்த்தவ அமைப்புக்களால் பெற்றுத் தரமுடியாவிட்டால் வெளிநாட்டமைப்புக்களுடன் தொடர்பு கொண்டாவது பெற்றுத்தர முயற்சிகளை மேற்கொள்வோம். இதற்காக தற்போது பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. அவர்கள் இதுபற்றி தமது முடிவை தெளிவாக எமக்குத் தெரியப்படுத்தவில்லை. நாம் கொழும்பு சென்றதும் ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டை நடத்தி இங்குள்ள நிலமைகளை தெரிவிப்பதுடன் இவர்களை பெற்றோரிடம் ஒப்படைப்போம் என்றார். ■

# நாகதேவன்துறை கடற்படைத் தளம் மீண்டும் அமைக்க அரசு முயலும்

வடபகுதியில் விரைவில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளின்போது யாழ். கடல்நீரேரிப் பகுதியில் சிறீலங்கா கடற்படை மீண்டும் ஆதிக்கம் பெறும் வகையில் நாகதேவன்துறையில் பெரும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என தெரியவருகிறது.

நாகதேவன்துறை கடற்படைத் தளம் அழிக்கப்பட்ட பின்பு இப்பகுதியில் புலிகள் சுலபமாக நடமாடுவதால் இதைத் தடுக்கும் வகையில் நாகதேவன்துறையில் மீண்டும் கடற்படைத் தளம் அமைக்கப்படவேண்டும் எனவும் இதற்காக பாரிய நடவடிக்கை இப்பகுதியில் அநேகமாக நடைபெறலாம் எனவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று கூறுகிறது. ■

# வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள்

பூநகரி வெற்றி, விடுதலைப் போரின் பரிமாணத்தை முற்றிலும் மாற்றியமைத்த வெற்றி.

"தனது பூநகரி முகாமை நாம் தாக்க எண்ணியது எதிரிக்குத் தெரிந்துவிட்டது"

"எமது எண்ணம் எதிரிக்குத் தெரிந்துவிட்டதென்பதும் எமக்கும் தெரியும்"

"தனக்குத் தெரிந்தது தெரிந்தும், நாம் ஏற்பாடுகளைத் தொடர்ந்ததைக் கண்ட எதிரி, தனது நிலைகளை மேலும் பலப்படுத்தியபோதும், நாம் எமது திட்டத்தில் சிறு மாற்றங்கள் செய்தோமே தவிர கைவிட்டுவிடவில்லை.

எல்லாக் கவசமும் அணிந்த 'கோலியாத்' ஆக பூநகரி முகாம் போர்க் கோலம் பூண்டு நின்ற போதும், இறுமாந்திருந்த அரக்கனும் சிறுவனும் போலான போதும் எம்மைக் "குறிதவறாத தாவீதாய்" ஆக்கினர் எமது வேவுவீரர்கள்.

வேவுவீரர்களாகப் பணியாற்ற எல்லோராலும் முடியாது. விடுதலைப் புலிகளிலும் எல்லோராலும் முடியாது. வேவு வீரனின் ஒவ்வொரு நாள் வாழ்வும், வாழ்வுக்கும் -சாவுக்கும் இடையேயான போராட்டம்; அந்தப் போராட்டத்தின் ஒவ்வொரு நகர்வும் -ஒவ்வொரு அசைவும் அவன் உயிர் வாழ்வுக்கான சாத்தியத்தையும் அசாத்தியத்தையும் மட்டுமல்ல, எம் போராட்டத்தில் புத்துயிர்ப்பையும், எம் மக்களின் புது வாழ்வையும் தீர்மானிப்பதாய் அமைந்தன.

வேவுப் பணியில் ஈடுபடுபவர்களின் கடமை தனித்துவமான பல பண்புகளைக் கொண்டது. கடும் உழைப்புக்கு ஈடுகொடுக்கக் கூடிய உடல்வலு உள்ளவர்களாகவும், தொடர்ச்சியான கடுமையான வாழ்க்கை முறைக்கு நின்று பிடிக்கத் தக்க சகிப்புத் தன்மை கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

நிலவில்லாத முழுஇரவில் நட்சத்திரங்களின் வெளிச்சத்தில் இடங்களை அடையாளம் கண்டு, மைல்க் கணக்கான தூரத்தைப் பாதைகளற்ற, பாதுகாப்பானது எனத் தீர்மானிக்கும் பகுதியால் நடந்து கடக்க வேண்டும்.

குறைந்தளவிலான நேரத்தில், முழுஇருட்டில் பார்ப்பவற்றை சரியானபடி விளங்கிக் கொள்ளத் தக்க அவதானிப்புத் திறன் வேண்டும்.

அரைகுறையாகத் தெரிபவற்றை வைத்து முழுமுகாம் அமைப்பையும் மதிப்பிடக் கூடியளவிலான இராணுவ அறிவுடன், திட்டமிடலுக்கான ஆலோசனை வழங்கக் கூடியவாறும், திட்டத்தின் பாதகமான அம்சங்களை வெளிப்படுத்தும் அளவிற்குமான இராணுவ வல்லமை வேண்டும்.

இவ்வளவுடனும் இலட்சியத்துக்காக உயிரைத் துச்சமென செயற்படும் மனப்பக்குவம் வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அடுத்த நாள் வாழ்வுக்கான, அடுத்த மணிநேர வாழ்வுக்கான, அடுத்த கண வாழ்வுக்கான உத்தரவாதம் ஏதுமில்லாது தொடர்ச்சியான மன இறுக்கத்துடனான வாழ்வை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு கொள்கைப் பிடிப்புடன் மன உறுதி கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

என்னதான் கடுமையான வாழ்க்கை எனினும், அதனை இயல்பானதாக எடுத்துக் கொள்ளும் மனப்பக்குவமும், இலட்சியப் பற்றும்தான் அவர்களை இயக்கிக் கொண்டிருந்தன. உயிர்வாழ்வின் கடைசி அத்தியாயத்தை எட்டிப் பார்த்துவிட்டு வந்த அவர்களின் பேச்சில் தொனிக்கும் நம்பிக்கை மட்டுமல்ல - நகைச்சுவையும் அலாதியானது!

இப்படித்தான் ஒருமுறை எதிரி முகாமின் ஒரு பகுதியில் வேவு வேலையில் ஈடுபட்டிருந்தான் ஒரு போராளி. ஒரு பகுதியில் எதிரி கண்டு விட்டு அடிக்கத் தொடங்க, அதில் சுட்டுத் தப்பி வேறொரு பகுதிக்கு ஓடிப் போய்ச் சேர அங்கும் எதிரி கண்டு சுடத் தொடங்க...... அவற்றுக்குள்ளால் மீண்டு வந்து அடுத்த நாள் அதைப் பற்றிக் கதைக்கும்போது;

"அப்பா அடிக்கிறார் என்று அம்மாட்டை ஓடினால், அம்மாவும் அடிச்சா எப்படியிருக்கும்? அப்படி இருந்தது" என்றவன், பல தடவை எதிரி முகாமுள்ளே அடிபட்டுத் தப்பி வந்து சேர்ந்தவன், ஒருமுறை வரமுடியவில்லை; வரவில்லை.

அவ் வேவு வீரர்களிடம் இருந்த பொறுப்புணர்வு அற்புதமானது. குறிப்பிட்ட இராணுவ நிலை மீதான தாக்குதலைச் செய்வதற்கான அணியினரை அழைத்துச் செல்லும் பொறுப்பு தெரிந்தெடுத்த ஓரிரு வேவுக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுவிடும்.

அதன் பின்னர் அவனது சிந்தனை எல்லாம் குறிப்பிட்ட அணியினரின் வெற்றி, மற்றும் வெற்றிக்கான பாதை திறப்பு என்ற வட்டத்தினுள் வந்துவிடும்.

'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கைக்காகத்தான் முதன் முதலில் எமது மகளிர் அணியினர் வேவு வேலையில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் அனுபவம் மிக்க ஆண் போராளிகளின் வழிகாட்டலில் செயற்பட்ட அவர்கள், ஒரு கட்டத்தில் "ஏன் நாம் தனித்துச் செயற்படக்கூடாது" எனக் குரலெழுப்பி, 'மௌனமாய்ச் சிரித்த தலைவருடன் சண்டை போட்டு' தனியான வேவு அணியினராக செயற்பட்டதுடன், தாக்குதலில் ஈடுபட்ட ஆண்போராளிகளுக்கான வழி காட்டிச் செல்லும் பொறுப்பையும் திறம்படச் செய்தனர்.

"அந்தப் பிள்ளையள் இல்லை எண்டா அங்கால் பக்கத்தாலை சரியாகக் கஸ்டப்பட்டிருப்பம்" என்று, அவ்வணியின் தளபதி மனமாரச் சொல்லும் வண்ணம் திறம்படச் செய்தனர்.

பூநகரிச் சமரில் எமது மகளிர் அணியின் வேவுப் பிரிவினர் நால்வர் வீரச்சாவடைந்தனர்.

சம நேரத்தில் பலமுனைகளில் தாக்குதல் திட்டமிடப்பட்டதால், எல்லாமுனைகளிலிருந்தும் ஒரேயடியாக வேவு நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

ஏதாவது ஒரு பகுதியில் அனுபவக் குறைவினாலோ, திறமைக் குறைவினாலோ வேலைகள் அரைகுறையாக இருக்கும். அல்லது தேவைகளை பூரணப்படுத்தவென உள்ளே சென்ற வேவு வீரன் திரும்பி வராமலேயே மடிந்துவிட்டிருப்பான்.

அந்த வேளையில் தனது வேலையைத் திறமையாக நிறைவு செய்து காத்திருப்பவனிடம் பொறுப்புக் கைமாறும்.

தான் பார்த்த எல்லா நிலைமைகளையும் புதிதாய் ஒருவனுக்கு ஒவ்வொன்றாகக் காட்டிவிட்டு, தனது புதிய பகுதியை நோக்கி நடப்பான் அந்தப் புலி வீரன்.

சில அணிகள் ஓரிரு வேவு வழிகாட்டிகளின் வழிகாட்டலிலேயே நீண்ட தூர நகர்வினை மேற்கொள்ள வேண்டியிருக்கும் போதுதான், அவன் தனது பாதுகாப்பைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பிப்பான்.

வேவு வீரன் ஒருவனுக்கு மைன்ஸ் வெடித்து கால் இல்லையென்றால்? என்ற கேள்விக்கு, "துண்டுபட்ட காலை இறுக்கிக் கட்டிவிட்டு என்னைத் தூக்கினால் நான் காட்டிச் செல்வேன்" என உறுதியாகப் பதிலளித்தான் அந்த வேவு வீரன்.

மிகக் குறைந்த ஓய்வுடன் தொடர்ச்சியான பணியில் ஈடுபடும் வாழ்வில், தொடர்ந்து பல நாட்களுக்கு நல்ல உணவோ ஆறுதலான தூக்கமோ அவர்களுக்கு வாய்ப்பதில்லை.

• • • • •

கையையும், காலையும் எறிந்துவிட்டு அவர்கள் படுத்திருப்பதைப் பார்த்தால் பாவமாய்த்தான் இருக்கும்!

இராத்திரி வேலை முடிந்து திரும்பி வந்து, 'மைப் வேலை' எல்லாம் முடித்து படுக்க நேரம் எப்படியும் பத்துப் பதினொரு மணியாகிப் போயிருக்கும்.

எழும்பத்தான் வேண்டும், இப்ப எழும்பினாத்தான் நேரம் சரியாக வரும். எழும்பி எல்லா வேலையையும் முடித்து முதல் பார்த்ததில் உள்ள சந்தேகங்கள் எவை எனவும், புதிதாய்ப் பார்க்க வேண்டியவை எவை எனவும் கேட்டு முடித்துவிட்டுப் புறப்படும்போது, அநேகமாகச் சூரியன் பூநகரிக்குப் பின்னால் மண்டைதீவுக்குள்ளே மறைந்து கொண்டிருப்பான்.

மெதுவாய்ச் சத்தமின்றி நகர வேண்டும். நிலையாய் நிற்பதற்கும், நகர்வதற்கும் இடையே வித்தியாசம் காணமுடியாதபடியான மெதுவான நகர்வு; சிறுதவறு அவனையும் தோழர்களையும் ஆபத்துக்குள்ளாக்கும்; அழித்துவிடும்.

முகாமின் வெளிக் காவலரண் வேலியை ஊடறுத்துச் செல்வது என்பது மிகவும் கடினமான பணி. ஒன்றன் பின் ஒன்றாக முட்கம்பிச் சுருள்களும் -நிலத்தின் மேல் அரையடி உயரமாய் முட்கம்பி வலைப் பின்னலும் - காலை வைத்தால் எடுக்க முடியாது.

இதைவிட ஒவ்வொரு அடி வைக்கும்போதும் -அந்த இடமும் கண்ணி வெடியாய் இருக்கலாம். படுத்திருந்து அங்குலம் அங்குலமாகக் கண்ணிவெடியைப் பரீட்சித்தபடி நகர வேண்டும்.

இராணுவ முகாமைச் சுற்றிய எல்லாப் பகுதியும் கண்ணிவெடிகளால் சூழப்பட்டிருக்கும் என்பது சாதாரண விடயம்தான். ஆனால் நிலவில்லாத முழு இரவில் சத்தம் ஏதுமின்றி இரகசியமாய், கண்ணிகளின் ஊடே ஊர்ந்து செல்வது என்பது, அதுவும் இயந்திரத் துப்பாக்கியுடனும், பளீரென மின்னும் ஒளி விளக்குகளுடனும் காத்திருக்கும் எதிரிக்கு முன்னே நகர்ந்து செல்வது என்பது சாதாரண விடயமல்ல.

படுத்திருந்து மெதுவாய் கையாலே தொட்டுணர்ந்து, கண்ணிவெடியென நினைத்தெடுப்பது கல்லாய் இருக்கும்; கல்லென நினைத்து கவனமின்றி எடுக்க அது கண்ணிவெடியாய் இருந்து தொலைக்கும்.



எமது மூத்த தளபதி பொட்டு அவர்கள், 'ஒப்பரேசன் தவளை' தாக்குதல் வழிமுறையை களமுனைத் தளபதிகளுக்கு விளக்குகின்றார்.

வேவு வீரர்களுக்கு கண்ணி வெடி வெடிப்பது காலில் மட்டுமல்ல.

இப்படித்தான் ஒருமுறை கம்பிச் சுருள்களுக்கிடையில் எதிரியின் மைன்ஸ் ஒன்று வெடிக்கிறது. வெளிச்சத்தில் தேடிய எதிரி முன்னேற முற்பட்டபோது அழைத்துச் சென்ற பெண் போராளியை பத்திரமாய் அனுப்பிவிட்டு, குப்பியைக் கடித்தான் ஒரு போராளி.

இருளின் கவசத்தில் நகரும் புலியின் முன்னே, எதிரி ரவையை மழைபோலப் பொழியத் தயாரான இயந்திரத் துப்பாக்கியுடன் ...... பளீரென கண்ணைப் பறிக்கும் ஒளியைப் பாய்ச்சித் தேடுவான்.

எதிரியின் ஒவ்வொரு காவலரணிலும் பிரகாசமான சிறு சிறு லைற்கள் இருந்தபோதிலும், முழு முகாமையும் சுற்றி இடையிடையே பெரியதும் பிரகாசமானதுமான லைற்களால் அடிக்கடி சுற்றி சல்லடை போட்டுத் தேடி அவதானிப்பான் எதிரி. அவற்றைவிடத் தனியாக 'ஓரிடத்திலிருந்து மறு இடத்திற்கு' நகர்ந்து கொண்டிருக்கும் சென்றிக்காரன் தனது பங்கிற்கும் எல்லா லைற்றுக்களாலும் தேடியபடி போவான்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நாகதேவன்துறையில் ஒன்றும், ஆலடிச் சந்தியில் மற்றதுமாய் 'பெரிய அரக்கனின் சூரியக் கண்கள் போல்' சூழலும் இரண்டு பெரிய தேடொளிகள்.

யாழ் குடாவின் மற்றக் கரையில் இரவுப் பயிற்சியில் கள்ளமடிக்கும் பெடியளை றெயினிங் மாஸ்டரிடம் பிடித்துக் கொடுக்கவல்ல பிரகாசமான அந்தச் சூரியக் கண்கள் திறக்கும்போது அங்குள்ள முழு நிலமும் பகலாகும். இருளின் கவசம் அகன்று பறக்கும்.

ஒரு சாதகமான பாதையைக் கண்டுபிடிக்க வாரக்கணக்காகப் போராட வேண்டும். நகரும் பாதையில் மனித நடமாட்டத்திற்கான எந்தத் தடயத்தையும் விட்டு விடக்கூடாது. வாரக் கணக்கில் போராடிக் கண்டுபிடித்த பாதையில் ஒரு சிறு தடயத்தை விட்டாலும் எதிரி உசாராகிவிடுவான்; அந்தப் பாதை அடைபட்டுவிடும். அங்கே ஒரு எல். எம். ஜியோ, ஜீ. பி. எம், - ஜீயோ பதிதாக முளைத்துவிடும்.

கும்மென்ற இருட்டில், அவர்களுக்கு மட்டும் தெரிந்த குறிப்புக்களைப் பார்த்து, மணிக்கணக்காக நடக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரியத்தக்க எந்த அடையாளத்தையும் வைக்காது, மரத்தையும் மண்ணையும் புல்லையும் அடையாளப்படுத்தி நடக்க திறமை வேண்டும்.

எதிரி எங்கும் நிற்கலாம் - இரவின் முழு இருட்டை ஊடறுத்து நகர்பவனைக் காட்டும் 'நைற் விசன்' என்னும் இரவுப் பார்வைச் சாதனங்களுடன், ஆங்காங்கே சிறு குழுவாக எம்மவரை எதிர்கொண்டு காத்திருப்பான் எதிரி.

இருட்டுக் கவசத்தில் செல்லும் புலிவீரரை நோக்கி துப்பாக்கி அதிரும்.

எதிர்பாராத வேளையில், எதிர்பாராத திசையிலிருந்து ரவை மழையாய்ப் பொழியும்; படுத்திருந்த அரக்கன் எழுந்துவிட்டது போல் தூங்கிக் கிடந்த எதிரி முகாம் உயிர் பெறும்.

எல்லாப் பொயின்றுகளிலிருந்தும் துப்பாக்கிகள் இயங்கத் தொடங்

**தொடர்ச்சி 5ம் பக்கம் ....**

# வெற்றிக்கு வித்திட்ட வேங்கைகள்..

கும்போது, ஆள் இல்லை என்ற பொயின்றில் இருந்தும் எல்.-எம். ஜி. சடசடக்கும்.

"நல்லவேளை டம்மிப் பொயின்ற் என்று குறூப்பைக் கொண்டு போயிருந்தால், நல்ல குடுவை குடுத்திருப்பான்" என நினைத்தபடி ஓடிக்கொண்டிருக்கையில், பரா லைற் வெளிச்சம் போதாதென்று போக்கஸ்" லைற்றும் அடிக்கத் தொடங்கியிருப்பான்.

க்கியூ, க்கியூ என்று தலைக்கு மேலாலும், பக்கத்தாலும் காற்றைக் கிழித்துச் செல்லும் ரவகளுக்கிடையே ஓடி வந்து பார்த்தால் சகதோழனை காணவில்லை.

பயிற்சி முகாமில் கண்டது முதல் இன்று வரை -இதோ இப்போது வரை -ஒன்றாய் வாழ்ந்த நண்பன், ஒரே கோப்பையில் உண்டு, பாயில்லாமல் ஒரு பற்றையில் உறங்கி ஒன்றாய் வாழ்ந்த நண்பனைக் காணவில்லை.......

இது எம் நிலம்தான். ஆனால், எதிரி முகாமின் உள்ளேயே.... "உனக்கு காயம் பட்டுவிட்டதா? எங்கேயடா நிக்கிறாய் என் தோழனே..." என்று குரல் வைத்துக் கூப்பிடமுடியாது, காத்திருந்து பார்க்கும் வேளை கொடுமையானது.

இன்னொரு வேளை "நீங்கள் இதில் நில்லுங்கள்; நான் உள்ளே போய்க் கிளியர் பண்ணிக் கூப்பிடுகிறேன்" என்று சொல்லிப் போவான் ஒரு தோழன்.

மரத்துடன் மரமாய், பற்றையுடன் பற்றையாய், புல்லுடன் புல்லாய், நிலத்துடன் நிலமாய், நீருடன் நீராய்க் கலந்து மணிக்கணக்காக, நாட்கணக்காக காத்திருந்து பார்த்திருந்து மீளும் வேவு வீரனை எண்ணித் தோழர்கள் காத்திருப்பார்கள் -வெளியே.

'என்ன இன்னும் காணவில்லை' என நினைத்திருக்கும் வேளை, உள்ளே போனவன் வந்ததும் உண்டு; வராமலே விட்டதும் உண்டு.

தனிமையில் தன்னையும், கையில் உள்ள ஆயுதத்தையும், கழுத்திலே உள்ள குப்பியையும் நம்பி ஆயிரம் பகைவன் உள்ள எதிரிப் பாசறைக்குள் தன்னந்தனியாய் நுழையும் வேவு வீரனின் எண்ணங்கள், எங்கெங்கோ ஓடும். நீரில் மூழ்கி, மழையில் தோய்ந்து, ஈரத்தில் ஊறி எல்லாம் ஈரமாய் நடக்கும் வேளை, அரப்பு வைத்து முழுகவிட்டு ஈரம் துடைத்து தலைக்குப் பவுடரும் போட்டுத் தோய்த்துக் காயவிட்டு "சாப்பிட்டா மோனை" என்று கொஞ்சும் அம்மா..... நினைவுக்கு வராமலா போவாள்!

உடலெல்லாம் நுளம்பு மொய்த்து கண், காது, மூக்கு என எங்கும் கடித்துத் தின்ன, கலைக்கவும் மாட்டாது குளிரில் நடுநடுங்கி, வாடும்வேளை, சும்மா படுத்திருந்ததைக் கண்டு போர்வையால் மெல்லப் போர்த்து அன்பாய்த் தடவிப் போகும் அப்பா.... நினைவுக்கு வராமலா போவார்?

அதற்கும் மேலாய், எல்லாவற்றிற்கும் மேலாய் இது எங்களின் நாடு, எம்மக்களின் பூமி என்ற நினைவு மேலோங்கும்.

கடுமையான பயிற்சியும், கடினமான முயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை என அடிக்கடி உரைக்கும் தலைவனின் நினைவும் மேலோங்கும்.

"நீ இதில் நில், நான் உள்ளே போறேன்; வெடிச்சத்தம் கேட்டால் நீ திரும்பிப் போ -நான் வருவேன்" என்று கூறிவிட்டுச் சென்று, வராமலே போய்விட்ட உயிர்த்தோழன் நினைவுக்கு வருவான்.

மெல்ல நகர்கையில் தடக்கி விழுத்திய வயலின் வரம்பு, 'இப்ப முதல் உழவு உழுதிருக்க வேணும்....' என்ற நினைப்பில் அவனை ஆழ்த்தும்.

சுதந்திரமாய் நீந்திக் குளித்த குளமும், ஏறிக்குதித்த மாமரமும் இன்று பகைவனின் பாசறையாய் ஆனதை எண்ணி நெஞ்சு கனக்கும்.

*  *  *  **

எங்களது தாய் மண்ணைப் போலவே அழகான யாழ்ப்பாணக் கடலேரி! அழகான அந்தக் கடலேரியின் உள்ளேதான் எத்தனை கொடுமையும் துயரமும்?

நேரம் நீண்டு செல்லும், தண்ணீரில் நடந்தும், மிதந்தும், வலித்தும் செல்லும் வேவு வீரனின் எண்ணங்கள் எங்கெங்கோ சுற்றும்.



'ஒப்பறேசன் தவளை' தாக்குதலின் போது காயமடைந்த வீரர்களை, கடல்வழியாக எடுத்துச் செல்லும் கடற்புலி வீரர்கள்.

கத்தியுடன் வந்த பகைவனைப் பார்த்துக் கும்பிட்ட அந்த அம்மா "என் அம்மாவைப் போலோரு அம்மா" -வெட்டுண்ட தலையுடன் இந்தத் தண்ணீரில்தானே மிதந்தாள்?

முத்தமிட்டு 'டாட்டா' காட்டிய சின்னவள் சொன்ன பொம்மையுடன் வந்த அப்பா -"என் அப்பாவைப் போலோரு அப்பா" -இந்தத் தண்ணீரில்தானே மிதந்தார்? "அப்பா எப்ப பொம்மையுடன் வருவார்?" என்ற பிள்ளையுடன் அம்மா கண்ணீரில் குளித்திருந்தபோது, அப்பா இந்தத் தண்ணீரில்தானே கரைந்தார்?

எங்களது சொந்தங்களும் உறவுகளும் கலந்து கரைந்த உப்புநீர், எம்மக்களின் குருதி கலந்த நீர்; குருதியுடன் உயிரும் கலந்த நீர், எம்மக்களின் குருதியும் உயிரும் கலந்ததாலோ அந்தத் தண்ணீரில் நனைகையில் புதிய உணர்வு பிறக்கிறது!

"மேனியைத் தழுவும் தண்ணீரைத் தடவி, வாயில் எடுத்து மெதுவாய் உமிழும்போது .... உப்புக் கரிக்காது."

யாழ். நீரேரிக்கும் எம் வேவு வீரர்களுக்கும் இடையேயான உறவு ஆழமானது. அன்பு கொள்வதும் கோபப்படுவதுமாய் அவர்களின் நட்பில் பல கதைகள்......

மாலை மென்னிருட்டில், தூரத்தே தெரியும் வெளிச்சத்தைப் பார்த்தபடி இடுப்பளவு தண்ணீரில் நடக்கத் தொடங்கும் போது, அந்தக் கடல் மகள்.....

எங்கள் யாழ்ப்பாண நீர்நங்கை அற்புதமான அழகிதான்!

கூட்டமாய்த துள்ளும் திரளியும், வரிசையாய்ப் பறக்கும் கொக்குகளுமாய் அழகை ரசித்தபடி நடக்கையில், வழிமாறி வந்த பெரிய மீன் ஒன்று காலில் இடற, என்னவோ ஏதோ என்று பாய்ந்து விழுபவனை எல்லோருமாய்ச் சேர்ந்து தாட்டு மிதத்தி,.......

'றெக்கி' வேலை முடிந்து பசியும் களைப்புமாய் உடல் சோர்ந்து, அதிகாலையில் பிறை நிலவைப் பார்த்தபடி திரும்புகையில், அவன் பேசாமல்தான் வருவான்.

என்னில் என்ன கோபமோ என்று, கடல் மகள் மெல்லக் குமுறி ஆர்ப்பரிக்க, இடுப்பளவாய் இருந்த நீர்மட்டம் மேலேறி, மேலே மேலே ஏறி, நுனிக்காலுக்கும் எட்டாய்த் தண்ணீராய் மேலெழுந்து நிற்கையில், கடலின் மகளின் காதல் போய் எம்வீரர் தத்தளிக்கத் தொடங்குவர்.

முகாம் வேவுப் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்து கொண்டு திரும்பி வந்த எம் வேவு அணியினர், கடலில் தம் தோழனை இழந்த சோகத்துடன், கடல் மகள் மேல் கோபத்துடன் மீண்டதும் உண்டு.

பௌர்ணமியும் அமாவாசையும், நிலவின் உதயமும், மறைவும் கடல்நீரேரியில் நிகழ்த்தும் மாற்றம் அற்புதமானது.

நிலவின் உதயத்தில் அமைதியாய் இருக்கும் கடலேரி, நேரம் செல்லச் செல்ல, பெருங்கடலில் இருந்து மெதுவாக உள்ளே வரத் தொடங்கும் நீரோட்டம்.

ஆளை இழுக்கும் வேகம் பெற்று -உச்ச வேகம் பெற்று, நீர்மட்டம் உயர்ந்து மெதுவாய்த் தணியும்.

பின்னர் நிலவு மறையத் தொடங்க கொஞ்சம் கொஞ்சமாய் கடலுக்குத் திரும்பும் தண்ணீர் வேகம் பெற்று, உச்ச வேகம் பெற்றுத் தணிந்து, நிலவின் அடுத்த உதயத்தைப் பார்த்துத் தணிந்திருக்கும் நீரோட்டம்.

பூமிக்கும் சந்திரனுக்கும் இடையேயான ஈர்ப்பு விசையானது, நீர்மட்டத்திலும், நீரோட்டத்திலும் ஏற்படுத்தும் ஜாலத்தைத் துல்லியமாக ரசிக்கலாம் யாழ் கடலேரியில்.

இந்நீரேரி புலிவீரர்களுடன் மட்டுமல்ல, எம் தாயகத்தின் நிலத்துடன் மட்டுமல்ல, எம் இனத்தின் நீண்ட வரலாற்றுடனும் பின்னிப் பிணைந்தது.

நீண்ட வரலாற்றின் பல்வேறு காலங்களில், அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டது எமது மண். போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் ஆக்கிரமித்ததும், பின்னர் அதிகார மாற்றம் ஏற்பட்டு ஈழத்தமிழர் சிங்களவர்களின் அடிமையாய் கைமாற்றமானதும், தொடர்ந்தும் தமிழர்கள் அடிமைகளாய் இருக்க மறுத்துப் போராடியதால் சிங்களவர் தமது அதிகாரத்தை இந்தியர்களிடம் கைமாற்றிக் கொடுத்ததும், இந்தியர்கள் சிங்களவர்களிடமே அதிகாரத்தை கொடுத்துவிட்டுப் போய் சேர்ந்ததும் என, தமிழீழ மக்கள் மீதான ஆக்கிரமிப்பு நீண்ட பெரும் தொடர்வரலாறு.

போர்த்துக்கீசர் கையில் யாழ்ப்பாணமும், ஒல்லாந்தர் கையில் கொழும்புடன் பிறபகுதிகளுமாகப் பிடிபட்டிருந்ததாம். போர்த்துக்கீசர் கையிலிருந்த யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வந்து மன்னாரில் தரித்திருந்த ஒல்லாந்துப் படை, அடம்பன் வழியாக பூநகரி வந்து, பூநகரியிலிருந்து இந்த 'யாழ் நீரேரி'யூடாகச் சாவகச்சேரி வந்து, பின்பக்கத்தால் போர்த்துக் கீசரை மோதி அழித்து, யாழ்ப்பாணத்தைப் பிடித்து, தமிழர் மீதான அடிமைக் கைமாற்றம் நிகழ்ந்ததாம்.

எம்மை அடிமைகொள்ள வந்த அந்நியப்படை நடந்த அதே நீரேரியில், எம்மக்களை விடுவிக்க இன்று எம் வேவு வீரர்கள் நடக்கிறார்கள்.

எம்மை அடிமைகொள்ள வந்த பகைவன் நடந்த பாதையில், எம் நாடு எமக்கே சொந்தம் என்ற இறுமாப்புடன் எம் வீரர்கள் நடப்பது கண்டு, யாழ் நீர் நங்கை சிரிக்கிறாள்.

அன்று பகைவனைப் பார்த்து அஞ்சி ஒடுங்கி, அழுது நடுநடுங்கி வாழ்ந்த எம் பெண்டிரின் பேத்தியின் பேத்திகள், இன்று நிமிர்ந்த நெஞ்சுடன் வேவுப் புலி வீரராய்ப் பகைவனைத் தேடிப் புறப்படும் காட்சி கண்டு, யாழ் நங்கை சிரிக்கிறாளோ!

அந்த யாழ். நீர்நங்கை எல்லாம் அறிந்தவள். பகைவனின் கரையில் ஏறிய புலிகளில் எதிரியின் துப்பாக்கி தீ உமிழ்ந்ததும், பக்கம் ஒருவராய் நீரில் வீழ்ந்து சரிந்த எம் வீரரில் ஒருவனுடல் பகைவன் கையில் வீழ்ந்ததும்.

"அது எது"வென நெருங்கிய எம் மீனவர், "ஐயோ எம்பிள்ளை" எனத் துடித்துத் தூக்கியதும் இந்தக் கடல்மகள் அறிவாள்.

தூரத்தே எதிரி சுடும் சத்தம் கேட்டு, அது எதற்கோ....? எம்மவரைக் கண்டு சுட்டானோ...? போன எம் தோழன் வீழ்ந்துவிட்டானோ....? எனக் கலங்கிக் காத்திருந்து, காலைவரை காத்திருந்து.....

மிதந்துவந்த தோழனை அள்ளி எடுத்தழுததும், மீண்டு வந்த தோழனை அணைத்து ஆடி மகிழ்ந்ததும், இந்தக் கடல்மகள் அறிவாள்.

வெற்றிலைக்கேணி, வளலாய், மண்கிண்டிமலை, பூநகரி என எம் ஒவ்வொரு வெற்றிக்கும் வித்திட்டவர்கள் எம் வேவு வீரர்கள்.

எம் தாயகத்தைச் சிதைத்தழிப்போம் எனச் சபதமிட்டு, யாழ் நகரைப் பிடிக்கவெனத் திட்டமிட்டுச் செயற்படுத்த முனைந்த வடபகுதியின் படைத்துறைத் தலைமையை, அராலியில் வைத்து அழித்தொழித்தவர்கள் எம் வேவு வீரர்களே.

குறிப்பாக தமிழீழ நாட்டின் பெருவெற்றியாய் அமைந்த 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையில் வேவு வீரர்களின் பங்கு மகத்தானது.

வெற்றிலைக்கேணி வெற்றிக்கு வித்திட்ட சிவாஜி,

மண்கிண்டி மலையின் வரலாற்றுக்கு வழிகாட்டிய றொகான், ரமணன், பனம்பாரன்,

பதவியா கொங்கேவேயவின் வெற்றிச் சிற்பிகள் மழலேஸ், நித்தி,

பூநகரி கேணல் மீதான கண்ணிவெடிக்கு தர்மேந்திராவுடன் கண்ணிவெடி சுமந்த குருவேல் என்று, பூநகரி வெற்றிக்கு வித்தான வேங்கைகள் பற்பலர்.

அவர்களது முயற்சியால்; அர்ப்பணிப்பால் இன்று எம் தாயகம் வெற்றிக் களிப்பில் மிதக்கிறது.

வீழ்ந்த வேங்கைகளின் தோழர்கள் தம்புதிய இலக்குகளை நோக்கி, அதே இருளின் கவசத்தில், அதே தேடொளிக்கு மறைந்து நகர்கிறார்கள். இலக்கு புதியது, கையில் உள்ள ஆயுதம் புதியது, அவர்களது அனுபவமும் புதியது.

ஆனால் நினைவில் மட்டும் அவர்களது அதே தோழர்களும், அதே இலட்சியமும்தான்! ■

■ பொட்டு

## அன்றும் இன்றும்

அன்று - 'பெண்பிள்ளை சிரிச்சாப் போச்சு' என்பது முதுமொழி!

அப்பாடா! அதன்பின் எவ்வளவு மாற்றங்கள்! உடைத்தெறிப்புக்கள்! சாதனையிற் சாதனைகள்! கடந்த 11-11-1993 ஆம் தேதி இரவு பூநகரி நாகதேவன்துறையில் எதிரியின் அரண்களை அழித்துவிட்டு. அங்கு அதிகாலை காவற்பணியில் அணியாக நிற்கின்றனர் பெண் போராளிகள்.

ஒரு அபிமானப் பொதுமகன் வருகிறார். நடுவயதைத் தாண்டியவர். பெண் போராளிகளை வியந்து பார்க்கிறார்.

"நல்லது. நீங்கள் காவல் செய்கிறீர்களா? அதுசரி. இரவு ஆமிக்காரன்களை அடிச்சு விரட்டிய உங்க அண்ணாமார் எங்கை. பிள்ளையள்?" என்று வினவுகிறார்.

"ஐயா. இரவு அவர்களை அடிச்சு விரட்டியதும் நாங்கள்தான்!"

"என்ன? இரவு அவன்களை அடிச்சு விரட்டியதும் நீங்களோ? பெண்பிள்ளைகளோ?"

நம்புவது கடினம்தான்! அந்த அன்பரின் புருவங்கள் வியப்பால் மேலேறுகின்றன. அதில். பழைய கருத்துக்கள் 'அன்றாகி' அழிந்து மறைகின்றன! புதுயுகமாகிய 'இன்று' பிறக்கின்றது!



# போராளியின் குருதிச்சுவடுகள்

சரா..., சரா...

அவனது முகத்தை கடைசியாக ஒரு தரம் பார்க்க வேண்டும். எனக்கு இதயம் வெடித்து விடும் போல இருந்தது.

எங்கள் போராளிகளின் உடல்கள் துப்பரவு செய்யும் இடம்.

"சராவின் உடல் வந்து விட்டதா"? என்னை மாதிரிப் பலர் கேட்டுக்கொண்டு நின்றார்கள். உள்ளே போனேன். வீரமரணமடைந்த எமது போராளிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரின் முகங்களாக நான் தடவினேன். எனக்குப் பழக்கமான சராவின் முகத்தைக் காணவே இல்லை. ஆனால் அந்தத் தோழர்களின் முகங்களும் எனக்குப் பல கதைகளைச் சொல்லின.

பதினைந்து வயதிருக்கும், சற்று நிறமான சுருள் சுருளான தலைமயிருடன் ஒரு போராளி முகம் வாடிக் கிடந்தான். அவனது உயிரை அழைத்துச் சென்ற விமானக் குண்டு வயிற்றை ஆழமாகச் சிதைத்திருந்தது.

அவனைக் கடந்ததும், சின்னப் போராளி ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். கால் ஒன்று தொடையில் ஆழமாகப் பிய்ந்திருந்தது. உடலைக் குறுக்காகவும் ஒரு ரவை துளைத்திருந்தது. உயிர்பிரியும் போது இருந்த வேதனை அந்தச் சின்ன முகத்தில் படிந்து போய்க் கிடந்தது.

அடுத்ததாக ஒரு போராளி, சப்பாத்துக்கூட கழட்டாமல் கிடந்தான். சீருடைகூட ஒழுங்காக இருந்தது. அவன் எப்படி மரணித்தான்? முகத்தைத் திருப்பினேன்.

முகத்தின் ஒரு பக்கம் கோறையாக இருந்தது.

இப்படிப் பல போராளிகள்...

இவர்களில் சிலரை சராவின் பயிற்சி முகாமில் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில், வேகமாகச் செல்லும் வாகனமொன்றிற்குள் சிரித்தபடி செல்வதைக் கண்டிருக்கிறேன். அந்த தோழர்கள் தான் இன்று இப்படி...

இந்த மரணங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு தான், இவர்கள் துப்பாக்கிகளைத் தொட்டார்கள். போர் முனைகளிற்கு வெளிக்கிடும் போதும், வழியிலும், எதிரியை எதிர்த்து நின்று போராடும் பொழுதும் தமது மரணத்தைப் பற்றி இவர்கள் உணர்ந்துதான் இருந்தார்கள்.

ஆனாலும், இந்த இளவீரர்கள் உறுதியாக நின்று போராடினார்கள். இவர்களின் நெஞ்சங்களில் இருந்ததெல்லாம் விடுதலை என்ற உணர்வு ஒன்றேதான். தன்னை இழந்து சுதந்திரத்திற்காகப் போராடும் மன வன்மையை இவர்களுக்குத் தந்தது நம்பிக்கைதான். தலைவர் மீது கொண்ட நம்பிக்கை -தங்கள் இலட்சியம் நிச்சயம் வெல்லப்படும் என்ற நம்பிக்கை, இவை தான் இந்த இளைஞர்களை மலை போன்ற மாவீரர்களாய் மாற்றி நிற்கிறது.

அந்த இடத்தின் ஒரு ஓரமாக, சிலர் ஒவ்வொரு உடலாக துப்பரவு செய்து கொண்டிருந்தார்கள். அந்த மனிதர்களின் முகங்கள் சோகமாக இருந்தன. அலங்கோலமாகக் கிடந்த போராளிகளின் உடல்களை ஒழுங்குபடுத்தி அடிமனதின் விருப்பத்தோடு உயிர் கொடுக்க அவர்கள் முயன்று கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே எடுத்து வைத்த சவப்பெட்டிகளில் அளவுக்கு ஏற்ற மாதிரி அந்தப் போராளிகள் கிடத்தப்பட்டார்கள்.

சராவின் உடல் வரவே இல்லை.

ஒரு மண் வீதியால் விழுந்து கடற்கரையில் ஏறுகின்றேன். அந்தச் சிறுகடல் கோபத்தில் அலைகளை அள்ளி வீசமுடியாமல் தவித்து தளதளத்துக் கொண்டிருந்தது. இந்த வீதியால், இந்தக் கடலைப் பார்த்துக் கொண்டு தான் சரா அடிக்கடி போவது வழமை. என்னையும் இந்த வீதியால், சில தடவைகள் அவன் நடாத்திய பயிற்சி முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தான்.

இன்று, இந்தக் கடல், மக்கள், குன்றும் குழியுமாக இருக்கும் வீதி எல்லோருமே அவனை. இறுதியாக ஒரு தரம் பார்க்க ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வானம் இருண்டு திட்டுத் திட்டாகக் காணப்பட்டது. கருமேகங்கள் எங்கேயோ வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தன. அதில் சராவை மாதிரியே ஒரு மேகம். அவனது கறுப்பு, அவனுடன் இருக்கும் சாதுவான தாடி, பழகும் போது வீசும் குளிர்மை...

அந்த மேகம் எனக்குக் கதை சொல்லத் தொடங்கியது.

நாங்கள் வெப்பமான மலைகளிற்குக் கீழ் வாழ்ந்த இனிமையான காலம். எமது பயிற்சி முகாமிற்கு சரா ஜேர்மனியிலிருந்து வந்திருந்தான். அந்த பயிற்சி முகாமின் வெப்பமான சூழ்நிலை -கடுமையான பயிற்சி எல்லாமாகச் சேர்ந்து அவனது வெளிநாட்டுத் தோற்றத்தை இலகுவாக மாற்றி ஒரு கிராமப்புறத் தோற்றத்தைத் தந்துவிட்டது.

பொதுவாக பயிற்சி முகாம்களில் சிலர் மட்டும் தான் எல்லோராலும் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடம் ஏதோ ஒரு திறமை. அது நடிப்பாகவோ, விளையாட்டாகவோ இருக்கும். அப்படி எல்லோராலும் அறியப்பட்டவர்களில் சராவும் ஒருவன்.

குளப்படி தான் அவனது திறமை.

எங்கள் பயிற்சி முகாமின் பொறுப்பாளர் பொன்னம்மானின் கண்கள் எப்போதும் சராவைத் தான் சுற்றும். குளப்படிகளைச் செய்துவிட்டு அவன் தப்பி விடுவான் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

அந்தப் பயிற்சி முகாமின் இனிமையான கலகலப்புக்கு காரணங்களில் சராவும் ஒருவன். பயிற்சி முடிந்தபின் நாங்கள் சிலர் முதன் முதலில் முகாமிலிருந்து பிரிந்து சென்றோம். அந்தச் சின்னப் பிரிவைத் தாங்க முடியாமல் எல்லோருமே இயலுமட்டும் அழுது தீர்த்தோம். அப்போது நான் சராவைப் பார்த்தேன். கலங்கிய கண்களுடன் அவன் எனக்கு விடை தந்தான். அதன் பின்பு மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின்தான் சராவைப் பார்த்தேன். ஜி. 3 துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தான். அவனது உயர்ந்த கம்பீரமான தோற்றத்திற்கு அது பொருத்தமாக இருந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் தான் செய்தவற்றைச் சொன்னான். யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலிலும் பங்குபற்றியதாகக் கூறினான்.

காலங்கள் சென்றன. சரா கல்வியங்காடு, திருநெல்வேலிப் பகுதிகளுக்கான பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். அப்பகுதியில் சராவை சராவின் செயற்பாடுகளை எல்லா மக்களுமே, விரும்பினார்கள்.

அந்த நேரத்தில்தான், இந்தியப் படைகள் -தென்றலெனச் சொல்லிக் கொண்டு எங்கள் தேசத்தில் புயலாகப் புகுந்தார்கள். இந்த மண்ணின் மீது தங்கள் கோரக் கரங்களை அகல விரித்தனர்

இந்திய வல்லாதிக்கத்திற்கெதிராக புலிகள் தொடுத்த போரில் சரா முன்னிலையில் நின்று திறமையாகச் சண்டையிட்டான். ஒரு முறை இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச் செல்லும் போது சராவின் கையில் ஆழமாக காயமேற்பட்டது. அவன் சிகிச்சைக்காக தமிழகத்திற்குச் சென்றான். அங்கு வைத்து இந்திய அரசால் கைது செய்யப்பட்டான்.



**லெப்.கேணல்**
**சரா**
**(சின்னத்துரை சிவராசா)**
**கல்வியங்காடு.**

பிறப்பு: 19-04-1962
வீரமரணம்: 27-07-1991

இந்தியர்களின் சிறைகளில் இரு வருடங்களைக் கழித்த -பின் தமிழீழம் அவனை வரவேற்றது. சராவினது போராட்ட வாழ்க்கை தொடர்ந்தது.

சிறீலங்கா அரசுடனான போர் மீண்டும் தொடங்கிய பின் யாழ். கோட்டை இராணுவ முகாம் மீதான முற்றுகைப் போரில் சராவும் ஒருவனாகக் கலந்து கொண்டான். கோட்டை வெற்றி கொள்ளப்பட்டதன் பின்பு புலிகளின், பயிற்சி முகாம்களிற்கான பொறுப்பாளராக செயற்பட்டான்.

**வவுனியா தினேஸ்**

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போர் ஆரம்பித்தவுடன் அப்போர் முனையில் ஒரு தளபதியாக சராவும் நின்றான். பழைய தடைமுகாம் இராணுவத்தினர் மீது ஒரு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தத் தாக்குதல் வெற்றியடையவில்லை. எல்லாமாக 63 போராளிகளை நாங்கள் இழந்திருந்தோம். சராவிற்கு காலில் காயம். வைத்தியசாலை வாசலில் நின்றான். நான் அவனைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். சின்னக் காயம்தான். பழையபடி போர் முனைக்கு போகப் போவதாகச் சொன்னான்.

"இழப்புக்கள்தான் அதிகம் போராட்டம் வளரும் பொழுது, போர் முனைகளும் பெரிதாக மாறும் -இழப்புக்களும் அதிகமாகத்தான் இருக்கும். இதைத் தவிர்க்க முடியாது" என்றான். அந்த நேரத்தில் அவசரமாக வந்த வாகனம் ஒன்றில் எறி அவன் போர்க்களத்திற்குச் சென்று விட்டான்.

ஆனையிறவு முற்றுகையை முறியடிப்பதற்காக கடற்கரையில் இறக்கப்பட்ட இராணுவத்தினர் நெருப்பு மழையைப் பொழிந்து கொண்டே முன்னேறத் தொடங்கினார்கள். இரவும் பகலும் வானத்தில் நீந்திய விமானங்கள் அங்குலம், அங்குலமாக குண்டுகளை விதைத்தன. கடலிலிருந்து நிலத்தை நோக்கி அலை அலையாக குண்டுகள் வந்து கொண்டிருந்தன. சிறீலங்கா அரச இயந்திரங்கள் தங்கள் முழுப் பலத்தையும் திரட்டி வெளிக்காட்டியவாறு முன்னேறி வந்தார்கள்.

இந்த நிலையில், இரண்டாவது தடவையாக தடைமுகாம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் திட்டமிட்டனர். கவச வாகனங்களின் உதவியுடன் எம்மவர்கள் முன்னேறுவதாக இருந்தது.

தாக்குதல் ஆரம்பமாகும் நேரம் எமது கவச வாகனம் நின்று புறப்படும் இடத்தில் நானும் நின்றேன். சரா வந்தான். என்னுடைய கன்னங்களைத் தடவினான். "மச்சான், என்னுடைய நல்ல படம் வைத்திருக்கிறாயடா" என்று கேட்டான்.

"ஏன்" நான் விளங்காமல் கேட்டேன்.

"நான் தான் டோசர் கொண்டு போறன்" என்றான். பயிற்சி முகாமிலிருந்து நாங்கள் பிரியும் போது கலங்கிய கண்கள் இன்று மீண்டும் கலங்கியது.

ஆனால் இந்தப் பிரிவு... நான் விழிகளைத் துடைக்க வேறு பக்கம் திரும்பினேன். சரா இன்னொரு தோழனிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

"எனது உடல் சிதையாமல் வந்தா, இந்தச் சீருடையைப் போடுங்கோ, இந்தப் புலிக் கொடியைப் போர்த்துங்கோ".

இந்தச் சண்டையில் தப்பி வரும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு என்பது சராவிற்கு நன்றாகவே தெரியும். தங்கள் மரணத்தைத் தெரிந்து கொண்டு போர் முனைகளுக்குச் செல்லும் உயர்ந்த மனிதர்களை இந்த மண் பிரசவித்திருக்கின்றது.

தாக்குதல் தொடங்கியது. துப்பாக்கி ரவைகளால் அரண்களை அமைத்தபடியே புலிகள் முன்னேறினார்கள். சராவின் வாகனமும் முன்னேறியது. ஒரு பீரங்கிக் குண்டு அந்த வாகனத்தில் பட்டு -வெடித்தது.

சரா, அவனுடன் சேர்ந்து சென்ற குகதாஸ்..., தாக்குதல் தொடர்ந்தது. காலைவேளை வெற்றி இல்லாமல் எம்மவர்கள் பின்வாங்கினார்கள்.

சராவின் உடலை மீட்பதற்கு முடியாமலே போய்விட்டது. இரண்டு நாளின் பின் போர் முனையிலிருந்து வந்த ஒரு தோழன், "எங்கள் நிலைகளிற்கு முன்னால், இராணுவ முகாம் வேலிக்குப் பக்கத்தில் சரா அண்ணை கொண்டு சென்ற வாகனம் நிற்கிது. காகங்கள் உள்ளே இறங்கி ஏறுது" எனச் சொன்னான்.

சராவை, காகங்கள்...,

என்னால் வேதனையைத் தாங்க முடியாமலிருக்கிறது. என் முன்னாலிருக்கும் சாளரத்தின் வழியே பார்க்கிறேன். கோட்டை தெரிகிறது. சிதைந்து அழிந்து கொண்டிருக்கும் -அந்த ஆக்கிரமிப்புச் சினனத்தின் முன்னே இப்படித்தான் அகழியையும் உயர்ந்த கோட்டைச் சுவரையும் தாண்டுவதற்காக எம்மவர்கள் பயன்படுத்திய கருவிகள் அப்படி அப்படியே கிடக்கிறது.

மதிலில் ஏறுவதற்காகச் சாத்திய ஏணி மதிலுடன் விழுந்து கிடக்கிறது. சேற்று அகழியைத் தாண்டுவதற்காக அடுக்கிய பலகைகள் அப்படியே தாழாமல் கிடக்கின்றன. இவை எல்லாம் வீரம் நிறைந்த கடுமையான அந்த நாட்களை நினைவுபடுத்துகின்றன.

கோட்டை இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி, அன்றும் சரா ஒரு கவச வாகனத்தை ஓட்டிச் சென்றான். முன்னேறிச் சென்ற அந்த வாகனம் பள்ளம் ஒன்றிற்குள் விழுந்து சரிந்தது. அன்றைய தாக்குதலும் வெற்றியடையவில்லை.

விடிந்தது. எங்கள் கண்களிற்கு முன்னால் வெட்டை வெளியில் எங்கள் தோழர்களின் உடல்கள் கிடந்தன. அவர்களின் மீது காகங்கள் இருக்க முயல்வதும் பறப்பதுமாக...

அந்த வேதனையான நினைவுகளை எண்ணியபடியே நிமிர்கிறேன். சிதைந்துபோன கோட்டையின் எஞ்சிய மதிற்சுவரால் எங்கள் போராளிகளில் சிலர் நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் கைகளில் இருக்கும் துப்பாக்கிகள் புது நம்பிக்கைகளை விதைத்துக் கொண்டிருந்தன.

சற்றுத் தள்ளி, காற்றில் தன் கைகளை வீசி புலிக்கொடி பறக்கிறது. ■

# "பூநகரியில் எங்கள் நிலை"

■ **சிறிலங்கா இராணுவத்தினரின் கடிதம்**

பூநகரி கோமார் முகாமில் தங்கியிருக்கும் இராணுவத்தினர் ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தாம் மிக மோசமான வாழ்க்கை வாழ்வதாக தெரிவித்துள்ளார். மணலில் ஆயிரக்கணக்கான உடல் சிதறல்களின் எச்சங்கள் கிடப்பதாகவும் அவைகளுக்கு மத்தியில் சிறிய குடிசைகளில் தாம் தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும், குளிப்பதற்கு குடிப்பதற்கு தண்ணீர் வழங்கப்படுவதில்லை எனவும் மணலில் ஒன்றரை அடி ஆழத்திற்கு பள்ளம் தோண்டி நீர் அள்ளிக் குடிப்பதாகவும், உடற்சிதறல்களில் இருந்து வடியும் ஊனமும் சிலவேளைகளில் இந்நீரில் கலந்து வருவதாகவும் அதனையே வேறுவழியின்றிக் குடித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே பங்குனி முதல் வாரத்தின் ஐந்து தினங்களுக்குள் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், இவ்வருடம் தொடங்கியது முதல் பங்குனி 15ம் திகதிக்கிடையில் 37 சிறீலங்கா படையினர் உயிரிழந்துள்ளதாகவும் சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன. இவற்றில் 25 இராணுவத்தினர் எனவும், 11 பொலிசார் எனவும் ஒருவர் ஊர்காவல்படையினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இவ்வெண்ணிக்கை கூறப்பட்டுள்ளதைவிட பலமடங்கானது என செய்திகள் தெரிவிக்கின்றன. ■

# வீறுடன் போராடும் வீராங்கனைகள்

## - பூநகரிச் சமர் தரும் சான்றுகள் -

"அந்த மறக்க முடியாத நவம்பர் 11ஆம் நாள், நானும் இன்னும் மூவரும் எமது பூநகரி -சங்குப்பிட்டி வீதிக் காவலரணில் இருந்தோம். இரவு மழை. திடீரென கடல் -தரை மார்க்கமாக வந்திறங்கிய போராளிகள் எங்கள் அரண்களை உக்கிரமாகத் தாக்கத் தொடங்கினர். அவர்கள் பெண் போராளிகள். நெருங்கி நின்று ஆர். பி. ஜி. எறிகணைகள், றைஃபிள்கள் மூலம் எம்மைத் தாக்கினர். நாங்கள் எதிர்பாராத அதிர்ச்சிக்குள்ளானோம். எனினும் சுட்டுக் கொண்டேயிருந்தோம். எங்களைச் சூழ இருந்த சுமார் 20 அரண்கள் அழிந்துகொண்டிருந்தன. இது தொடர்ந்த போது எம்மவரில் முப்பதிற்கும் மேலான எண்ணிக்கையினர் சிதறி ஓடுவது தெரிந்தது. நானும் காயப்பட்ட நிலையில் தவழ்ந்து உருண்டு ஒரு பற்றைக்குள் பதுங்கிக் கொண்டேன்".

இது, சிங்கள 'கஜபாகு றெஜிமென்ட்' படைப் பிரிவைச் சேர்ந்த எச். எம். ஜெயந்த என்பவர் கொழும்பு மருத்துவமனையிலிருந்தபடி 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டி.

இதே வரிசையில் இது போல இன்னும் இரண்டு பேட்டிகளையும் இந்த 21. 11. 1993 ஆம் திகதி இதழ் தாங்கியுள்ளது. இவையும் 'பெண்புலிகள் எம்மைச் சூழ நின்று தாக்கினர். அவர்களது உக்கிர தாக்குதலால் நாங்கள் சிதறி ஓடினோம். பலர் மடிந்திட, சிலர் பற்றைக் காட்டுக்குள் ஓடினர்' என்ற வகையிலேயே அமைந்துள்ளது.

இவ்விதம் உலகின் மதிப்புக்கும் வியப்புக்கும் உரியவர்களாகி தமிழீழத்தின் விடுதலைப் புலிகளது மகளிர் படைப்பிரிவினர் அஞ்சாத நெஞ்சுடையோராய் நின்று தமிழீழ அன்னைக்குத் தம் பங்களிப்பைச் செய்கின்றனர். புதிய வரலாறு படைக்கப்படுகிறது. சுதந்திர தமிழீழம் அனலின் நடுவே நின்று செதுக்கப்படுகிறது.

"துன்பம் கொடுப்பவனுக்கு நீ துன்பம் கொடு" -இது வள்ளுவ வாக்கு.

"கொல்ல வருபவனை நீ கொல்; வெல்!" என்பது, எம் ஈடிணையற்ற தலைவர் வே. பிரபாகரனின் கர்ச்சனை.

இவை இன்று நிறைவேறி வருகின்றன.

இலட்சிய ஈடுபாடு, அதில் அர்ப்பணிப்பு, ஈடிணையற்ற தலைமையை ஏற்ற துணிவு, தலைசிறந்த பயிற்சி, விவேகம், நாம் விடுதலைப் புலிகள் -வீரவேங்கைகள் என்ற உணர்வு இந்த விடுதலைப் போராட்டத்தை ஆயுத பலமாக்கி எடுத்துச் செல்கிறது.

இவர்களைப் பற்றி 'புலிகள் இயக்கத்தின் பெண்போராளிகள்' (WOMEN FIGHTERS OF THE LIBERATION TIGERS) எனும் நூலில் வரும் வரிகள் இதோ -

"பெண்போராளிகளின் வாழ்க்கை ஒரு முற்றுமுழுதும் வேறுபட்ட - வீறுகொண்ட -புதிய உலகைத் தாவிச் செல்கிறது. இதனால் இவர்கள் உலகின் மதிப்புக்கும் வியப்புக்கும் உரியவர் ஆகின்றனர்".

"வீட்டுச் சுகங்கள் பாரங்களைத் துறப்பதும் தாய் மண்ணின் தியாக வடிவங்களாகி சாவின் தோளிலே தட்டிச் சிரிப்பதும் ஒரு சாதாரண பெண்ணால் முடியாதவை. துணிவு, தியாகம் ஆகியவற்றுடன் தமக்குரிய போர் ஆற்றலையும் இவர்கள் நிருபித்து நிற்கிறார்கள்" என இந் நூலின் குரல் தொடர்கிறது.

ஆயினும் இன்று ஏங்கிய குரலிற் பேட்டி கொடுக்கும் சிங்களப் படையினர் சிறிது காலத்திற்கு முன்னர் எண்ணியிருந்த விதம் வேறு; இதை களம் பல கண்ட ஒரு பெண் தளபதி விளக்குகிறார்.

"நாங்கள் விரைவில் வருவோம்; உங்களைப் பிடிப்போம்; இவ்வாறு பலாலிப் பகுதியில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் எதிர் அணியிலிருந்த சிங்களப் படையினர் எங்கள் 'வோக்கி ரோக்கி' தொடர்புகளை அடிக்கடி குழப்பிக் குரல் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். இதனை உதாசீனம் செய்தபடி, எங்கள் இலக்கில் கண் வைத்தவர்களாய் நாங்கள் இருந்தோம். இதன்பின் எழுந்த சண்டையில் நாங்கள் விரைந்தோம்; சிங்களப் படையினரைப் பிடித்தோம்".

இவ்வகை வளர்ச்சியைக் குறித்தே, "விடுதலைப் புலிகளது மகளிர் படைப்பிரிவின் தோற்றமும் வளர்ச்சியும், எழுச்சியும் எமது இயக்கம் படைத்த மாபெரும் சாதனைகளில் ஒன்று...

தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி, தமிழீழத்தில் நடைபெறுகிறது" என, எம் தேசிய விடுதலைத் தலைவனின் குரல் பெருமிதத்தோடு முழங்கியுள்ளது.

'சுதந்திரப் பறவைகளின்' குரலும் இதனையே அறுதியிட்டுத் தருவதைக் கேட்போம். இது ஐப்பசி 1993 குரல் -

"இந்திய இராணுவத்துடனான முதலாவது மோதலில் தனது உயிரைத் துச்சமெனக் கருதி, தன் துப்பாக்கியை மட்டும் காப்பாற்றுமாறு கோரி உயிரைவிட்டாள் மாலதி. 10. 10. 1987 ஆகிய அன்றிலிருந்து ஈழத் தமிழ்ப் பெண்களின் புதுவரலாறு ஒன்று ஆரம்பமானது. உடலின் ஒரு பகுதியைத்தானும் மீட்டெடுக்க முடியாத அளவுக்கு, இராணுவ டாங்கிகளை எதிர்த்துப் போராடி உடல் சிதைந்த மேஜர் சுகன்யாவுடன் இந்த வரலாறு தொடர்கிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் பெண்போராளிகள் மகத்தான சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். இன்று மகளிர் படையணி விரிவடைந்து, ஒரு பெரும் போராட்டச் சக்தியாகப் பலம்பெற்று வளர்ச்சி கண்டுள்ளது".

இதுபோல, 'போராளிகளின் குருதிச் சுவடுகள்' எனும் ஏட்டிலிருந்து சில வரிகள் இதோ -

"கடைசியாக அவளை (கப்டன் டோறாவை) நான் பார்த்தபோது, தன் சிநேகிதியின் கரத்தைப் பற்றியவாறு நான் போகிறேன்" என முகமலர்ந்து கூறுகிறாள். அவளது கரத்தை இறுகப் பற்றிக் கொண்ட சிநேகிதி... "எவ்வளவு தூரம் சாதிக்க முடியுமோ அவ்வளவு சாதி. அப்போது நீ சாவை அணைத்துக் கொண்டால்கூட நான் கவலைப்பட மாட்டேன். இப்போது நீ போகிறாய், இன்னொரு நாள் உன்பின்னால் நான் வருவேன் என்கிறாள் -பிரிவு வரப்போகிறது, ஆனால் வெற்றி ஒன்று கிடைக்கப் போகின்றது, என்பதில் உறுதி உடையவளாக".



*தலைவருடன் சிறப்புத் தளபதி ஜெனா (வலது), தளபதி விதுசா (இடது).*
*'தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி, தமிழீழத்தில் நடைபெறுகின்றது'*

இன்னொரு காட்சி, கட்டுவனில் 22. 12. 1990 -

அன்று நூற்றுக்கணக்கான சிங்களப் படையினர் அரணைத் தாக்கி முன்னேற முயன்றனர். உக்கிரப் போரை ஒரு மணிநேரம் நாம் நடத்தினோம். தாங்க முடியாது அவர்கள் பின்வாங்கினர். ஆனால்... போரின் வெற்றிக்கு விலை அதிகமேதான்! இச் சமரில் கப்டன் அஜிதா எதிரியின் ரவையைத் தாங்கி வீரச்சாவையெய்தினார். துணிவுக்கு எம்முன் தனிப்பெயர் பெற்றிருந்த கப்டன் ஆசா இன்னொரு எறிகணையினாலும் வீரச்சாவெய்தினாள்.

உக்கிர எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டிருந்த செல்வா படுகாயமுற்றாள்; ஆனால் பின்வாங்க மறுத்து நின்றாள். இன்னும் தன் இயல்புக்கு மேலான பங்களிப்பைச் செய்து கொண்டே இருக்கின்றாள்.

இன்னொரு நூல் தரும் பதிவு -

மட்டுநகர் மண்ணில் இந்தியப் படையினர் சூழ்ந்திருந்த வேளையில், எமது மகளிர் படைப்பிரிவினர் காட்டிலிருந்து நகருடனும் தொடர்பு வைக்க வேண்டியிருந்தது. அப்போது ஒரு சோதனை நிலையத்தில் மக்களோடு மக்களாய் நிற்கின்றாள் அனித்தா. இவளைத் தாண்டும் வேளையில் இந்தியருடன் சேர்ந்து நின்ற ஈ. பி. தேசத் துரோகிகள் குழு இவளைச் சந்தேகிக்கிறது. விசாரணைக்கென இத் துரோகிகளுடன் செல்லுமாறு படையினரால் இவள் பணிக்கப்பட்டபோது, புலிகளின் இருப்பிட அசைவுகளையெல்லாம் அறிந்திருந்ததால் அவை எக்கட்டத்திலும் வெளிவராவண்ணம், தன்னோடு வைத்திருந்த 'சயனைட்' குப்பியைக் கடித்து 28. 11. 1988 அன்று மட்டுநகரில் வீரச்சாவெய்திய முதற் பெண்ணாகிறாள்.

இவ்வித விறலின் சிகரங்கள் தம்மை ஈவது எதற்காக...?

மேஜர் சோதியா மகளிர் படையணியின் முதலாவது தளபதி, மகளிர் படைப்பிரிவைத் திறம்பட நடாத்தியதுடன் மருத்துவத் துறை, தொலைத்தொடர்பு எனப் பல பட்டம் தீட்டிய வைரம்.

அஜிதா, ஆசா, அருந்ததி, சங்கீதா, சாளினி, உசா, தேனுஜா, கோகிலா, கஸ்தூரி...

என நூற்றுக்கணக்காகியுள்ள அந்தக் காவிய வரிசைகள் இன்றெங்கே...? எதற்காக...?

பூநகரிப் போர் உட்பட இதுவரை 507 இன்னுயிர்கள் வீரச்சாவெய்தியுள்ளனர்... 16 வயதிலிருந்தே இந்த வரலாறு தொடங்குகிறது.

இந்த நினைவிலே எம் நெஞ்சம் ஒரு கணம் தரித்து நிற்கட்டும்.

...மீண்டும் பகைவரைச் சிதற அடித்த பூநகரிப் போருக்கு வருவோம்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பறேசன் தவளை' நடவடிக்கையில் கலந்துகொண்ட, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி செல்வி ஜெனா அவர்கள் அளித்துள்ள பேட்டியின் வரிகளுட் சில -

"முன்னர் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தாக்குதல்களில் மட்டுமே கலந்து கொண்டது. ஆனால் 'ஒப்பறேசன் தவளை' நடவடிக்கையில் அப்படியல்ல. வேவு பார்த்தது பெண்போராளிகள். பாதை காட்டியது பெண்போராளிகள். பாதையில் கண்ணிவெடிகளைச் செயலிழக்கச் செய்தது பெண் போராளிகள். இவை எல்லாவற்றையும்விட, எமக்குக் கொடுக்கப்பட்ட ஏறத்தாழ இரண்டரை மைல் நீளமான காவலரண்களை அழித்து ஆயுதங்களை அள்ளி அந்தப் பகுதியை வேறெவரின் துணையுமின்றிக் காவல் செய்ததும் பெண்போராளிகள்தான்".

"இராணுவக் காவலரண்களிலிருந்து புலிகளை நோக்கி ஏவப்பட்டது துப்பாக்கிச் சூடுகள் மட்டுமல்ல. அங்கிருந்து கனரக ஆயுதத் தாக்குதலும் நடாத்தப்பட்டது. அத்தனை தாக்குதலுக்கும் மத்தியில் புலிகள் முன்னேறினர். கைப்பற்றிய காவலரண்களிலிருந்து ஆயுதங்களையும் ரவைகளையும் செல்களையும் எடுத்து அடித்தே, ஏனைய காவலரண்களையும் கைப்பற்றினர்".

எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து நீருந்து விசைப் படகுகளில் முதற் படகை முன்னின்று கைப்பற்றியது லெப். கேணல் பாமாவினது குழுவினரே.

இன்னொரு நெஞ்சை உயிர்ப்பிக்கும் வேறுபாடு -பூநகரிக் களத்தில் காயப்பட்டோரைத் தூக்கிச் செல்வதற்கு பின்னுதவி கிடையாத சூழலே நிலவியது. இந்தப் பின்னுதவியை காயப்பட்டோரும் எதிர்பார்க்கவில்லை. சிலர் விழ, ஏனையோர் முன்சென்று கொண்டேயிருந்தனர்.

இவ்விதம் முன்னர் எண்ணியிராத தமிழரின் வரலாறு, இதுவரை நடைபெறாத விடுதலைப் போர், எதிரியின் வலிமையை எதிர்த்தழிக்கும் ஆயுதப் போராக, இன்று ஈழத் தமிழ் மண்ணில் நடைபெறுகிறது.

இதில் மகளிரின் பங்கு இன்று வீறுடன் எழுகிறது. பெண்களைப் பற்றியிருந்த தாழ்வான எண்ணக் கருவையும் புலிவீராங்கனைகள் உடைத்தெறிந்து வருகின்றனர். இவர்களை வரவேற்று வளர்த்துவிட்ட தலைவர் பிரபாகரனும் இதனையே எதிர்பார்த்தார்.

இந்த வளர்ச்சியை, பரிணாமப் புரட்சியை முழுதாக வரலாறு உணர்வதற்கு இன்னும் சில நாட்கள் எடுக்கலாம். ஆனால் பூநகரிப் போர் முனையை உற்று நோக்கினால், உரிய சான்றுகள் ஏற்கனவே உதித்துள்ள உறுதி புலனாகிறது. ■

-பெருவழுதி

நன்றி:'விடுதலைப் புலிகள்'

> *பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும் அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்து விட முடியும் என்பதற்குஎமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கின்றது.*
>
> *- தலைவர்*

# அமைப்பு - பலம் -

# பூநகரி கூட்டு

கூட்டுப்படைத்தளம் (MILITARY COMPLEX) என்ற சொற்பதத்தின் இராணுவ பரிமாணம் மிக உயர்ந்தது.

தரைப்படை, கடற்படை, வான்படை என்ற முப்படைகளில் இரண்டை அல்லது மூன்றையும் சேர்த்து ஒன்றாக நிறுவப்படும் ஒரு பலமான இராணுவ நிலையையே, கூட்டுப்படைத் தளம் என அழைப்பர்.

சாதாரணமாக ஒரு முகாம் (CAMP) அல்லது இதைவிட இராணுவ. பரிமாணத்தில் உயர்ந்த ஒரு தளம் (BASE) என்பவற்றை விடக் கூட்டுப்படைத்தளம் (MILITARY COMPLEX), ஆட்தொகையிலும், அது அமைந்திருக்கும் பரப்பளவிலும் பிரமாண்டமானதாக இருக்கும்.

பூநகரி கூட்டுத்தளமானது தரைப்படையினரையும், கடற்படையினரையும் சேர்த்து 2560 பேரைக்கொண்டு விளங்கியதுடன், 33 ச. கீ. மீ. பரப்பளவிலும் அமைக்கப்பட்டிருந்தது. நாகதேவன்துறையிலிருந்து கௌதாரிமுனைவரை 16 கி. மீ. தூரத்தில் இக்கூட்டுத்தளம் நீண்டு கிடந்தது.

350 இற்கும் மேற்பட்ட கடற்படையினர் நாகதேவன்துறை - ஞானிமடம் பகுதியில் தளமமைத்திருந்தனர். நவீன ரக 'றாடர்'-கள் மற்றும் கண்காணிப்புக் கருவிகளுடன் நீருந்து விசைப்படகுகள், சக்திவாய்ந்த வெளிச்சம் பாய்ச்சிகளையும் தம்வசம் வைத்திருந்த கடற்படையினர், இவற்றின் துணையுடன் பூநகரி கூட்டுத்தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியதுடன், கிளாலிக் கடல்நீரேரியையும் கட்டுப்படுத்த விழைந்தனர்.



'பாதை திறப்பு' என்ற இராஜதந்திரப் பொறி அமைத்து, சிங்கள அரசு செய்த சூழ்ச்சிகர அரசியல் காய்நகர்த்தலுக்கு ஏற்றால்போல் புலிகளின் தரப்பிலும் காய்களை நகர்த்திச் சென்ற அதேசமயத்தில், தலைவர் அவர்கள் பூநகரித்தளம் மீது புலிகளையும் நகர்த்தினார்.

இதேபோல கவசவாகனப் படைப் பிரிவு, பீரங்கிப் படைப் பிரிவு, காலாட்படைப் பிரிவு, விசேட பயிற்சி பெற்ற சிறப்புப் படைப் பிரிவு என்று ஏறக்குறைய 2200 இராணுவத்தினர், 5 முகாம்களையும் பல்வேறு மினி முகாம்களையும் காவல் அரண்களையும் அமைத்து, இப்படைத்தளத்தைப் பாதுகாத்தனர்.

இக்கூட்டுப்படைத்தளத்தின் பிரதான முகாம்களாக,

1. வில்லடி கட்டளை முகாம்.
2. நாகதேவன்துறை படகுத்தளம்.
3. ஞானிமடம் கடற்படைத்தளம்.
4. கூமர் எனும் பகுதியில், இறங்குதுறை வசதியுடன் இருந்த பகுதியைச் சுற்றி ஒரு முகாம்.
5. பள்ளிக்குடாவுக்கும் கூமருக்கும் இடையிலிருந்த களஞ்சிய முகாம்.
6. ஆலடி முகாம்.
7. பள்ளிக்குடா முகாம்.


(இலக்கங்கள் வரைபடத்தின்படி)

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சில மினி முகாம்களையும் பல அவதானிப்பு நிலைகளையும் நூற்றுக்கணக்கான காவல் அரண்களையும் கொண்டு விளங்கிய இந்த இராணுவ காவல் நிலைகளைச் சூழ கம்பிச் சுருள்கள், மிதிவெடிகள், மண் அணைகள் என்று பலமான தற்காப்பு நடவடிக்கைகளும் செய்யப்பட்டிருந்தன.

இக் கூட்டுப்படைத்தளத்திற்கான உணவு மற்றும் அனைத்து விநியோகங்களும் கௌதாரி முனைக்கருகில் இருந்த -பெருங் கடலுடன் தொடர்புடைய -கூமர் என்ற கடற்கரைப் பகுதியூடாகவே நடைபெற்றன.

ஆழங்குறைந்த நீர்ப்பரப்பால் மூன்று புறத்திலும் சூழப்பட்டிருக்கும் இந்தக் கூட்டுப்படைத்தளத்தில், கூமர் பகுதி மட்டும்தான் கடல்வழித் தரையிறக்கத்துக்கு ஏற்றவாறு சற்று ஆழங்கூடிய ஒரு பகுதியாக இருக்கின்றது. இந்த இறங்குதுறையைச் சுற்றி பலமானதொரு இராணுவ முகாம் அமைக்கப்பட்டு, அப்பகுதி நன்கு பாதுகாக்கப்பட்டிருந்தது.

இக் கூட்டுப்படைத்தளத்தின் ஒட்டுமொத்த பலத்தை அல்லது அதன் பாதுகாப்பை எடை போட்டுப் பார்க்க வேண்டுமாயின் அதை உட்பலம், வெளிப்பலம் என இரண்டாக வகுத்து ஆராய்ந்து பார்ப்பதே சிறந்தது.




வெளிப்பலத்தைப் பொறுத்தளவில் கடல்தான் எதிரியின் பிரதான பலம். நீண்டு பரந்தபடி படைத்தளத்தை அரவணைத்துச் செல்லும் கிளாலிக் கடல் நீரேரியும், தேவை ஏற்படும் போது மன்னார்ப் பெருங்கடலூடாக 'டோரா' மற்றும் பீரங்கிப் படகுகளின் துணையுடன் துருப்புக்க

# Network

March 1994

Published by the International Federation of Tamils


"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."

- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

# Amnesty Slams Sri Lanka

- ❒Thousands of Tamils in Colombo arbitrarily arrested by police & plain colthed personnel
- ❒Torture & ill treatment of Tamils in custody
- ❒Tamil civilians in the North targeted by Sri Lanka airforce
- ❒Sri Lanka Navy personnel deliberately killed Tamil civilians at Killali
- ❒Extra judicial killings in north-east & south
- ❒Harassement,death threats to journalists
- ❒Little progress in prosecution of security personnel for violations during previous years
- ❒Undertakings made by government for protection of human rights not implemented

Sri Lanka Government sources tell Sunday Observer:

## Canadians should solve their problems first

The Sri Lanka state controlled Sunday Observer reported on 6 March 1994 on its front page under the banner headline 'Canadians should solve their problems first' that Sri Lanka President D.B.Wijetunge had told Cabinet Minister Thondaman that the North-East problem was **'an internal matter'** and that **'there was no useful role that foreign mediators such as the Canadians could play in this matter'**. The Report continued: "Government sources told the Sunday Observer that the Canadians were themselves facing a serious ethnic problem in Quebec. **'If they cannot solve their own problems, we are sceptical about their help to us,' a senior government official said.**"

**This latest rejection by Sri Lanka of a mediation offer follows upon its rejection of the offer made by four nobel laureates in August 1983.**

## The case of Arulappu Jude Arulrajah

*"Arulappu Jude Arulrajah was arrested on 2 October 1993 at about 1.30 a.m. from his lodge at Bambalapitiya, Colombo by armed men in civilian dress... Amnesty International interviewed him during a recent visit to Sri Lanka and collected evidence suggesting that he had been held in two unauthorised places of detention in Colombo until he was transferred to the custody of the CID on 15 December 1993. It also found that he had been tortured and ill treated at his first place of detention which is though to be an army camp by the sea, off Galle Road, Kollupitiya, Colombo. During most of the two months he was held at this first place of detention, Arulrajah was blindfolded, with his hands and feet chained and he was kept in a darkened room usually naked. He was regularly beaten and on one occasion he was hung from a wooden pole suspended between two tables and his genitals cut, possibly with a hacksaw... Arulrajah was never told thé reason for the detention nor was he brought before a court or accused of having committed any crime."*

*"Amnesty International is calling for an end to secret and illegal detention of people in Sri Lanka. To date, the Government has not responded to reports received by Amnesty International that people have been held at a secret place of detention located by the sea off Galle Road, Kollupitiya, behind the Indian High Commission and the American Information Centre, thought to be an army camp. Nor has it responded to reports that he was tortured in military custody during his period of illegal detention."* (Amnesty Report, ASA 37/13/94, February 1994)

**Amnesty International in four reports released in January and February (and widely circulated at the 50th Sessions of the UN Commission on Human Rights at Geneva in February/ March 1994) expressed its grave concern at the human rights situation in Sri Lanka. Amnesty said:**

"Thousands of Tamils are being arrested every month in Colombo, most without any valid reason. The government says there were 15,000 arrests in Colombo under emergency legislation between 1 June and 31 December 1993.. ..The true number of arrests may be higher if people were arrested without the necessary paper work being completed.. The small number of cases in which there appears to be any evidence of wrong doing is high lighted by the fact that out of the total 15,711 arrests in only 17 (0.11%) cases have charges so far been laid..

In many cases families who have not been notified of the arrest desperately search for their missing relative, fearing they have 'disappeared'. The army and armed groups working with the government have abducted some people and held them in secret places of detention for upto two and a half months, where they have been tortured before being dumped on the side of the road or transferred to police custody... Some agencies routinely beat detainees to extract confessions... After being released they are at risk of being repeatedly re arrested, most likely to be released each time without charge and without ever knowing why they were detained..

**The indiscriminate round ups of people solely because of their ethnic origin and reports of their treatment in custody is making members of the Tamil community fearful that they are not safe to walk the streets of Colombo.**

The way in which people are being arrested and detained is reminiscent of the manner in which thousands of people were detained in the south between 1988 and 1990... The way in which people have been recently abducted in Colombo by army in civilian dress, blindfolded with their own shirts and taken away in unmarked vehicles to secret locations where they have been tortured is a particularly chilling echo of the past...

**..impunity remained a major obstacle to the long term improvement of human rights.** "..impunity remained a major obstacle to the long term improvement of human rights. Little progress was made in the prosecution of security forces personnel allegedly responsible for committing human rights violations during previous years.

**..A former senior police officer who had left Sri Lanka in 1992 returned in June 1993. He had been wanted for questioning in connection with the death from torture of a (Sinhala) lawyer, Wijedasa Liyanaratchi in 1988 and had been summoned to appear in court in April 1992. After his return, however, he was not required to attend the court; instead he was given a senior position in government service..**

**Many of the specific undertakings made to the international community for the protection of human rights have yet to be implemented...**

Although the government undertook to remove from Emergency Regulations any regulation which has no bearing on public security concerns, it has since promulgated new regulations with no apparent connection to public security... The government has said that changes made to the Emergency Regulations in June 1993

*continued on page 2*

**Networking to secure international recognition of Tamils' right to self determination**

# Candidly Speaking

**Nadesan Satyendra**

# The cynicism of realpolitik

**Arulappu Jude Arulrajah was arrested on 2 October 1993 at about 1.30 a.m. from his lodge at Bambalapitiya, Colombo by armed men in civilian dress.**

**Arulrajah was never told the reason for the detention nor was he brought before a court or accused of having committed any crime - because the only 'crime' that he had committed was that he was a Tamil. During most of the two months he was held at this first place of detention, Arulrajah was blindfolded, with his hands and feet chained and he was kept in a darkened room usually naked. He was regularly beaten and on one occasion he was hung from a wooden pole suspended between two tables and his genitals cut, possibly with a hacksaw.**

Arulappu Jude Arulrajah was, ofcourse, not the only Tamil to suffer in this way at the hands of the Sri Lanka authorities. Amnesty reported last month that "thousands of Tamils are being arrested every month in Colombo, most without any valid reason...The way in which people have been recently abducted in Colombo by army in civilian dress, blindfolded with their own shirts and taken away in unmarked vehicles to secret locations where they have been tortured is a particularly chilling echo of the past..."

But, then again, recent events in Colombo are nothing new. As long ago as June 1983, Mr.Timothy J.Moore of the Australian Section of the International Commission of Jurists wrote:

**"The author accepts that it is the almost universal practice of the (Sri Lanka) military authorities to physically assault and mistreat those persons who have been in their custody... (and) that this treatment is.. carried out on a systematic basis..."**

Today, whilst Tamils in Colombo and other Sinhala areas are arbitarily arrested and tortured, Sinhala forces who dare not set foot on the Tamil homeland in the North, have taken to the skies to rain terror on the Tamil people. Here again, there is no lack of reports and statements by Amnesty and other independent observers.

**On 7 November 1990, Deanna Hodgin, a journalist from Insight Magazine wrote to Congressman Gus Yatron, Subcommittee on Human Rights, Washington:**

"I attended a press conference where (Sri Lanka) Defence Minister Ranjan Wijeratne told the press that there had been no civilian casualties despite heavy bombing. **When I volunteered that I had seen many bomb-blasted bodies, and many hundreds of people injured by helicopter strafing and more, the Defence Minister told me it was a pity I had not been shot. That's the mentality you are dealing with - human rights is not an idea with much currency for the Sri Lankan government. Quiet diplomacy is not an option for our policy in Sri Lanka...**"

The British Refugee Council publication Sri Lanka Monitor commented in July 1993: "Over 1,000 civilians have been killed in the three years bombing of Jaffna.. **Daily life in Jaffna is conditioned by the distant drone of aircraft engines and the run to the bunkers behind almost every house. There were no warnings, no air-dropped leaflets announcing operations. Why should there be? After all no one is watching ... There will be no international protest or outcry**"

This year on February 28 at the 50th Sessions of the UN Commission on Human Rights 18 Non Governmental Organisations including International Educational Development, Pax Romana, Centre Europe Tiers Monde, Survival International,and Organisation Mondiale Contra la Torture, declared in a joint statement:

"For the past ten years this Commission has heard hundreds of statements raising grave concern... During recent months the Sri Lanka government has intensified its indiscriminate aerial bombardment of the North of the Tamil homeland and the three year old economic blockade continues."

**Hundreds of reports by human rights organisations and hundreds of expressions of concern - but to what end? More reports and more expressions of grave concern?**

**Amnesty in a full page advertisement in the London based Guardian on 12 March 1994 commented on the cynicism of realpolitik in the context of East Timor - comments which are equally applicable to the situation of the Tamil people in the island of Sri Lanka:**

**"When governments pretend not to notice suffering, to whom can peoples.. turn for help?**

**The United Nations? Alas, the deeper you delve, the redder the faces. The cynicism of realpolitik extends even to the UN Commission on Human Rights...**

**When Amnesty attended the Commission in Geneva last month to urge action on Indonesia and East Timor, we met only embarrassment. The governments to which we spoke repeated what they have been promising us for thirty years: they will pursue a policy of 'quiet diplomacy'"**

To Amnesty's question, to whom can a people turn when governments (around the world) pretend not to notice their suffering, Tamil Eelam leader Velupillai Pirabakaran provided the answer on Maha Veerar Thinam in November 1993 when he said that they can only turn to themselves. His words bear repetition yet again: **"...we are fully aware that the world is not rotating on the axis of human justice. ...International relations and diplomacy between countries are determined by the self interest of each country. Therefore we cannot expect an immediate recognition of the legitimacy of our cause by the international community. But at the same time we must agitate for that recognition... In reality, the success of our struggle depends on our own efforts, on our own strength, on our own determination..."**

It was the late Sathasivam Krishnakumar, the charismatic intellectual and man of action of the LTTE, who used to say with a smile: "You know, you can wake up someone who is asleep, but it is much more difficult to wake up someone who is pretending to be asleep." **The Tamil people, by their untiring efforts, by their strength born from their suffering, and by their steadfast determination, can (and will) make it more and more difficult, for those who pretend not to see, to persist in their pretence with any degree of credibility. And there will come a time when the same real politik that renders some 'blind' today, will press upon them the need to 'wake up' to the justice of the Tamil cause.**

# 18 NGOs rebuke Sri Lanka at UN

18 Non Governmental Organisations including International Educational Development,Pax Romana,Centre Europe Tiers Monde, Consejo Indio Sud America, ,Internet, Survival International, IWGIA, Organisation Mondiale Contra la Torture, and American Association of Jurists commented on Sri Lanka's continued intransigence in a joint statement at the 50th Sessions of the UN Commission on Human Rights on 28 February this year:

**"The Sri Lanka government has rejected a number of offers to mediate including one made in August 1993 by four Nobel laureates. The government continues with its military operations against the Tamil people and the Sri Lanka President continues to insist that there is no ethnic problem."**

**The 19 NGO Joint Statement added: "For the past ten years this Commission has heard hundreds of statements raising grave concern at the failure to resolve the armed conflict in the island of Sri Lanka. Yet the conflict continues and innocent lives continue to be lost.**

**During recent months the Sri Lanka government has intensified its indiscriminate aerial bombardment of the North of the Tamil homeland and the three year old economic blockade continues. Since the last session of the Commission, several hundred Tamils have been arrested in the East of the Tamil homeland by Sri Lanka's military and para military forces and many have 'disappeared'. Recent Amnesty reports confirm that in Colombo thousands of young Tamils have been arbitrarily arrested and detained.**

At the sametime the Sri Lanka government plans to hold local government elections in the East on 1 March at a time when several thousands of Tamils have ben displaced from the East (see Report E/CN/4/1994/44/Add.1) and have sought refuge in the North of the Tamil homeland.

**In our view the situation in the island is extremely serious and demands the urgent attention of the Commission. We request the Commission to adopt a resolution calling upon the two parties to the conflict, the Government of Sri Lanka and the Liberation Tigers of Tamil Eelam, to enter into a ceasefire and to commence negotiations with a view to establishing peace in the island and securing the right of self determination of the Tamil people.**

# Amnesty slams...

*continued from front page*

were made taking into consideration the recommendations of the Centre of Human Rights at the University of Colombo and other human rights organisations. However, the regulations have not yet been completely revised and many of the recommendations for revision of arrest and detention procedures made to the government by international and local human rights organisations have not been incorporated..

**In the north scores of civilians were reportedly killed during the year by the security forces, some apparently victims of extra judicial executions, as they attempted to cross the Kilalli lagoon from the Jaffna peninsula to the mainland... In some cases, navy personnel reportedly boarded boats and deliberately killed civilian passengers who offered no resistance. Civilians were also reportedly targeted in reprisal bombing raids on Jaffna..**

There were continuing reports of harassment and death threats issued to journalists in the south. Iqbal Attas received repeated death threats after he criticised (Sri Lanka's) military operations in the north in October.. Two further journalists were threatened after publishing on the same matter"

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi-polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:
The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

## International Federation of Tamils writes to key UK MPs

# "Legitimisation and negotiation will provide the pathways to peace"

**A Parliamentary Rally arranged for 19 January, 1994 by the Tamil Expatriates British Parliamentary Campaign, was cancelled a few days before the event. Mr.A.C.Shanthan, Secretary of the International Federation of Tamils, wrote on 21 January 1994 to key members of the UK Parliament, inviting their support for the Tamil struggle for self determination. The letter read:**

"We send herewith an Appeal which we had intended presenting at the Parliamentary Rally which had been organised for 19 January by the Tamil Expatriates British Parliamentary Campaign. We regret that in the event, the Rally was cancelled.

**We are mindful that there are many ongoing conflicts in the world today and the question may well arise in some minds as to the extent to which Members of Parliament in the United Kingdom may usefully concern themselves with issues in an island more than 7000 miles away. We suggest that there may be three frames in which you may want to consider the matters connected with the conflict in the island of Sri Lanka.**

At one level, Tamils living in this country, even those who may have become British citizens, have a natural concern about that which is happening to their relations and friends back in the island. Again, even those Tamils who arrived in this country many years ago may have planned to go back and retire in their land of birth and they may be concerned that the conflict in the island has rendered it impossible for them to return. All this contributes to a legitimate constituency level interest by Tamil voters - interest which finds expression in the representations they make to their Members of Parliament.

**There is a second level. The arrival of more than 150,000 Tamil asylum seekers in Europe is matter of concern to the British government and to other governments in the European Community. The continuing conflict in the island has led to an increase in the number of asylum seekers and their continued presence in Europe. Unsurprisingly, in recent times, member countries of the Community have evinced an interest in exploring approaches to a just resolution of the conflict in the island.**

There is also a third level. The influx of asylum seekers is but an illustration of the larger political reality of inter locking structures in an increasingly small world. Instability anywhere tends to threaten stability everywhere. It is the recognition of this need to secure stability that has led the Aid Consortium, meeting annually in Paris during the past several years, to prop up the Sri Lanka government by granting aid - recently to the tune of 30 billion rupees. This is in the context of the Sri Lanka government's defence budget this year of 25 billion rupees. Again, conflicts and large defence budgets are not without their attractions to those concerned in the world wide arms trade.

**We also believe that it would be wrong to look at the conflict in the island of Sri Lanka as one of a kind. It is not. The conflict in the island is not dissimilar to emerging struggles for self determination in the Indian sub continent and for that matter in many other parts of the globe. During a 30 year period from 1945 to the mid 1970s, the United Nations expanded from around 50 members to around 150. This was the result of the success achieved by several colonial struggles for independence. Since then we have been seeing something somewhat different. Nations which had been joined together and ruled by the colonial conqueror, to suit his administrative convenience, now struggle for their own independence. The 1990s may well come to be seen as the decade of post colonial struggles for independence. National identities have proved to be enduring. We believe there is a need to address the issue of putting in place new constitutional structures which on the one hand recognise existing national identities and which on the other hand address the question of how these separate national identities may associate with one another on equal terms.**

The island of Sri Lanka is a case in point. In 1879, the British Colonial Secretary, Sir Hugh Cleghorn in a Minute said: "Two different nations, from a very ancient period, have divided between them the possession of the Island: the Sinhalese inhabiting the interior in its Southern and Western parts from the river Wallouwe to Chilaw, and the Malabars (Tamils) who possess the Northern and Eastern Districts. These two nations differ entirely in their religion, language and manners." Though the British arrived in the island in 1795 it was only in 1833, that the Tamil homeland was amalgamated for the first time with the rest of the island for the administrative convenience of the ruler.

With the departure of the British in 1948, the emergence of a separate Tamil national identity was consolidated by the actions of a Sinhala majority which regarded the island of Sri Lanka as the exclusive home of Sinhala Buddhism and the Tamil people as 'outsiders' who were to be assimilated within the confines of an unitary Sinhala Buddhist state.

**It is not our purpose to refer in any great detail to the rise of the Tamil armed resistance as a response to decades of oppressive rule by a dominant Sinhala majority within the frame of an unitary constitution. This will appear from the annexures to this Appeal which we trust that you will have the time and the inclination to peruse.**

Here, we would like to invite your particular attention to the Joint Statement made by 15 Non Governmental Organisations with consultative status at the United Nations Commission on Human Rights on 8 February 1993.. We seek your support for the views expressed by these 15 NGOs that "the Tamil population in the North - East of the island of Sri Lanka are a 'people' with the right to freely choose their political status".

**We believe that such recognition will pave the way for direct talks between the two parties to the armed conflict, namely the Liberation Tigers of Tamil Eelam and the Government of Sri Lanka and for the resolution of a conflict which has taken an increasingly heavy toll in human lives and suffering during the past ten years and more - and which threatens to take an even greater toll in the months ahead.**

**We believe that it is legitimisation and negotiation that will provide the pathways to peace in the island of Sri Lanka.**

## "Large defence budgets are not without their attractions to those concerned in the world wide arms trade"

# Tamil Eelam Justice Division introduces revised Thesawalamai Code

**The Administration of Justice Division of Tamil Eelam has introduced a revised 'Thesawalamai Law of Tamil Eelam' with effect from 1 December 1993.**

Mr.S.Thiagarajah writing from Tamil Eelam says: "Thesawalamai is a combination of two words - 'thesa' means country and 'walamai' means custom ... Dutch Governor Simons in 1704 instructed Claasz Isaacsz to inquire into the customs of the Tamil inhabitants... as it existed and to compile them... In 1708 these customs were promulgated by the Dutch Governor as law... After the Dutch settlements were ceded to Britain, by Regulation 18 it was declared that the Code of Customs commonly called Thesawalamai should be considered to be in full force... Since then the Code of Thesawalamai remained unchanged inspite of many changes in customs.. (However today ) socio political, economic and cultural changes (have)... necessitated changes... to the law of Thesawalamai." Some of the changes introduced in the new law .. relate to the long felt need to give independent status for women. Section 19 of the new Law states that married women are independent like men and that they can dispose of their property and their half share of property acquired during the subsistence of the marriage (thedia thetam) , without the consent of their husband. Earlier, once married, any sale, mortgage or donation of any property belonging to the wife required the consent, in writing, of the husband. Again Section 21 of the amended Thesawalamai law entitles a woman to sue in any court of law without joining her husband, as was required in the past."

# ...and Tamil Eelam's 6th District Court established at Mullativu

**The 6th Tamil Eelam District Court was opened in early January at Puthukudiyirrupu in the Mullativu District. Mr.Para, the Head of the Administration of Justice Division, presided over the function. The national flag was hoisted by the Special Commander of the LTTE for Mullativu, Mr.Solomon.**

# ...whilst, 'Rule of Law' in the Sinhala South continues in Sri Lanka Style

**Two men who had been found guilty of attempted homicide were recently pardoned by Sri Lanka President D.B. Wijetunga.** The two men, one of them a politically inclined businesman with influence at the Kuliyapitiya Police had ignored or blatantly defied a series of warrants from the Kurunegala High Court Judge. The Kuliyapitiya Police reportedly took little or no action to arrest and produce them before court to face justice for the attempted murder of an ayurvedic physician. In the light of reports that the two convicted men were openly moving around Kuliyapitiya while police tuened a blind eye, the High Court Judge who was hearing the appeal, directed the Registrar of the court to write to the Inspector General of Police regarding this bid to add insult to injury. But events thereafter took a different turn when it was announced that the two convicts, whose appeal was still being heard in court, had been granted a free pardon by Presidential decree. **Rule of law? What rule of Law?**

## US based Ilankai Thamil Sangam tells President Clinton, key US Senate & Congress Leaders:

# "Recent intensified air raids on Tamil civilians are revenge attacks"

**Dr.N.Jeyalingam, President of the US based Ilankai Thamil Sangam in a letter dated 9 February 1994 to US President Clinton and several key US Senate and Congress leaders said:** "During the last few months the army offensive on the Tamil civilians has intensified... You are aware of the recent setbacks that the Sri Lanka armed forces suffered at the hands of the Tamil rebels (LTTE). These intensified recent raids on civilians are believed to be revenge attacks.... this being an election year, we believe that the Sri Lankan government will increase military actions to secure southern (Sinhala) votes.... The Sri Lanka Government refuses to have direct talks with the LTTE... (it) has also rejected several offers of international mediation. **I am enclosing herewith a copy of the statement made at the annual hearings of the UN Commission on Human Rights by a group of 17 non governmental organisations, which describes the situation well."**

# Sinhala owned Sri Lanka Sunday Times advices voters in the East: "Vote for the lesser rogue - otherwise the bigger rogue might win"!

## Rev Fr.Harry Miller says in Batticoloa:

# "I keep telling people this election is a joke, but nobody is laughing"

**The Indian Express Correspondent visiting Batticaloa in the East of Tamil Eelam reported in the Sinhala owned Sri Lanka Sunday Times on 27 February: 'I keep telling people this election is a joke, but nobody is laughing,' says an angry Rev Fr.Harry Miller who left his native America over half a century ago to teach at the local college in this Eastern coastal town. Today very much a part of the local scene, Fr.Miller hits out at what he describes as a 'travesty of democracy', an election he sees as 'another dance on the stage.'**

The Report continues: 'Nowhere in the eastern province is the local poll scheduled for March 1 being criticised as in Tamil dominated Batticaloa, sadly berefet of a leadership. 'The good men have all run away to escape being forced to participate' says a local citizen. Fr.Miller agrees dismissing the candidates in the fray as being of no significance to provoke LTTE reprisals. People, he says, will be pressured by the army to vote and therefore unlikely to be termed an unfriendly act by the LTTE..."

During the last week of February, the Quisling EPRLF Secretary General, who some months ago declared that the Sri Lanka government was 'our only hope', (unsurprisingly) complained to the Sinhala Sri Lanka Election Commissioner that the Sinhala Sri Lanka Army and the Sinhala Special Task Force were attempting to influence the electoral process in the East in the run up to the local government elections scheduled for 1 March - presumably in the hope that the ruling Sinhala establishment will somehow heed his cries for help.

The Quisling EPRLF memorandum stated: "Last week a senior army officer while addressing the grama niladaris in Batticaloa in the presence of the Additional Government Agent acted in an intimidating manner accusing them of being supporters of the LTTE. This was widely reported in the media. He threatened them with punishment if polls did not take place in their respective grama niladari divisions... In the districts of Batticaloa and Trincomalee, the army is directly involved in assisting UNP candidates and in doing everything in ensuring their victory...

In many areas in the Batticaloa District, search and cordon operations are immediately followed by the UNP candidates securing the release of those rounded up by the army. This is clearly a drama stage managed to gain popularity for the UNP candidates...

### Ballot papers in army camp!

**In Muttur a significant portion of ballot papers have not been distributed and are being kept in the army camp.** The local populace have been instructed to report to the army camp on the morning of the polls and to collect the ballot papers. The intention is stark clear and needs no further elaboration... In addition to the above, you are no doubt aware of the theft of thousands of ballot papers in certain areas of Vavuniya, Batticaloa and Chenkaladi. Here again the intentions are obvious."

Not to be outdone,,the TULF Administrative Secretary instead of appealing to the Sinhala Commissioner of Elections, complained to the Sinhala owned Sri Lanka Sunday Times on 27 February that the security forces and the police were compelling the people to cast their ballots and that most people might do so due to fear of reprisals (from the security forces). He accused the UNP of trying to manipulate the majority Tamil voters who were against the polls.

### Vote for the lesser rogue!

Meanwhile, **the Sinhala owned Sri Lanka Sunday Times urged editorially on 27 February under the heading 'Sunrise for East'(!):**

**"We call upon the right thinking people of the East to be calm and excerise their fundamental rights for the common good of all. Even if all are bad, there is a moral duty to vote for the lesser rogue because otherwise the bigger rogue might win..."**

**This, after all, was Sinhala perception of sunrise for the east!**

### Guardian Report

And after the polls,Sinhala journalist, Amal Jayasinghe dutifully reported in the London Guardian on 3 March:

"Sri Lankan voters defied the separatist Tamil Tiger guerillas and elected other Tamil groups to run councils that are to take over from the military. The polls held on Tuesday were to elect 431 representatives to 40 local councils in the east and north. Results yesterday showed that three Tamil military groups won 13 councils. The ruling United Natioanl Party won 18 councils while the opposing SriLanka Freedom Party of the former Prime Minister, Srimavo Bandaranaike, won three."

**Amal Jayasinghe's silence on the way in which the elections had been conducted, served only to undermine the credibility of the Guardian.**

---

1.Sinnathamby Sithiravel of Muhathuvaram 2.Sellappah Veerakutty of Muhuthuvaram 3. Tharmapillai Ekananthamoorthy of Poomarathadichenai 4. Vairamauthu Nagenthiram of Verugal 6. Vairamuthu Rasa of Verugal 7. Sellathamby Velayutham of Verugal 8. Kathirgamam Ramupillai of Karukkamunai 9.Veerakutty Arulnesarasa of Poonagar 10.Arunasalam Selvarasa of Poonagar.

The above named ten are some prominent persons in Verugal, Mutur and Trincomalee districts.

They were arrestedby the Sinhala Army. Why? What offence had they committed? They had declined to file 'nomination papers' for the the local government elections held by the Sinhala dominated Sri Lanka government in certain parts of occupied Tamil Eelam territory in the East on 1 March 1994.

It appears that the Sri Lanka government leaves no stone unturned to see that everyone participates in 'Democracy, Sri Lanka style'!

---

# LTTE releases two Sri Lanka POWs

**On Thursday 24 February, the Liberation Tigers of Tamil Eelam released two Sri Lanka prisoners of war who had been held in custody in Jaffna since June 1990.** The two policemen, A.J.M.–Chandrasekera and E.W. Thilakaratna Bandara were handed over to Rev.Fr.Alfred Alexander, a special representative of Dr.Nicholas Marcus Fernando the Archbishop of Colombo. Rev.Fr.Alfred Alexander arrived in Point Pedro on Wednesday, carrying a letter from the Archbishop to the LTTE leadership seeking the release of the prisoners of war. The Sinhala owned Sri Lanka Sunday Island reported on 27 February 1994 that Rev.Fr.Alexander said: "They were given to me by Mr.Anton Balasingham" . The Island report continued: "Asked whether the Tigers imposed any conditions prior to the release he replied in the negative. Rev.Fr. Alexander further said that the Tigers have said that any fresh peace talks between the government and them must take place in Jaffna. 'They ruled out negotiations outside the peninsula' he said while adding that the Tigers have indicated their willingness to welcome any person arriving in Jaffna for talks... **Police Constable Chandrasekera told the Island that he was captured on June 13 1990.. He said that he was treated well (in captivity)."**

# Sri Lanka's continues to breach Geneva Convention

The Geneva Convention relating to non international armed conflicts provides that medical units and transports shall be respected and shall not be object of attack; that the civilian population as such, as well as individual civilians, shall not be the object of attack; that acts or threats of violence the primary purpose of which is to spread terror among the civilian population are prohibited; that starvation of civilians as a method of combat is prohibited; that it is prohibited to attack, or destroy objects indispensable to the survival of the civilian population, such as food stuffs, crops, and livestock; and that it is prohibited to commit any acts of hostility against places of worship. **However Sri Lanka continues to breach these provisions of international humanitarian law with impunity:**

*The Kodikamam Hospital came under fire from a Sri Lanka Air Force helicopter on 11 January at about 8.00 a.m. The helicopter fired at random at the Mirusuvil-Kodikamam main road, hitting the hospital as well. Some houses in the area and the hospital were damaged.*

*On the same day, two Sri Lanka Puccaro planes bombed Nedunkerni in the Mullativu District. Many houses and tractors were damaged. A husband and wife, parents of four children died on the spot. The deceased are M Jeyanathan (44) and his wife N.Vasantha (40). Another woman suffered serious injuries. Harvested crops of tobacco and chilles worth around Rs.200,000 were destroyed.*

*On 13 January, three Sri Lanka naval boats shelled the Vadamaratchy coast from Munai to Valvettiturai for one hour from about 5.45 a.m. Canon fire and 50 calibre gun fire were directed were directed indiscriminately at the sea shore and on coastal residential areas. Fisherman abandoned work and swam for safety to the coast. The Point Pedro Rural Hospital, the Valvettiturai Hospital, several houses, a community centre and some office buildings were damaged. Other villages along the coast also suffered damage. Two persons died and five others were injured. The injured were taken to the Manthikai Hospital.*

***Meanwhile the Sri Lanka Army High Command has forbidden the Red Cross from running vehicles in the night from 7 p.m. to 7 a.m. The Red Cross has to transport the sick and injured, attend to health hazards in refugee camps and undertake other humanitarian services in the war torn North. There are a number of instances when aerial bombardment of civilian dwelling areas has been carried out by the Sri Lanka airforce. Shelling and helicopter strafing are a common occurrence in the night and many Tamil civilians have died. It appears that the ban imposed by Sri Lanka on the Red Cross is a deliberate attempt to ensure that victims of indiscriminate aerial bombardment and shelling in the night do not receive proper medical attention.***

# ரலாற்றுப் பின்னணி

# படைத்தளம்

ளைத் தரையிறக்கக்கூடிய ஒரு தரையிறங்கு துறையும் (கூமர்) இந்தக் கடற் பலத்திற்கு ஆதாரமாகும் அதேவேளை, இக் கூட்டுத்தளத்திற்கு மிக அருகாமையில் இரு முனைகளிலும் இருக்கும் ஆனையிறவு, மண்டைதீவு தளங்களும் ஒரு துணைவலுவாகவே விளங்குகின்றன. ஆபத்து வேளைகளில் இந்த இரு படைத்தளங்களும் வெளியிலிருந்து பூநகரிக்குக் கைகொடுக்கக் கூடியவை. இவற்றுடன் வயல்களையும் சிறு பற்றைகளையும் கொண்ட பூநகரிப் பிரதேசத்தின் தரை அமைப்பு, வானிலிருந்தபடி கட்டுப்படுத்தக்கூடிய தன்மையையே கொண்டுள்ளது. இவ்விதமாக பூநகரி கூட்டுத்தளத்தின் வெளிப்பலம் சிறப்பாக அமைந்திருந்தது.

**காலத்திற்குக் காலம் அந்நியப் படையெடுப்பாளர்களின் முக்கிய இலக்காக பூநகரி இருப்பதற்குரிய காரணம், யாழ். தீபகற்பத்தின் பிரதான வாயில்களில் ஒன்றாக - கேந்திர முக்கியத்துவத்துடன் அது இருப்பதுதான்.**

உட்பலத்தை, அதாவது அதன் சொந்தப் பலத்தைப் பொறுத்தளவில் 2560 படையினரைக் கொண்ட அதன் ஆட்பலம்தான் பிரமாண்டமானது. டாங்கிகள், 120 மி.மீ. மோட்டார் பீரங்கிகளுடன் நாகதேவன்துறை படகுத் தளமும் இந்தச் சொந்தப் பலத்திற்கு மேலும் வலுவூட்டுகின்றது.

இக் கூட்டுப்படைத்தளத்தில் தாக்குதலுக்கு உட்படக்கூடிய வாய்ப்புகளுடன் இருந்த பகுதி, ஞானிமடத்திலிருந்து பள்ளிக்குடா வரையிலான சுமார் 7 கி.மீ. நீள நிலப் பகுதிதான். இந்தப் பகுதிதான் இக் கூட்டுத் தளத்தின் தரைத் தொடர்புடைய பகுதியாகும்.

இந்த 16 கி.மீ. நீளத்திற்கு காவல் அரண்கள் அமைக்கப்பட்டு, அவற்றிற்கு முன்னால் ஏறக்குறைய ஐந்து அடி உயரமான மண் அணை அமைக்கப்பட்டு, அந்த அணைக்கு முன்னால் இரண்டு அல்லது மூன்று வரிசைகளில் முட்கம்பிச் சுருளிட்டுப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதேவேளை நீரேரி ஓரமாக நாகதேவன்துறையிலிருந்து சங்குப்பிட்டி வரையும், அதற்கு அப்பாலும் மறுபுறத்தில் பெருங்கலூடன் தொடர்புடைய பள்ளிக்குடாவிலிருந்து கூமர்முனை வரையும், அதற்கு அப்பாலும் கரையோரமாகத் தண்ணீருக்குள்ளேயே முட்கம்பிச் சுருள்கள் இட்டு முள்வேலி அமைத்து, தற்பாதுகாப்பு ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. இந்த மண் அணைகள், முட்கம்பிச் சுருள்கள், முள்வேலிகளையும் விட தேவையான இடங்களிலெல்லாம் மிதிவெடிகள் பல்லாயிரக்கணக்கில் புதைத்து வைக்கப்பட்டும், ஞானிமடம் -சங்குப்பிட்டி ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த பாரிய வெளிச்சம் பாய்ச்சிகளால் (SEARCH LIGHT) நீரேரி சதா கண்காணிக்கப்பட்டும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தன.

இன்று உலகெங்கும் பேசப்படும் ஊராகிய பூநகரிப் பகுதியானது, 1980 இல் தொல்பொருள் ஆய்வாளர்களின் இலக்காக மாறிப் பிரபல்யம் அடையத் தொடங்கியது. ஈழத் தமிழர்களின் தொன்மையான குடியிருப்புகளில் பூநகரிப் பகுதியும் ஒன்று என்று அவர்கள் கண்டறிந்தார்கள்; அந்தத் தொல்குடித் தமிழர்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களின் சிதைவுகளை அதற்கு ஆதாரமாகக் காட்டி, தமது தொல்லியல் முடிவுகளை வெளிப்படுத்தினர்.

பூநகரியானது ஈழத் தமிழர்களின் தொன்மையை மட்டுமல்ல, காலத்திற்குக் காலம் அந்நியப் படையெடுப்பாளர்களின் ஆக்கிரமிப்பையும் கண்டுள்ளது. யாழ். தீபகற்பத்தினுள் புகும் பிரதான வாயில்களில் ஒன்றாகப் பூநகரிப் பகுதி இருப்பதுதான் இதற்குரிய காரணம்.



**ஞானிமடம் கடற்படைத் தளத்தோடு இணைந்த நாகதேவன்துறை படகுத்தளம்.**

பண்டைத் தமிழர்களாகிய எமது முன்னோர்கள், பூநகரிப் பிரதேசத்திலிருக்கும் மண்ணித்தலைப் பகுதியிலிருந்து கிழக்கு அரியாலை வழியாகவும், நாகதேவன்துறையிலிருந்து கச்சாய் வழியூடாகவும் போக்குவரத்துக்களைச் செய்திருந்தனர்.

மன்னாரைக் கைப்பற்றிய ஒல்லாந்தர்கள் அங்கிருந்து தரை வழியாக பூநகரி வந்து, பூநகரியிலிருந்து நாகதேவன்துறை வந்து, அங்கிருந்து நேர் வடதிசையில் இருக்கும் கச்சாயை அடைந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர்.

வன்னிப் பெருநிலமானது அன்றைய யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லைக்குள் அடங்கியிருந்த போதும், வன்னியின் குறுநில மன்னர்கள் ஒல்லாந்தருக்கு அடிபணிய மறுத்தனர். இதனால் அச்சமுற்ற ஒல்லாந்தர்கள் பூநகரியில் ஒரு கோட்டையை அமைத்து, மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய தமது பிரயாணப் பாதையைப் பாதுகாக்க முயன்றனர்.

16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்தர் கட்டிய பூநகரிக் கோட்டை, பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலிருந்து வெள்ளைத் துரைமாரினதும் பின்னர் அரசாங்க மேலாளர்களினதும் தங்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டது.

இலங்கைத் தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்களின் கையில் ஒப்படைக்கப்பட்டபின், தமிழினத்துக்கெதிரான இன ஒடுக்கல் முனைப்புற்றது. இந்த இன ஒடுக்கு முறைக்கெதிராக தமிழ் மக்களிடம் எழுந்த எதிர்ப்புணர்வானது ஆயுதப் போராக வடிவமெடுத்தது. இந்த ஆயுதப் போராளிகளின் அசைவியக்கத்தை தடுத்து நிறுத்த, வன்னி நிலப்பகுதியை குடாநாட்டுடன் இணைத்திருந்த பிரதான பாதைகளான ஆனையிறவும் - பூநகரியும் ஆயுதப் படைகளின் இராணுவ கேந்திரங்களாக மாறின.

1981 ஆம் ஆண்டு செப். 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூநகரிக் கோட்டை சிங்களப் படை முகாமாக மாற்றப்பட்டது. பூநகரிப் பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்க்கையைக் கழிக்கத் தொடங்கினர்.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் திகதி, பூநகரிக் கோட்டை முகாம் மீது புலிவீரர்கள் ஒரு பாரிய தாக்குதலைத் தொடுத்தனர்.



**'தவளை' முனையில், புலிவீரர்கள் கைப்பற்றிய போர் டாங்கியுடன் எமது மூத்த தளபதி சொர்ணம். பெரிய நாடுகளுக்கிடையில், பெருமெடுப்பில் நடைபெறும் போர்களைத் தவிர, ஒரே தாக்குதலில் ஆயிரம் படையினர் கொல்லப்படுவதென்பது. இது தான் முதற் சம்பவமாக இருக்கும்.**

இத்தாக்குதல் நடந்த தினத்திற்குச் சில நாட்கள் முன்னர்தான் தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அழைத்த இந்திய அரசு, எமது போராட்டத்தை ஒடுக்கவென இந்திய -சிங்கள அரசுகளால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தை ஏற்குமாறு வற்புறுத்தியது.

ஒரு பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றின் மூலம் எமது இயக்கத்தின் இராணுவ பலத்தை வெளிப்படுத்தி, தலைவர் மீது இந்திய அரசு திணித்த அழுத்தத்தை வலுவிழக்கச் செய்ய முயற்சி எடுக்கப்பட்டது.

இத்தகையதொரு அரசியல் இலக்குடன் பூநகரி முகாம் தாக்கப்பட்டது.

ஆனால் அருகிலிருந்த இன்னொரு இராணுவ முகாமிலிருந்து (4 ஆம் கட்டை) படை உதவியைப் பெற்றுக்கொண்ட 'கோட்டை, வீழ்ந்துவிடாது தப்பிக்கொண்டது. இருந்தாலும் புலிகளின் இராணுவ பலத்தை அம்முகாம் தாக்குதல் வெளிப்படுத்தியிருந்தது.

இத் தாக்குதல் நடந்த இரண்டாம் நாள் (29 ஆம் திகதி) அமுலுக்கு வந்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம், சிங்களப் படைக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில், பலவீனமான -தம்மால் பாதுகாக்க முடியாத -படை முகாம்களை சிங்கள அரசு விலக்கிக் கொண்டது.

பூநகரிக் கோட்டையிலிருந்தும் அருகிலிருந்த 4 ஆம் கட்டை முகாமிலிருந்தும் சிங்களப் படைகள் விலகிக் கொண்டன.


சில வாரங்களின் பின் இந்தியப் படைகள் பூநகரியில் குடிகொண்டன.

தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளைப் போலவும் பூநகரியையும் அசிங்கம் செய்து அக்கிரமங்கள் புரிந்த இந்திய ஆக்கிரமிப்புப் படைகள், 1989 இன் இறுதியில் அங்கிருந்து வெளியேறின.

மீண்டும் 1991 ஒக்ரோபர் 17 ஆம் நாளன்று, ஊர்காவற்றுறையிலிருந்து மண்டைதீவையும் ஆக்கிரமித்தபடி புறப்பட்ட சிங்களப் படைகள், பூநகரிப் பகுதியை ஆக்கிரமித்து, நாகதேவன்துறை -ஞானிமடம் பகுதியில் ஒரு கடற்தளத்தையும் அமைத்து, பிரமாண்டமான பூநகரி கூட்டுத்தளத்தை நிறுவினர்.

இந்தக் கூட்டுத்தளம், 11. 11. 1993 இலிருந்து 3 நாட்களாக நடாத்தப்பட்ட 'ஒப்பரேசன் தவளை' தாக்குதல் நடவடிக்கை மூலம், விடுதலைப் புலி வீரர்களால் தகர்த்தழிக்கப்பட்டது! ■

**நன்றி:'விடுதலைப் புலிகள்'**




## அத்தியாயம் 7 இன் தொடர்ச்சி

ஈழத்தின் பெரும் பொருளாதார வளம் நிறைந்த மாங்குள விவசாயப் பூமியில், பசுமையாகத் திகழவேண்டிய வயல்களில் எமது போராளிகள், செங்குருதியைப் பாய்ச்சி சாயத் தொடங்கினார்கள். இறுதி நொடியிலும் ஈழ மண்ணுக்கு வளமாகிப் போனார்கள். **சுதந்திரக் காற்றைச் சுவாசித்து சுயமான சுவடுகளைத் தமது தாயக மண்ணில் பதிக்கத் துடித்த இளம் மறவர்கள், வயல் காற்றுடன் கலந்து போனார்கள்.** ஒரு பாசறையில் பிறந்து ஒன்றாய் கூடிச் சிரித்து மகிழ்ந்த இளம் போராளிகள் உயிர்த் தோழன் சாய, உடனிருந்த மற்றையவன் இவனது உறுதியையும் பெற்றபடி வேகமாக எதிரியில் பாய்ந்தான். மடியும் வேளை தானும் மடி கிடைக்காது ஈழமண்ணில் புரண்டு தொட்டாச்சுருங்கிகளின் மேல் உயிர்விடும் சுதந்திர புருடர்கள், இளமையின் இன்பங்களை சுதந்திரத்திற்காக தொலைத்த பீஸ்மர்கள் இவர்கள்.

எதிரி இழப்புக்களைத் தாங்க மாட்டாது ஒவ்வொரு காவலரணாக இழந்து ஓடத் தலைப்பட்டான். இழந்தவற்றை ஒவ்வொன்றாக மீட்டெடுத்தோம். இனிய மாலையில் 4.00 மணியளவில், கோயில்புறத்து மின்சாரப் பாதைக் காவலரண்கள் முற்றாக எம்வசம் வீழ்ந்தன. ஓய்வு அற்ற போராளிகள் உறுதியுடன் இதமான காற்றை உணவாக்கத் தொடங்கினர். எதிரிகள் இப்போது பிரதான முகாமில் அடங்கிப் போயிருந்தனர். **எதிரி தடுமாறத் தொடங்கியமை தெளிவாகப் புரிந்தது.**

**இந்த வேளைகளில் தான் நாம் எமது மக்களிடம் உலர் உணவுகளைக் கேட்கின்றோம். ஏனெனில் இரவில் கைப்பற்றும் காவலரணிற்குச் செல்வதென்றால் மறுநாட் காலை தான் செல்ல முடியும். இந்தச் சூழ்நிலையில் போராளிகள் உண்பதற்கே மக்களிடம் சேகரிக்கின்றோம். இதை மக்கள் எங்களது பொடியளுக்கு என்ற உணர்வோடு செய்து தரும் பட்சத்தில் சத்தியமாக அவை எமக்கு அமுதமாக இருக்கின்றன;** எமக்கு புதிய உத்வேகத்தை அள்ளித் தருகின்றன. உண்மையில் நாம் முட்டைமாவையோ எள்ளுப் பொரிகளையோ உண்ணும் போது முகம் மலர்ந்த தாய்களை, நம் கண் முன்னே காண்கின்றோம். இது பெரும் ஆத்ம திருப்தியைத் தரும்.

23 ஆம் திகதி மாலைப் பொழுது ஏக்கமாகச் சரியத் தொடங்கியது. இன்னும் வேள்விகள் நடைபெறுகின்றன. சூரியன் சிவப்பாகக் கொப்பளித்தான். இனிமையான, பறவைகள் ஒலிகளைக் கேட்க முடியவில்லை. இன்று அவை எங்கோ ஒதுங்கியிருப்பினும் நாளை அவை பூபாளத்தை அமைதிப் பொழுதில் மீட்டும். அது புனித ஆன்மாக்களின் சமாதிகளைத் தழுவிச் செல்வது நிச்சயம். இன்று அது மேலை வானத்தில் தூரத்தே தெரியும் காடுகளின் உச்சிகளைக் கடந்து உள்ளே புகுந்து மறைந்து கொண்டது. இருட்போர்வை வலையாக விரிந்து கிடந்தது.

நேற்றைய சண்டையைவிட குறைவான பீரங்கிகளுடன் தாக்குதலைத் தொடங்குவதற்காக கனகராஜன் குளத்திலிருந்து மாலை 6.00 மணிக்குப் புறப்பட்டோம். சந்தியில் நின்ற மக்கள் எம்மை வழிமறித்து உணவுப் பொருட்களை, சிற்றுண்டிகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். எமது வாகனம் ஊரத் தொடங்க, பின்னால் இருந்தவன் சத்தமிட நிறுத்திப் பார்த்தோம். வெண்துகிலுடன் ஏறத்தாழ 75 வயது வந்த மூதாட்டி குடுகுடுவென வேகமாய் வந்தாள், கையில் உரப்பையில் செய்யப்பட்ட ஒரு பையுடன். இறங்கி மூதாட்டியிடம் ஓடினோம்.

**"என்ன ஆச்சி ஓடிவாறியள்"?**

**"நடந்துதான் வந்தனான். நீங்கள் வெளிக்கிட்டியள், எல்லாரும் இங்க கிட்ட வாருங்கோ".**

**பையுள் ஒரு பூவரசமிலையில் சுற்றியிருந்த திருநீற்றைப் பூசிவிட்டு, கன்னத்தில் முத்தமொன்றை பொக்கை வாயினால் வைத்து அணைத்தாள். சண்டையின் போது ஏற்பட்ட களைப்புகள், உடல்நலக்குறைவு, சக போராளிகளை இழந்த சோகம் யாவும் நொடிப் பொழுதில் மறைந்து, மனம் காற்றில் தவழ்தல் போன்ற உணர்வு. முத்த ஸ்பரிசம் மனதைக் கரைந்தோடச் செய்தது.**

தூரத்தே தெரிந்தாள். என்னையறியாது இருதுளி கண்ணீர் உகுத்தேன். இப்படியான தாய்கள் இருக்கும்வரை நாம் என்றுமே ஓயப் போவதில்லை. அருகிலிருந்த கராட்டி மாஸ்ரர் அம்மாவின் திக்கையே வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தார். முகத்தில் ஒருவித சந்தோசத்தை அனுமானிக்கக் கூடியதாக இருந்தது. "எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்" -மிருதுவாகப் பாடுவது கேட்டது.

எம்மைக் கடந்து சிவப்புப் புள்ளிகள் வரிசையாகப் போவது தெரிந்தது.

"மச்சான் நிற்பாட்டடா... கெலி அடிக்கிறான்" என்று உரத்த குரலில் சத்தமிட, வெளிச்சத்தை அணைத்து ஒரு முதிரை மரத்தடியில் நிறுத்தினான். அந்த வானூர்தியோ இலகுவில் விட்டுவிடவில்லை. சுற்றிச் சுற்றி வந்து தாக்கினான். சிவப்பு நிற ரேசர் ரவைகள் தார் வீதியில் பட்டுத் தெறித்து, பின் மேலெழுந்து மீண்டும் கீழ் விழுவது சிவப்பாகத் தெரிந்தது. சில ரவைகள் வீதியில் பட்டு வெடித்தன. நாம் வீதியருகில் உள்ள நீர் பாயும் கால்வாய்க்குள் இறங்கி நின்றோம். "ரோட்டைத் தான் உழுகிறான்"! ஆரோ சொல்வது கேட்டது. மீண்டும் ஒரு தடவை வீதி நீட்டிற்கு ரவைகளைப் பாய்ச்சி வர, இரு ரவைகள் ரைக்ரரிலும் பீரங்கியிலும் படுவதை சத்தத்தை வைத்து அனுமானிக்கக் கூடியதாக இருந்தது.

ஸ்... ஸ்... ஏதோ இரைந்துவர "5 இஞ்சி போட்டுட்டான் எல்லாரும் கவர் எடுங்கடா" என்ற சத்தத்தில் இரு செல்கள் வீழ்ந்து வெடித்தன. அவை அருகிலிருந்த வயலுக்குள்தான் விழுந்து சிதறின. நேரம் 7.35 காட்டியது.

கையில் சின்ன உருக்குத் துண்டு ஏறிக்கிடந்தது. இழுத்தெடுத்த பின் பீல்ட் கொம்பிரசால் இறுக்கிக் கட்டினேன்.

சரியாக 8.02 இற்கு முதலாவது பீரங்கி வேட்டைத் தீர்க்க ஆரம்பித்தோம். எதிரி உடனடியாக ரவைகளைப் பாய்ச்சி எதிர்ப்பைக் காட்டினான். நேற்றைய உக்கிரம் இன்று இருக்கவில்லை. ரவைகளை எண்ணியே பாய்ச்சினான். செல்களையும் ஆர்.பி.ஜிகளையும் ஓரளவாக இலக்கு நோக்கி ஏவினான். நாம் இன்றைய இலக்காக பிரதான முகாமையும் நெல் சந்தைப்படுத்தும் சபையையும் தேர்ந்து தாக்கினோம். நேற்றைய சண்டையைவிட இன்று உலங்குவானூர்திகளும் குண்டுவீச்சு விமானங்களும்பெரும் பிரச்சினையைத் தந்தன. உண்மையில் நாம் மயிரிழையில் தான் தப்பினோம். ஏனெனில் **வீசப்பட்ட குண்டு ஒன்று நாம் பதுங்கிய நிலையில் எமக்கு 10 மீற்றர் அப்பால் வீழ்ந்து சும்மா கிடந்தது! அது எதிரிக்கொரு துரதிர்ஸ்டமே எனலாம். அடுத்து நாம் பீரங்கியை இயக்க வேண்டி இருந்ததால் அதிர்வில் அக்குண்டு வெடித்திடலாமென்பதால் அதை அகற்றி, ஒரு காப்பரண் இட்டோம்.** இத்தனைக்கும் உலங்குவானூர்திகள் இரண்டு, 50 கலிபரையும் செல்களையும் பயன்படுத்தி எம்மைத் தீர்க்க முயன்றன.

இன்றைய தினம் எமது தரப்பில் இரு போராளிகள் எதிரியின் ஆர்.பி.ஜி. எறிகணையினால் காயமடைந்தனர். இருவரையும் மருத்துவக் குழுவிடம் ஒப்படைத்தபின் தாக்குதலை விரைவுபடுத்தினோம்.

12.54 மணி. இறுதிச் செல்லை பிரதான முகாம் நோக்கி ஏவினோம். மேலே பச்சையும் சிவப்புமாக குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு சுற்றியபடி இருந்தன.

12.59 மணி.

பீரங்கிகளை ஓய்வடையச் செய்தபின் உடனடியாகக் காப்பு எடுக்கும்படி தளபதி கட்டளையிட 'ட்ருங்' என்ற சத்தத்தடன் வீதியில் எதிரி இட்டு வைத்திருந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி பெரிய வெளிச்சத்துடன் வாகனம் உறுமியது.

**"சக்கை லொறியடா கவனமாய்ப் பாருங்கோ" எனக் கத்தியபடி நான் குதிக்க, ஒரு முறை பெரும் ஒளி வெள்ளம் எழுந்தது. பின் காற்று ஒரு முறை முட்டி மோதித் தள்ளியது. இன்னதெனக் கூற முடியாத -வர்ணிக்க முடியாத -சத்தம் காதைப் பிளந்து வானைக் கடந்து சென்றது. காட்டு மரங்கள் ஒருகணம் ஆடி அடங்கின. விலங்குகள் திகைத்து நிற்க கந்தகப் புகை மூக்கை அடைத்தது. ஒரு காவிய நாயகன் கரும்புலியாகி சரித்திரம் படைத்துவிட்டான்!**

### போர்க் அண்ணை!

நான்கு நாட்களிற்கு முன், ஈசி செயரில் சாய்ந்து கிடந்த போர்க் அண்ணாவை நினைத்துக் கொண்டேன். அன்றுதான் வீடு சென்றுவிட்டு வந்து எங்களிற்கு பலகாரம் தந்தபின் சிரித்தபடி இருந்தவர்.

**"என்னடா, உங்கட செல் பொல்லாத சத்தமே? நான் கிட்ட நிற்க மாட்டன்" என பயமாய் நடித்தவர். தாயிடம் எப்படி விடை பெற்று வந்தார்? கவிஞர் ரவீந்திரநாத் தாகூரின் "தாயே உனக்காக" என்ற இதயதுளிகள் நெஞ்சத்தை அடைத்தன. மெதுவாக இரைமீட்டு மென்றுகொண்டேன். தாயே உனக்காக... நான் போகவேண்டிய வேளை வந்துவிட்டது நான் போய் வருகிறேன் அம்மா... உதயத்து மங்கிய இருளில் நேற்றுவரை உன்னுடன் கட்டிலில் படுத்திருந்த உனது குழந்தையை -அவன் இன்னமும் உன்னுடன் படுத்திருக்கிறான் என்ற நினைப்பில் -நோக்கி நீ கைகளை நீட்டும் போது உன்னுடைய குழந்தை அங்கே இல்லை, என்று நான் கூறுவேன். அம்மா நான் போய் வருகிறேன்.**

மெல்லிய காற்றின் அலையாய் வந்து நான் உன்னைத் தழுவுவேன். நீ குளிக்கும்போது நீர்த் துளியாக நான் மாறி உன்னை மீண்டும் மீண்டும் முத்தமிடுவேன்.

கார்கால இருளில் மழைத்துளிகள் இலைகளின் மேல் விழும் போது கட்டிலில் உறக்கமின்றிப் படுத்திருக்கும் உன்னுடைய காதுகளில் என்னுடைய குரல் மெதுவாக ஒலிக்கும். திறந்த யன்னல் ஊடாக உன்னுடைய அறைக்குள் பாயும் மின்னலின் ஒளியோடு வந்து என்னுடைய சிரிப்பும் உன்னை வந்தடையும். என்னை நினைத்துக்கொண்டு நீ தூங்காது படுத்துக் கொண்டிருக்கையில் வானத்து நட்சத்திரக் கூட்டங்களிடையே இருந்துகொண்டு தூங்கு அம்மா தூங்கு என்றுதான் கூறுவேன்.

சந்திரனின் ஒளிக்கீற்றுக்களினூடே நான் உன்னுடைய கட்டிலை அடைந்து தூங்கிக் கொண்டிருக்கும் உன் மார்பில் மேல் தலை வைத்துப் படுத்திருப்பேன். நான் ஒரு கனவாக உன்னுடைய கண்ணிமைகளின் சிறிய இடைவெளியூடாக உனது உறக்கத்தின் ஆழத்திற்குச் சென்றுவிடுவேன். நீ நித்திரை விட்டெழுந்து பரபரப்புடன் எழும் போது ஒரு மின்மினிப் பூச்சியாய் வெளியே இருட்டினுள் தாவி மறைவேன். பூசைக் காலத்தில் அயலவர்களின் பிள்ளைகள் எங்களுடைய வீட்டுள் விளையாடிக் கொண்டிருக்கும் போது புல்லாங்குழலின் ஓசையினூடாக நான் வந்து உன்னுடைய இதயம் முழுவதும் பரவி நிற்பேன்!

பக்கத்துவீட்டு மாமி பிரசாதத்துடன் வந்து குழந்தை எங்கே என்று கேட்டால் என்னுடைய செல்வன் என்னுடைய கண்மணிகளிலும் சரீரம் முழுவதிலும் நிறைந்து நிற்கிறான் என்று மெதுவாக அவளிடம் கூறு. போர்க் குழந்தையும் அம்மாவிடம் இப்படித்தான் கூறியிருப்பானோ?'

**(தொடரும்...)**

**"கெட்டித்தனமாய் சண்டை பிடிச்சு வெற்றியோட வரவேணும். நான் அந்தக் குடிலில இருப்பன்".**

**தழுதழுத்த குரலில் அந்த ஈழத்தாய் கூறினாள். இதை விட வேறு என்ன பேறு பெற்றோம் என்பதைப் போலிருந்தது.**

**"இன்றைக்கு எப்படியும் அவங்களைக் கொன்று இடத்தைப் பிடிக்காம வரமாட்டம் அம்மா".**

உணர்ச்சியோடு ஏகமாக எல்லோரும் சொன்னோம், ஒவ்வொருதராக பைக்குள்ளிருந்த பொங்கலை எடுத்து வாய்க்குள் தீத்தி விட்டாள் -அந்த அன்பான தாய். எமக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அந்த வெண்பொங்கல் சர்க்கரைப்பாகுவாய் இனித்தது. உடலில் இழந்து போன பலம் அனைத்தும் புத்துணர்வு பெற்றதாய் இருந்தது. சோர்ந்து கிடந்த நாடிகள் வேகமாகத் துடித்தன.

எந்த உணவாலும் வெற்றியாலும் பெறமுடியாத சந்தோசத்தை இந்த தேசப்பற்று மிகுந்த தாய் என்னவாய் ஊட்டிவிட்டாள்! நாம் மறையும் வரை பார்த்தபடியே நின்றாள். அன்னையின் வடிவிலே இருட்டினுள் வெள்ளைச் சேலையுடன் அம்மா

"இனிப் பார்க்கேலாது! அடிச்சா அடிக்கட்டும்! இதயன், ரைக்ரரை எடடா"! என்றவுடன் இதயன் துணிவாக வேகமாக ஓட்டிச் செல்ல, வீதியின் இருபுறமாகவும் ஓடத் தொடங்கினோம். உலங்குவானூர்தி கலைத்துக் கலைத்துச் சுட்டபடி வந்தான்.

"தலைக்கு மேல போறான், கழட்டிப் போட்டுடுவான் கவனம் என்று சொல்ல, கும் கும் என செல்கள் 100 யார் பின்புறமாக வீதியில் வீழ்ந்து வெடிக்க, சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஓடினோம்.

அது நேர்கோட்டில் சென்றது. திரும்ப உசாரானோம். நன்றாக கரைகளில் பதுங்கிக்கொள்ள 50 கலிபர் ரவைகள் வீதியை துளைத்துச் சென்றன. இதயன் ரைக்ரருடன் காவலரண்புறமாகத் திரும்புவது தெரிந்தது. வயல் வெளிகளூடாக, பற்றைகளூடாக தண்டவாளத்தைக் கடந்து ஓடினோம். உலங்குவானூர்தி துரத்தியபடி வந்தது. திடீரென விரைவுபெற்று உறுமியது. அடுத்து ஸ் ஸ் என இரு ரொக்கட் மோட்டர்கள் தலைக்கு மேலாகச் சென்று மரமொன்றில் மோதிச் சிதறின. "ஆ" என மாஸ்ரர் முனகியபடி ஓட, என்ன நடந்தது? வினவுவதற்குள் ரவைகள் உஸ்... ஸ் என துரத்தின. மிகுந்த கவனத்துடன் வந்தடைந்தோம். மாஸ்ரரின்

இது ஒரு புதிய போர்ப்பரணி !
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

இந்த புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில்விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததி யின் விடிவுக்குவிளக்கேற்றி வைப்பார்கள்.

- தமிழீழத் தேசியத் தலைவர்
திரு.வே.பிரபாகரன் அவர்கள்

# சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள்

*சென்ற இதழில் (18-3-94) 'சாவுக்கு விலங்கிட்ட நெருப்பு மனிதர்கள்' என்ற தலைப்பில் கரும்புலி மேஜர் கணேஸ் அவர்களின் முழு வரலாற்றையும் வெளியிடாமல் விட்டமைக்காக மனம் வருந்துகின்றோம். அதன் தொடர்ச்சியை இங்கு தருகின்றோம்.*

கணேசா!

உனது வீட்டுக்கு நீ போய்வந்த அந்த இறுதிப் பயணம்.

அதை நினைக்கும் போதெல்லாம் உன் அம்மாவின் விழியோரங்களில் நீரின் கசிவு.

"பழஞ்சோறு குழைச்சுத் தீத்தி விடணை" என்று சாப்பிட்டாயாம்.

ஒருநாளுமில்லாதது போல, அப்பாவையும் அம்மாவையும் கொண்டு நீர் அள்ளிக் குளித்தாயாம்.

"தலையெல்லாம் காஞ்சுபோய்க் கிடக்குதேடா.... கொஞ்சம் எண்ணை வையேன்ரா...." என்று ஆதரவாகக் கேட்ட அம்மாவிடம், "நாளைக்கு கடல் தின்னப்போற தலைதானேயணை...." என்று சிரித்தபடி சொன்னாயாம்.

முன்னர் யாரோ சொன்னது நினைவுக்கு வர, இப்போது சாதுவாகச் சந்தேகமும் எழ? ஆச்சரியத்தோடும், "நீ கரும்புலியாய் போகப் போறியாம் தம்பி..... உண்மையாவோடா....?" என்று பரிதாபமாகக் கேட்ட அம்மாவை, சிரித்துக் கொண்டு வந்து கட்டிப் பிடித்துக் கொஞ்சி, "உன்னை விட்டிட்டுப் போவனோணை அம்மா!" என்று சொல்லிவிட்டுப் போனாயாம்.

இப்போது-

கண்ணீரோடு அந்தத் தாய், தன் வீர மகனின் படத்திற்குப் பூப் போட்டுக் கொண்டிருக்கிறாள்.

'ஒப்பரேசன் தவளை'க்கான உற்சாகமான முன்னேற்பாடுகள்.

உறக்கமற்ற இரவுகள்; ஓய்வற்ற நாட்கள்.

கடற்புலி வீரர்களின் கடுமையான கடற்பயிற்சி.

வெடிமருந்துப் படகினை எதிரியின் தளத்தோடு மோதும் செயல்முறையை, கணேஸ் சலிப்பின்றிக் களைப்பின்றிப் பயின்றான்.

அந்த நாள் வந்தது -

சர்வதேச செய்தி நிறுவனங்களின் அலைவரிசைகளில் புலிகளின் இயக்கத்தை முதன்மைப்படுத்திய நாள் அது.

சாமம் கழிந்த நள்ளிரா வேளை. சமர் ஆரம்பித்துவிட்டது; பூநகரியில் புயல் வீசத் தொடங்கிவிட்டது.

நாகதேவன்துறை கடற்படைத் தளத்தைச் சூழ்ந்த புலிகளின் கடல் -தரை வழிகளிலான ஆக்ரோசமான பாய்ச்சல்.

அங்கிருந்த 'றாடர்' கோபுரமும், தகவல் பரிவர்த்தனை நிலையமும்தான் கணேசின் இலக்கு.

உரிய நேரம் வந்தது. உத்தரவுக்காகக் காத்திருந்தவன், இது தான் உரிய தருணம் என்பதைத் தானாகவே தீர்மானித்தான்; புறப்பட்டான்.

கடலில் - தனது தளத்தைச் சுற்றி -எதிரி அமைத்திருந்த முட்கம்பி வேலிகளை எகிறிக் கடந்து பாய்ந்தது கணேசின் வெடிமருந்துப் படகு.

இலக்குப் பிசகாத தாக்குதல். தொடரும் வெடியோசைகளுக்கு நடுவே கடலதிரும் குண்டோசை. கண்ணிமைப் பொழுதில் பிரகாசித்த ஒளிப்பிழம்பு.

யாழ்ப்பாணக் கடல் நீரேரியில், தமிழர்களின் பிணங்களை மிதக்கச் செய்தவர்களை, அதே கடல் நீரேரியிலேயே பிணங்களாக மிதக்கச் செய்துவிட்டு, உப்பு நீராக உருமாறிப்போனான் அந்த வீரன்! ■



**கரும்புலி மேஜர் கணேஸ் ■ கரும்புலி மேஜர் கோபி**

**"மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று, மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்தது. அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்ப்பதற்கு, எதையும் செய்ய அவர்கள் தயாராக இருந்தார்கள்".**

*-தலைவர்-*

## கடற் கரும்புலி மேஜர் கோபி

**படித்து முன்னேற முடியவில்லை என்ற வேதனை அவனது மனதைப் பாரமாக அழுத்தும்போதெல்லாம், தாங்கள் அவலமாக ஓடிவந்த அந்த நாள் அவனது நினைவில் உறைக்கும்.**

'ஒப்பரேசன் தவளை'க்கு இன்னும் பத்தே நாட்கள் தான் இருக்கின்றன.

கோபி ஊருக்குப் போனான்.

தாயினதும், தனயனதும் மகிழ்ச்சிகரமான ஒரு சங்கமம். பாசம் கரைபுரண்ட அன்பு முத்தங்களின் பரிமாற்றம். எப்பவோ கேட்க வேணும்போல இருந்த தனது நீண்டகால மன உளைச்சலை அம்மா, மகனிடம் இப்போது வெளிப்படுத்தினாள்.

"உனக்குக் காலும் இல்லைத் தானே தம்பி..... இனியும் இயக்கத்தில இருந்து என்னப்பன் செய்யப்போகிறாய்....?"

அந்தத் தாயுள்ளம் ஏக்கங்களோடு ஆதங்கப்பட்டது.

"காலில்லாட்டியும் பரவாயில்லையம்மா.... இயக்கம் என்னைப் பாத்துக்கொள்ளும்.... நான் கடலில வேலை செய்வன், கடற்புலிகளில படகு ஓடுவன்..."

"கடலில நேவி வந்திட்டா என்னடா தம்பி செய்வாய்....?..!"

இது அன்னையின் அச்சம். அது இயல்பானது; அவன் புரிந்து கொண்டான்.
புன்னகையோடு பதில் வந்தது.

"பயப்படாதீங்க அம்மா... பொடியள் இருக்கிறாங்கள். என்னைக் காப்பாத்துவாங்கள்; விடமாட்டாங்கள்."

அம்மாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லைத்தான். இருப்பினும், முகத்தில திருப்தி தெரிந்தது.

பழைய நண்பர்கள் சேர்ந்தனர்; 'பிரிந்தவர் கூடினால்....!' அது ஒரு ஆரவாரமான சந்திப்பு.

"அடுத்த மாவீரர் நாளுக்கு எங்கட வீட்டுக்காரரும் துயிலுமில்லம் போவினமடாப்பா"

- கோபி சொல்லிவைத்தான்.

"இவன் நல்ல பகிடிவிடுகிறான்." நண்பர்கள் ரசித்துச் சிரித்தனர்.

"எங்கட வீட்டு ஒழுங்கைக்கு 'கோபி வீதி' எண்டு பேர் வைக்க வேண்டிவரும்"

- கோபி இதையும் சொல்லி வைத்தான்.

நாலைந்து நாட்கள் இனிமையாகக் கழிய, எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு கோபி போய்விட்டான்.

* * * * *

1989 ஆம் ஆண்டின் மையப்பகுதியில், அவன் தன்னை ஒரு விடுதலைப் புலி வீரனாக்கிக் கொண்டான்.

'சேரா பிராவோ' முகாமின் 2 ஆவது தொகுதியில் பயிற்சி எடுக்கும் காலத்திலேயே, அவனது ஆற்றல்கள் வெளிப்படத் துவங்கின.

மன்னார் மாவட்டப் படையணியில் இருந்து, பல்வேறு சண்டைகளிலும் பங்காற்றி தனது திறன்களைக் காட்டிய கோபி, சிலாபத்துறை இராணுவ முகாம் மீது நாம் தொடுத்த மிகப் பெரிய தாக்குதல் முயற்சியின்போது, பலத்த காயத்துக்குள்ளானான்.

சிகிச்சை முடிந்து - காயம் மாறி -அவன் வந்த பின்பு, 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி'யின் உருவாக்கத்துக்கென மன்னார் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்ட புலிகளின் அணி, அவனையும் கொண்டிருந்தது.

சாள்ஸ் அன்ரனி படையணி, அவனது ஆற்றல்களுக்கும் திறமைகளுக்கும் களம் அமைத்துக் கொடுத்தது என்று சொல்லலாம்.

அந்தப் படையணி எதிரியை எதிர் கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த வீரன் தீரத்துடன் களமாடினான்.

சாள்ஸ் அன்ரனி படையணியில், கண்ணிவெடிப் பிரிவில்தான் அவனது பணி துவங்கியது. கால அசைவில் தளபதி பால்ராஜின் பாராட்டுக்களைப் பெற்ற போராளிகளுள் ஒருவனாக அவன் வளர்ந்தான்.

சிங்களப் படையினர் விழி இமைக்காது காவலிருக்கும் அரண்களின் ஊடுகளுக்குள் அந்த வீரனது இரவுகள் கழியும்.

தனது பாதுகாப்புக்கெனத் தன்னைச் சூழ எதிரி விதைத்து வைத்திருக்கும் மிதி வெடிகளையும், பொறி வெடிகளையும் அகற்றிவிட்டு, அவனது அழிவுக்கென அவனுக்கு நடுவில் எமது வெடிகுண்டுகளையும் கண்ணிப் பொறிகளையும் நாட்டும் அபாயகரமான பணி அவனுடையதாக இருந்தது.

எதிரி குடியிருந்த இடங்களுக்கெல்லாம் அவன் குண்டு கொண்டு போனான்.

கண்ணிவெடிப் பிரிவில் திறமையான முறையில் செயலாற்றும் போதே, துணிகரமாக அவன் பார்த்த வேவு வேலைகளும், வேவுப் பணியில் அவன் காட்டிய ஈடுபாடும் அவனை ஒரு வேவுப்படை வீரனாக்கியது.

அவனது ஆர்வத்திற்கும் ஊக்கத்திற்கும் வழியமைத்து நெறிப்படுத்திய தளபதி பால்ராஜ், கண்ணிவெடிப் பிரிவில் செயற்படும் அதே சமயத்திலேயே இராணுவ வேவுப் பிரிவில் செயற்படவும் அவனை நியமித்தார்.

உயிராபத்து நிறைந்த சூழ்நிலைகளில் -எதிரியின் உள்ளங்கையில் ஏறி அவனது கைரேகைகளை மனனம் செய்து -மதிநுட்பம் மிக்கவிதமாக கோபி செய்த வேவுப் பணிகள் அதிசயமானவை. தாக்குதல் திட்டங்களைத் தயாரிக்கின்றபோது, அவற்றின் பயன்பாடுகளின் தார்ப்பரியங்கள் உணரப்பட்டன.


ஆனையிறவுக்குக் கிழக்கே - தட்டுவன்கொட்டியில் -சிங்களப் படையின் 22 காவலரண்களை வீழ்த்திய தாக்குதலின் வெற்றிக்காக, மேஜர் கிண்ணியோடு சேர்ந்து அவன் ஓய்வற்று உழைத்தான். தாக்குதல் இலக்கு தெரிவு செய்யப்பட்டதிலிருந்து சண்டை முடிந்து வெளியேறுகின்றவரை, இடைப்பட்ட காரியங்கள் எல்லாவற்றிலும் கோபி இருந்தான்.

இதன் பின்னர், பூநகரிக்குத் தெற்கே பள்ளிக்குடாப் பகுதிக் காவலரண்கள் மீதான பெரியதொரு தாக்குதலுக்கான தயாரிப்புக்கள் செய்யப்பட்டன. அங்கு கோபி, இரவு பகலின்றிப் பாடுபட்டான். தாக்கும் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு வேவு பார்த்து, தாக்குதல் அணிகளுள் ஒரு தொகுதிக்குப் பாதைகாட்டி, தாக்குதல் குழுவோடு களத்திலும் இறங்கி அந்தத் தாக்குதலில் கோபி ஆற்றிய பங்கு, முக்கியத்துவம் மிக்கது. ஆனாலும், ஆற்ற முடியாத பெரும் சோகம் அவனது இதயத்தைக் கவ்விய இழப்பாக, அந்தத் தாக்குதலில் லெப். கேணல் சுபன் களப்பலியாக நேர்ந்துவிட்டது.

அடுத்ததுதான் பலாலி -

சிங்கள ஆட்சியாளர்களையும் படைத்தளபதிகளயும் அதிர்ச்சியில் ஆழ்த்திய மிகப் பெரிய தாக்குதல் நடவடிக்கை அது!

*தொடர்ச்சி 13ம் பக்கம்.....*




# பிரிட்டன்:

## தேசியவாதம் உறுதிமிக்க ஓர் அரசியல் சக்தி ; காலம் கடந்து பிரிட்டன் கற்ற பாடம்

உலகையே பெருவியப்பில் ஆழ்த்திய செய்தியொன்று அண்மையில் பிரித்தானிய நாளேடு ஒன்றில் வெளியிடப்பட்டது. அச்செய்தியை இதுவரை காலமும் மறைத்து இரகசியமாக வைத்திருந்த பிரித்தானிய பிரதமர் பெரும் சங்கடத்திற்கும் நெருக்கடிகளுக்கும் இதனால் உள்ளாக நேர்ந்தது. பிரதமர் யோன் மேஜர் பதவி விலகவேண்டுமென்ற குரல்களும் எழுந்தன. ஏனென்றால் பல நூறு முறை பயங்கரவாதிகள் என்றும் தக்க பாடம் படிப்பிப்போம் என்றும் வீராவேசக் குரல் எழுப்பிய பிரித்தானிய அரசு, இரகசியமாக ஐ. ஆர். ஏ. எனப்படும் ஐரிசு குடியரசுப் படையினரோடு பேச்சுவார்த்தைகள் நடாத்த முயன்று கொண்டிருக்கிறது என்பது தான் அச்செய்தி. கடந்த சனவரி மாதத்திலிருந்தே ஐரிசு குடியரசுப் படையின் அரசியல் பிரிவான 'சின்பெயின்' கட்சியோடு பிரித்தானிய அரசு வட அயர்லாந்து சிக்கலை அமைதி வழியில் தீர்க்க ஏதேனும் வழியிருக்கிறதா என அறிய தொடர்பு கொண்டதை இக் கட்சித் தலைவர் யெரி அடம்சும் ஒத்துக் கொண்டார். யார் முதலில் தொடர்பு கொண்டார்கள் என்பதில் இரு தரப்பாரும் முரண்பட்ட போதும் இப்போது தொடர்பினை மேலும் பலப்படுத்த முயற்சிகள் நடைபெறுவதை இரு தரப்பாரும் வரவேற்கின்றனர். பிரித்தானிய அரசாங்க உயர் அதிகாரியொருவர் "தொடர்பிற்கான கதவுகள் திறந்தே உள்ளன. அமைதிக்கான முயற்சியை தொடர்வதில் மிக்க உறுதியாகவுள்ளோம்" என்கிறார். அது போலவே 'சின்பெயின்' தலைவரும் "நானும் வட அயர்லாந்துச் சிக்கல் தீர்வதையே விரும்புகிறேன். ஆனால் ஐரிசு விடுதலை இயக்கம் தோன்றியமைக்கான காரணங்களும் அற்றுப்போக வேண்டும்" என்கிறார்.

எனவே 'தலைக்கு வந்த கத்தி தலைப்பாகையோடு போனது போல்' தனது ஆட்சிக்கு ஏற்படவிருந்த ஆபத்தினை புத்திசாலித்தனமாகக் கையாண்டதன் மூலம் தனது அமைதி முயற்சிகட்கு மேஜர் இப்போது மட்டான ஆதரவினை பெற்றுவிட்டார். ஆனால் இவரின் இம்முயற்சியை முற்றாக எதிர்ப்போரும் உளர். இவர்கள் வட அயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதத்தினை சார்ந்த பிரதான அரசியல் கட்சித் தலைவர்கள், வட அயர்லாந்து பிரித்தானியாவோடு இணைந்திருக்க வேண்டும் என விரும்புவதால் இணைவாளர்கள் (UNIONIST) என்றழைக்கப்படுவோரினால் மிகத் தீவிரமானவரும் புரட்டஸ்தாந்து சனநாயக இணைவாளர் கட்சித் தலைவருமான இயன் பெய்ஸ்லி (IAN PAISLEY) அவர்கள் (பிரித்தானிய ஆட்சியாளர்) சொன்னார்கள் தாம் அகப்படும் வரை பொய் சொன்னார்கள்" என கடுமையாக பிரித்தானிய அரசைக் கண்டித்தார். இச்செய்தியின் பின் வட அயர்லாந்தில் மோதல்கள் மேலும் அதிகரித்து விட்டன. மத தீவிரவாத புரட்டஸ்தாந்து குழுவினர்கள் மேல் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

25 வருடங்கட்கு மேலாக 3000 மக்களுக்கு மேல் பலிகொண்ட இப்போராட்டம் வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்களின் இதுவரை நிறைவேறாத அபிலாசைகளின் வெளிப்பாடாக ஐரிசு குடியரசுப் படையினர் மிக வித்தியாசமான போராட்டமொன்றை நடத்தி வருகின்றனர். மிகத் தீவிரவாதிகள், மோசமான பயங்கரவாதிகள் என இவர்களை பலரும் பட்டம் சூட்டி மட்டம் தட்டப் பார்த்தாலும் இன்றுவரை தமது தேர்ந்தெடுத்த வழிமுறையான நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல்கள், அதிர்ச்சியூட்டும் குண்டு வெடிப்புக்கள் எனத் தொடர்ந்து அலுக்காது, சலிக்காது போராடி வருகின்றனர். இவர்களது இப்போராட்டத்திற்கான காரணங்கள் மிகப் பழமையானவை. வரலாற்று வழிவந்தவை. பிரித்தானியா எனப் பொதுவாக இன்று அழைக்கப்பட்டாலும் இங்கிலாந்து ஸ்கொட்லாந்து, வேல்சு, வட அயர்லாந்து எல்லாம் சேர்ந்த நாடுகளின் கூட்டமைப்பாகவே இது உள்ளது என்பதும் அதனாலேயே ஐக்கிய இராட்சியம் என்றும் பிரித்தானியா அழைக்கப்படுவதும் தெரிந்த விடயமே. 1536 ஆம் ஆண்டளவில் இங்கிலாந்தும், வேல்சும் இணைக்கப்பட்டது. ஸ்கொட்லாந்து இணைப்போ நீண்டகாலச் சச்சரவுக்குள்ளாகி 1707 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு வாக்கெடுப்பில் மிகச் சிறிய பெரும்பான்மை வாக்குகளால் ஸ்கொட்லாந்து இணைய நேரிட்டது. அங்கு இன்றுவரை அதிருப்தி நிலவுகின்ற போதும் அயர்லாந்து இணைப்பே பெரும் சிக்கலாகி விட்டது. 1800 ஆம் ஆண்டில் அயர்லாந்து தீவு இங்கிலாந்தோடு இணைக்கப்பட்டது. என்றாலும் 1921 ஆம் ஆண்டு கத்தோலிக்க மதத்தைப் பெரும்பான்மையாகப் பின்பற்றும் அயர்லாந்தின் பெரும்பான்மைப் பகுதிகள் இங்கிலாந்திலிருந்து பிரிந்து சென்று தம்மை அயர்லாந்து குடியரசு என இறைமையுள்ள தனிநாடாக்கி விட்டனர். இதன் தலைநகரே டப்ளின் ஆகும். இன்று 35 இலட்சம் மக்களைக் கொண்ட அயர்லாந்துக் குடியரசில் 95 வீதமானோர் கத்தோலிக்கராவர். இதேசமயம் புரட்டஸ்தாந்து மதத்தினை பெரும்பான்மையாகக் கொண்ட வட அயர்லாந்தின் 6 மாநிலங்களும் தமது மத அடிப்படையில் இங்கிலாந்தோடு தொடர்ந்து இணைந்திருப்பதையே விரும்பினும் இப்பகுதியின் 16 இலட்சம் மக்களில் மூன்றிலொரு பகுதியாகவுள்ள கத்தோலிக்க மக்களோ இதனை விரும்பாது அயர்லாந்துக் குடியரசோடு சேர்ந்திருக்கவே விரும்பினர். எனினும் இன்றைக்கு 70 ஆண்டுகட்கு முன்னர் பிரித்தானிய நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டமொன்றின் மூலம் கத்தோலிக்கரின் எதிர்ப்பைக் கணக்கிலெடுக்காது பெல்பாஸ்ற்றைக் கொண்ட வட அயர்லாந்துப் பகுதி தொடர்ந்தும் இணைக்கப்பட்டது. எனவே அன்றிலிருந்து கத்தோலிக்க மக்களிடையே பிரித்தானிய எதிர்ப் போராட்ட வடிவம் பெற்று பிரித்தானியப் படைகள் எதிரிப் படைகளாகக் கணிக்கப்பட்டன. எனவே இன்று இக் கத்தோலிக்க மக்கள் அயர்லாந்துக் குடியரசோடு இணைவதன் மூலம் தம்மை தன்னாட்சி பெற்ற மக்களாக்க போராடி வருகின்றனர். இப் போராட்ட வெளிப்பாடாக ஐரிசு குடியரசுப் படை மிகப் பிடிவாதத்தோடு இயங்கி வருகின்றது.

ஐரிசு தேசியப் பிரச்சினை கார்ல் மாக்சின் கவனத்தையும் கவர்ந்தது என்பது வரலாறு. உலகின் மிக நீண்ட காலமாக நடைபெற்று வரும் போராக இப் போராட்டம் கருதப்படுகின்றது. ஒரு காலகட்டத்திலே மிகச் சிக்கலான மூன்று சர்வதேசியப் பிரச்சினைகளுள் அயர்லாந்துப் பிரச்சினையும் ஒன்றாகக் கருதப்பட்டது. (மற்றையவை தென் ஆபிரிக்க, மத்திய கிழக்கு பிரச்சினைகளாகும்.) என்றாலும் அப்படிப்பட்ட சிக்கலை அடிப்படையாகக் கொண்ட ஐரிசுக் குடியரசுப் படைகளின் (ஐ.-ஆர். ஏ.) நடவடிக்கைகள் எப்போதும் விவாதத்திற்கும் விமர்சனத்திற்கும் உட்பட்டதாகவே இருந்து வந்துள்ளது. உலகிலே தலைசிறந்த பயங்கரவாத இயக்கமாக அதனை மேற்குலகமும் அதனைப்பின்பற்றி ஏனைய உலகர்களும் சித்தரித்து வந்தனர். இவர்கள் வட அயர்லாந்தில் பிரித்தானிய இராணுவத்தைத் தாக்குவதோடு நின்று விடாமல், . பிரித்தானியாவின் முக்கிய மைய நகரங்களிலேயே பாரிய குண்டு வெடிப்புக்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி மிகப் பரபரப்பை எப்போதும் ஏற்படுத்துபவர்கள். அண்மைக் காலமாக 1992 ஆம் ஆண்டிலிருந்து இவர்கள் குறிப்பாக இலண்டன் மாநகரிலே ஏற்படுத்தி வரும் குண்டு வெடிப்புத் தாக்கங்கள் பேரழிவுகளை ஏற்பத்தி வருகின்றன. 1993 இல் இலண்டன் மாநகரின் வர்த்தக மையமொன்றிலே இவர்கள் வைத்த பாரிய குண்டுவெடிப்பு ஏற்படுத்திய அழிவின் பெறுமதி 100 கோடி பவுண்கள் ஆகும். ஆனால் இவர்கள் எங்கு குண்டு வைத்தாலும் அது பொதுமக்கள் மையங்களாக இருப்பின் முன்னறிவித்தல் கொடுப்பது வழக்கம். அல்லாவிடின் பல்லாயிரக்கணக்கான மக்கள் இதுவரை இறக்க நேரிட்டிருக்கும். இவர்களுக்கும் உலகெங்கும் ஆதரவு இல்லாமலில்லை. முன்னர் லிபியத் தலைவர் உதவியிருக்கிறார். அது. மட்டுமன்றி அமெரிக்காவில் வதியும் ஐரிசு மக்கள் மிகத் தாராளமாக இவர்களுக்கும் உதவுகிறார்கள். எனவே அவர்கள் தமது தாயகப் பகுதியில் மட்டுமன்றி தம்மை படை கொண்டு அடக்க முற்படும் இங்கிலாந்திலும் தமது போராட்டத்தை விரிவுபடுத்தி மிக நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில் அண்மைக்கால பேச்சுவார்த்தைத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்பேச்சு வார்த்தைகட்கு முன்னதாகவே பிரதமர் யோன் மேஜருக்கும் அயர்லாந்துக் குடியரசின் பிரதமர் அல்பேட் றெனோல்ட்சுக்கும் (ALBERT REYNOLDS) பல சுற்றுப் பேச்சுக்கள் வட அயர்லாந்து அமைதி பற்றி நடந்துள்ளன. எனினும் ஐ. ஆர். ஏ. அமைப்பின் அரசியல் பிரிவோடு பேசவேண்டிய நிர்ப்பந்தம் இன்று பிரித்தானிய அரசுக்கு உருவாகியுள்ளதாகக் கருதப்படுகின்றது.

**பாலகுமாரன் -தமிழீழம்**

முதலாவதும் முக்கியமானதுமான ஐரிசு விடுதலைப் படையின் குண்டு வெடிப்புக்கள் இன்று இங்கிலாந்தின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கச் செய்கின்றன. இலண்டன் தெருக்கள் இன்று எவருக்கும் பாதுகாப்பு அற்றவையாகிவிட்டன. புகையிரத நிலையங்கள், முக்கிய சந்தைப் பகுதிகள், மக்கள் கூடுமிடங்கள், வங்கிகள், படை முகாம்கள், நிதி நிறுவனப் பகுதிகள், வர்த்தக மையங்கள் எங்கும் தொடர்ந்தும் குண்டு வெடிப்புக்கள் நடந்த வண்ணமேயுள்ளன. இறுதியாக இத்தகைய குண்டு வெடிப்புக்களால் ஏற்பட்ட சேதம் 20 பில்லியன் டொலர் (2000 கோடி டொலர்) என பொதுவாக மதிப்பிடப்படுகின்றது. தாங்க முடியாத பெரும் தொகை இது. அத்தோடு உலக அமைதி பற்றி வாய் கிழியப் பேசும் பிரித்தானியாவிற்கு இக்கட்டான சூழல். ஊருக்கு மட்டும் தானா உபதேசம்? என்கிற கேள்வி எழுந்துள்ளது. தென்னாபிரிக்காவின் மத்திய கிழக்கின் அமைதிக்கு பேச்சு வார்த்தை என்றால் சொந்தப் பிரச்சினையைத் தீர்க்க மட்டும் மாற்று வழியா என்கிற வினா எழுந்துள்ளது. அது மட்டுமன்றி இந்தியா, சிறீலங்கா போன்ற நாடுகள் எதிர்ப்பது போல வெளியார் தலையீடு வடக்கு அயர்லாந்துச் சிக்கலைத் தீர்க்க அனாவசியம் என்று மேஜர் கூறி வருகின்றார். ஐ. நாவின் கவனம், அமெரிக்க கவனம் வட அயர்லாந்துப் பக்கம் இப்போது திரும்பியுள்ளது. பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் தன்னை நடுவராக இவ்விடயத்தில் செயற்பட வேறு அனுமதி கேட்டு வருகிறார். இவற்றினை ஏற்க மேஜர் மறுத்தாலும், சொந்தமாக முயற்சிக்க வேண்டிய நிலைக்கு அவர் இப்போது தள்ளப்பட்டுள்ளது தெளிவாகின்றது. எனவே கறுப்பரும், வெள்ளையரும், யூதரும், பாலஸ்தீனியரும் பேச முடியும் என்றால் ஏன் கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்தியரும் பேச முடியாது என்பதே அங்குள்ள கேள்வியாக இன்றுள்ளது.

எனவே அமைதி வழியைக் காண்பதற்காக அயர்லாந்துக் குடியரசின் பிரதமரோடு உச்சி மாநாடொன்றை பிரித்தானியப் பிரதமர் விரைவில் நடத்தவுள்ளார். ஏற்கனவே 'சின்பெயின்' கட்சியை அங்கீகரிக்காவிட்டாலும் பேச்சுவார்த்தையில் ஈடுபட அவர் தயாராகி விட்டார். இதற்கிடையில் பெல்பாஸ்ற்றில் அதிகரித்து வரும் படுகொலைகள் அமைதி தேட வேண்டியதன் அவசியத்தை மேலும் வலியுறுத்துகின்றன. கடந்த 1993 அக்டோபர் மாதம் மேற்கு பெல்பாஸ்ற் பகுதியின் முக்கிய கடைப் பகுதியில் திட்டமிட்ட நேரத்திற்கு முன்னதாகவே குண்டொன்று வெடித்ததால், குண்டைக் காவிச் சென்றவரும் (ஐ. ஆர். ஏ. உறுப்பினர்) வேறு 9 புரட்டஸ்தாந்து மக்களும் கொல்லப்பட்டனர். பின் 2 நாள் கழித்து பழிக்குப் பழியாக 7 கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இவ்வாறாக வார முடிவில் மொத்தம் 17 கத்தோலிக்கர் கொல்லப்பட்டனர். இத்தகைய மதத்தின் பெயரால் நடக்கும் மோதல்கள் பிரித்தானிய சனநாயகத்தின் மறுபக்கமாகும்.


பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் பிரச்சினைகளுக்கு இதன் மூலம் தீர்வு காணப்படுமா என்பது இப்போது கூற முடியாத விடயம். ஏனென்றால் மிகக் கடுமையான நிலைப்பாடுகளே எல்லாத் தரப்பிலும் இதுவரை நிலவி வந்துள்ளது. வட அயர்லாந்து புரட்டஸ்தாந்து பிரிவினர் எத்தகைய பேச்சுக்களையும் குழப்பவே முயற்சிப்பர். அதே சமயத்தில் பிரித்தானிய அரசோ இம் மக்களின் அச்சத்தைப் போக்கும் முகமாக அயர்லாந்துக் குடியரசு யாப்பில் வட அயர்லாந்திற்கு உரிமை கோரும் விதிகளை நீக்கிவிடுமாறு கேட்டு வருகின்றது. அயர்லாந்துக் குடியரசோ முதலில் பிரித்தானிய மக்களின் உரிமைகள் தத்துவங்களை ஏற்க வேண்டுமெனவும் வட அயர்லாந்திலும், அயர்லாந்துக் குடியரசிலும் என இரண்டு மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்புக்கள் இவ்விடயமாக நடத்தப்பட வேண்டுமென கோரி வருகின்றது. எனவே உடனடியாக பேச்சு வார்த்தைகள் பயன்தரும் நிலையில் இல்லை. இதற்கிடையில் ஐ. ஆர். ஏ. இயக்கமோ வழமை போல் தனது குண்டு வெடிப்புக்களை அரங்கேற்றி வருகின்றது. இருந்த போதும் தொடரப்படும் பேச்சுக்கள் காரணமாக, சில காலம் தனது நடவடிக்கைகளை ஐ. ஆர். ஏ. இடைநிறுத்தி 'சின்பெயின்' கட்சியோடு நேரடியாக பிரித்தானிய அரசு பேச வழி வகுக்கக்கூடும் என்ற நம்பிக்கை இப்போது முளைவிட்டுள்ளது.

அயர்லாந்து குடியரசின் பிரதமர் குறிப்பிட்டது போல் பேச்சுவார்த்தையை குழப்ப பலரும் முயல்வர். ஆனால் இக்கால கட்டம் எல்லா அரசியல்வாதிகளுக்கும் மிக முக்கியமானது. இவர்கள் மிக்க அமைதியாக தெளிவான சிந்தனையோடும், உறுதியோடும் இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டது நிகழுமா என்பது வினாக்குறி தான். ஏனென்றால் பிரதமர் மேஜருக்கு எதிரான அவரது கட்சிக்காரர்கள், எதிர்க் கட்சிகளினால் தமது குறுகிய அரசியல் நலனுக்காக இப் பேச்சுவார்த்தைக் காலகட்டம் பயன்படுத்தக்கூடும். ஆனால் எம்மைப் பொறுத்தவரை ஒரு பேருண்மை மிகத் தெளிவாகிவிட்டது. நோர்ந்தென்னன் என்ற ஆய்வாளர் குறிப்பிட்டது போல தேசியவாதம் இன்றைய உலகின் பெரும் உணர்வு பூர்வமான உறுதிமிக்க அரசியல் சக்தியாக உருவெடுத்துவிட்டது" என்பதே அது. ■

> "தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது."
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்
> திரு.வே.பிரபாகரன் அவர்கள்

# 'ஒப்பரேசன் தவளை' யில் கடற்புலிகள்

ஈருடகத் தாக்குதல் திட்டத்தைக் கொண்ட பூநகரி கூட்டுத் தளம் மீதான 'தவளை' இராணுவ நடவடிக்கையில் கடற்புலிகள் ஆற்றிய பங்கும் -பணியும் மிக முக்கியமானதாக இருந்தது.



தலைவருடன், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை.

**சிங்களக் கடற்படையைச் செயலிழக்கச் செய்வதன் மூலம்தான் பெரு வெற்றியை பெறமுடியும் என்பது, 'ஒப்பரேசன் தவளை' தாக்குதல் திட்டத்தின் பிரதான அம்சமாகும்.**

நாகதேவன்துறையில் அமைக்கப்பட்டிருந்த சிங்களக் கடற்படையின் படகுத்துறையைக் கைப்பற்றுவதுடன், இந்தச் சண்டை முடியும் வரை பூநகரி கூட்டுத் தளத்திற்கு கடல் மூலம் உதவிகள் கிடைக்கவிடாது தடுப்பதும் கடற்புலிகளின் விசேட பணியாக இருந்தது. அதேவேளை, காயம் பட்ட போராளிகள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதற்கும், சண்டையிடும் போராளிகளுக்கான உணவு தொடக்கம் சகல விநியோகங்களும் நடந்த, குடாக்கடலூடான கடற் போக்குவரத்திற்கும் கடற்புலிகளே பாதுகாப்பைக் கொடுத்து அப்பணியைத் திறம்படச் செய்தனர்.

11. 11. 1993 அன்று அதிகாலை தாக்குதல் தொடங்கியபின் நாகதேவன்துறை படகுத் தளத்தினுள் பாய்ந்த கடற்கரும்புலி மேஜர் கனேஸ், வெடிமருந்து நிரப்பப்பட்ட தனது படகை எதிரியின் நிலை மோதி கடற்படையினரை நிலைகுலைய வைத்தான். அதைத் தொடர்ந்து, கடல் வழியாக கடற்புலி வீரர்கள் தொடுத்த அதிவேகத் தாக்குதல்களால், எதிரியின் ஐந்து நீருந்து விசைப் படகுகள் கைப்பற்றப்பட்டன. நாகதேவன்துறை புலிகளின் கையில் வீழ்ந்தது.

அன்றைய இரவு விடிந்ததும் மன்னார்க் கடலிலுள்ள பாலை தீவுப் பக்கமிருந்து கல்முனை - பள்ளிக்குடா கரையோரமாகத் தரையிறங்க எதிரி முயன்றான். இத் தரையிறக்க முயற்சியில் எதிரியின் இரண்டு தரையிறக்கும் கலங்கள் (LANDING CRAFT) ஈடுபட்டுக் கொண்டிருந்தன. (ஒரு தரையிறக்கும் கலம் ஒரே தடவையில் 600 சிப்பாய்களை அவர்களது ஆயுதங்களுடன் ஏற்றி -ஒரு அடி ஆழத் தண்ணீர் வரை வந்து தரையிறக்கவல்லது).

இத்தரையிறக்க நடவடிக்கைக்கு உதவிபுரிய 'வீரயா', 'சூரயா' வகையைச் சேர்ந்த இரண்டு மோட்டார் பீரங்கிப் படகுகளும், அதேவேளை நான்கு 'டோரா' சண்டைப் படகுகளும் கரையை நோக்கியும், கடலில் நின்ற கடற்புலிகளின் படகுகளை நோக்கியும் குண்டுமழை பொழிந்து கொண்டிருந்தன. இதேவேளை வானில் வட்டமிட்டபடி உலங்குவானூர்திகளும் குண்டுவீச்சு விமானங்களும் கடற்புலிகளின் படகுகள் மீது தாக்குதல்களை நடாத்தி, சிங்களப் படையின் தரையிறக்கத்திற்கு உதவ முயற்சித்துக் கொண்டிருந்தன.

ஆனாலும் பூநகரித் தளத்தை விட்டு புலிகள் வெளியேறும் வரை (13 ஆம் திகதி மாலை வரை) வானிலிருந்தும் கடலிலிருந்தும் எதிரி பொழிந்த குண்டுத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்தபடி துணிச்சலுடனும் சாதுரியத்துடனும் போரிட்ட கடற்புலிகள், எதிரியின் தரையிறக்கத்தைத் தடுத்து நிறுத்தி, தாக்குதல் வெற்றிக்கு முக்கிய காரணியாக இருந்தனர்.

சிங்களக் கடற்படையைச் செயலிழக்கச் செய்வதன் மூலம்தான், இம்முகாம் தாக்குதலின் முழுப் பலனையும் பெறமுடியும் என்பது, புலிகள் வகுத்த தாக்குதல் திட்டத்தின் ஒரு பிரதான அம்சமாகும். அதைக் கடற்புலிகள் செவ்வனே செய்து ஒரு சாதனை படைத்துவிட்டனர்.

பூநகரி கூட்டுத்தளமானது தனது சொந்தப் பாதுகாப்பிற்கு சிங்களக் கடற்படையையே பெரிதும் நம்பியிருந்தது. யாழ். நீரேரியை ஒரு புறத்திலும் மன்னார்க் கடலுடன் தொடர்புடைய நிலத்தை மறுபகுதியிலும் கொண்டு, இந்தக் கூட்டுத்தளம் அமைந்திருந்தது. கடற்பலத்தைப் பொறுத்தவரை சிங்களப் படையானது ஒரு அதீத நம்பிக்கையுடனேயே இருந்தது.

கடல் வழிமூலமான ஒரு கெரில்லாத் தாக்குதலுக்குரிய சக்தியைக் கடற்புலிகள் கொண்டிருந்தாலும், பட்டப்பகலிலும் தொடர்ந்து நடைபெறும் ஒரு கடற்சண்டைக்குரிய திறனை கடற்புலிகள் கொண்டிருக்கவில்லை என்றே படைத்துறையின் உயர்பீடம் கருதியது. இதனால் பூநகரி முகாம் புலிகளால் தாக்கப்பட்டாலும் கடல் மூலமான உதவிகளைப் பெற்றுத் தாக்குதலை முறியடிக்கலாம் என்றே, படைத்துறை உயர்பீடம் நம்பியிருந்தது.

ஆனால் பூநகரி கூட்டுத்தளம் மீது தொடர்ந்து தாக்குதல் நடந்த மூன்று நாட்களும், கடற்புலி வீரர்கள் பூநகரியைச் சுற்றியுள்ள கடலை முழுமையான கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். விமானப் படையின் உதவியுடன் சிங்களக் கடற்படை கடலிலே நடாத்திய மரபுவழி யுத்தத்தை எதிர்கொண்ட கடற்புலிகள் திறமையாகப் போரிட்டு, எதிரியே ஆச்சரியப்படும் அளவுக்கு சாதனை புரிந்துள்ளனர்.

கடற்கெரில்லாக்கள் என்ற நிலையிலிருந்து, தொடர்ச்சியாக நடைபெறும் கடற்சண்டைகளுக்கும் கடற்புலிகள் தயாராகிவிட்டார்கள் என்ற உண்மையை, 'தவளை' இராணுவ நடவடிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ஞானிமடம் கடற்படைத் தளம் மீதான தாக்குதலிலும் அடுத்து நடந்த மூன்று நாள் கடற்சண்டைகளின் போதும், கடற்புலிகளின் மகளிர்படைத் துணைத்தளபதி லெப். கேணல் பாமா (கோதை) கடற்கரும்புலிகள் மேஜர் கனேஸ், மேஜர் கோபி உட்பட 30 கடற்புலி வீரர்கள் களப்பலியாகினர்.

'தவளை' இராணுவ நடவடிக்கையில் கடற்புலிகள் வெளிப்படுத்திய போர்த்திறன் ஒருபுறமிருக்க, இந்தத் தாக்குதலில் கடற்புலிகள் கைப்பற்றிய ஐந்து நீருந்து விசைப் படகுகளும் கடற்புலிகளின் பலத்தைப் பெருமளவு அதிகரிக்கச் செய்துவிட்டன.

இதுவரை காலமும் சாதாரண படகுகளுடன் ஆழங் குறைந்த கிளாலிக் கடல்நீரேரிப் பகுதியில் மேலாதிக்கம் செலுத்திய கடற்புலிகள், இனி நீருந்து விசைப் படகுகளுடன் கிளாலி நீரேரியை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் அதேவேளை, பெருங்கடலிலும் சிங்களக் கடற்படைக்கு பெரிய சவாலாக அமைவார்கள் என்று நம்பலாம்.

தனித்த நிலையில் இருந்தாலும் கடற்கரையோரம் அமைக்கப்பட்ட இராணுவத் தளங்கள் பாதுகாப்பானவை என்றே இது வரை காலமும் படைத்துறைத் தலைமை எண்ணியிருந்தது. 'தவளை' இராணுவ நடவடிக்கையுடன் அந்த எண்ணம் தகர்ந்துவிட்டது. மன்னார் மாவட்டத்திலிருந்த சிலாவத்துறை முகாம் அண்மையில் அகற்றப்பட்டமை இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

'தவளை இராணுவ நடவடிக்கையின் இராணுவப் பரிமாணத்தையும், நாகதேவன்துறையில் கடற்புலிகள் கைப்பற்றிய நீருந்து விசைப் படகுகளையும் அவற்றின் சக்தியையும் எடைபோடும் ஒரு இராணுவ வல்லுனன், "குடாநாடு மீதான இராணுவ முற்றுகை என்பது இனிமேல் சாத்தியமற்றதொன்று" என்ற முடிவுக்கே வருவான்.

இது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு வளர்ச்சிக் கட்டத்தை வெளிப்படையாக சுட்டிக் காட்டுகின்றது. ■

**நன்றி:'விடுதலைப் புலிகள்'**



## சாவுக்கு விலங்கிட்ட...

பலாலி கூட்டுப்படைத்தளத்தின் கிழக்குப் பகுதியில் -விமான இறங்கு தளத்தின் பாதுகாப்பிற்கென இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் அமைக்கப்பட்ட -4 1/2 கிலோ மீற்றர் நீளமான பாதுகாப்பு வியூகத்தைப் புலிப் படை வீரர்கள் பிய்த்தெறிந்த வீர சாதனை அது.

கெரில்லாப் போர்முறையின் ஒரு புதிய பரிணாம வடிவத்தில் புலிகள் நிகழ்த்திய இந்தப் பெருமெடுப்பிலான தாக்குதலின் திட்டத்தை வரைவதற்கு உறு துணையாக இருந்த முக்கியமானவர்களுள், கோபியும் ஒருவன்.

எதிரியின் ஒவ்வொரு அசைவையும் துல்லியமாக அவதானித்து, ஒவ்வொரு அங்குலத்தையும் துணிகரமாக வேவு பார்த்து, தாக்குதலின் போது தாக்குதலணிகளுக்கு வழிகாட்டியாகச் சென்றதோடு மட்டும் நின்றுவிடாது -

போரிடும் வீரனாய்ச் சண்டையில் இறங்கி, இடது காலை ரவை துளைத்துச் சென்ற பின்பும் சண்டையிட்டு, காயமடைந்த -களப்பலியான -தோழர்களுடன் ஆயுதங்களையும் அகற்றும்வரை, களமுனையிலிருந்து தான் வெளியேற மறுத்து, சோர்ந்து விழுந்து, சுய நினைவிழந்து, 'இனி இயங்காது' என்ற காலை, மருத்துவர்கள் இதயம் நேராக அகற்றிவிட...

அந்த வெற்றியின் பிரசவிப்பிற்காக மூன்று மாதகாலமாக -படுக்கையின்றி, பட்டினிகிடந்து -ஓயாது சுழன்று -அல்லும் பகலும் கசங்கிய அந்த விடுதலைப் புலி, உடல் வேதனையோடும் ஆனால் உள நிறைவோடும் படுத்திருந்தது.

ரவையுடைத்துச் சென்ற எலும்பிற்குக் கட்டுப்போட்டுக் கொண்டு, அடுத்த கட்டிலில் படுத்திருந்த நண்பனிடம் கோபி அடிக்கடி சொல்லுவான் -

"கால் போனது கவலைதான்; ஆனா அது ஒரு பிரச்சினை இல்லை. போராட்டத்துக்காக செய்யிறதுக்கு இன்னும் எவ்வளவோ வழியிருக்குத்தானே..."

கோபி!

அவன் மிகவும் மிருதுவானவன்.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் விதமாக அவன் நட்புக்கொள்ளும் முறை அபூர்வமானது.

அடுத்தவர்களை அனுசரித்து, அன்புகாட்டி அவன் பழகும் பண்பு அற்புதமானது.

தான் நிற்கும் இடம் எல்லாவற்றையுமே கும்மாளச் சிரிப்பாலும், குதூகலத்தாலும் நிறைத்துவிடும் அவனுடைய குணாம்சம் சிறப்பானது.

**இலக்குகளைத் தேடி இவர்கள் போனார்கள்; ஆனால், இலக்குகள் அவர்களைவிட்டுத் தப்பியோடிக் கொண்டிருந்தன. கடலலை போல காலமும் கரைய, வந்து சேர்ந்தன 'ஒப்பரேசன் தவளை'யின் நாட்கள்.**

இலட்சிய உறுதியாலும், விடா முயற்சியாலும், செயற்திறனாலும் வளர்ந்தவன் அவன்.

வேவு வேலைகள் கொடுக்கப்படும் போது -ஒப்படைக்கப்பட்ட பணியை முழுமையாகவும், திறமையாகவும் செய்து முடிக்கும் வரை -'செய்து முடிக்க வேண்டும்' என்ற உணர்வின் உந்துதலோடு -திரும்பத் திரும்பப் போய், முயற்சி எடுக்கும் தன்மை அவனுடையது.

எப்பொழுதும் சண்டைகளைப் பற்றியே பேச்சு; தாக்குதல்களைப் பற்றியே எண்ணம்; போர்த் திட்டங்களைப் பற்றியே சிந்தனை. தளபதி பால்ராயுடன் அவன் கதைக்காத நாள் கிடையாது; கதைப்பதற்கு பகலென்றும் இரவென்றும் நேரம் கிடையாது; அந்தக் கதைகளிலெல்லாம் போரன்றி வேறெதுவும் கிடையாது.

"அங்கு ஒரு நல்ல 'ராக்கற்' இருக்கு"; "இந்த இடத்தில் அவன் வழமையா வந்து போறான்"; "அந்தப் பக்கம் அடிக்கக்கூடிய மாதிரி இருக்கு" என்றுதான் அந்தப் புலிவீரன் பேசிக்கொண்டிருந்தானே அல்லாமல் -தனது குடும்பத்தின் கஸ்ட நிலையைப் பற்றி, வானமே கூரையான அவர்களின் வாழ்வைப் பற்றி, அவன் ஒரு போதுமே வாய் திறந்ததில்லை.

அது மலையகத்தைச் சேர்ந்த ஒரு தமிழ்க் குடும்பம்.

கேகாலையில் உள்ள 'மாவனெல்ல'தான், சுப்பிரமணியம் ஐயாவினுடைய குடும்பத்தின் பூர்வீகக் குடிநிலம்.

ஒரு அக்காவிற்கும் மூன்று தம்பிகளிற்கும் இடைப்பட்டவனாக, 1973 யூன் 6 இல் பிறந்தவனுக்கு செல்வலிங்கம் எனப் பெயரிட்டு, கண்ணன் என்று செல்லமாக அழைத்தனர்.

அந்தக் குடும்பத்தின் நிறைவான பொருளாதார வாழ்வை மட்டுமல்ல, அவர்களின் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் சேர்த்து சிங்களப் பேரினவாதம் சிதைத்தது.

பத்து வருடங்களுக்கு முன்னர், இலங்கைத் தீவையே இரத்த களமாக்கி, தமிழர்கள் மீது கோரமான இனவன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட போது, விரட்டியடிக்கப்பட்ட குடும்பங்களுள் அதுவும் ஒன்று.

அல்லல்பட்டு வந்த பல்லாயிரக் கணக்கான தமிழர்களோடு, அந்தக் குடும்பத்தையும் தாங்கிக் கொண்டது தமிழீழம்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரான்சில் புகைப்படக் கண்காட்சி



சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 19, 20/3/94 இல் தமிழீழ மகளிர் அமைப்பினால் பாரிசில் நடாத்தப்பட்ட 'தமிழீழப் பெண்களின் விழிப்புணர்ச்சி' பற்றிய புகைப்படக் கண்காட்சியில் எடுக்கப்பட்ட படம் மேலுள்ளது.

வாத தாரக மந்திரம் சிங்களவரிடை எடுபடவில்லை என்பதை உணர்ந்துள்ள சிறீலங்கா ஜனாதிபதி, இந்நிலையில் யாழ் குடாநாடு மீதான தாக்குதல்களை தொடங்கினால் அவற்றால் ஏற்படக்கூடிய ஆளணிச் சேதங்களை, பொருளாதார நட்டங்களை சிங்கள மக்கள் தாங்குவார்களா எனச் சிந்திக்க தொடங்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் யாழ் குடாநாடு மீதான யுத்தத்தை தாமதப்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு சிறீலங்கா ஜனாதிபதி தள்ளப்பட்டுள்ள போதிலும், விடுதலைப் புலிகளின் தேசிய பாதுகாப்போடு நிறுவப்பட்டுவிட்ட தமிழீழ அரசு நோக்கிய அரசை வேரறுக்காவிட்டால் இதற்கான சர்வதேச அங்கீகாரம் விரைவில் கிட்டிவிடும் எனும் பயமும் சிறீலங்கா ஜனாதிபதியை உலுக்கி வருகிறது. ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக்கான உப ஆணைக்குழுவில் பங்குபற்றிய பல அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழீழ அரசு நோக்கிய அரசை சட்டபூர்வ அரசு போன்று தமது ஆதரவை காண்பித்தமை, தமிழீழ அரசுக்கான அங்கீகாரம் விரைவு பெறுவதை சிறீலங்கா ஜனாதிபதிக்கு மறைமுகமாக உணர்த்தியுள்ளது. இதனால் இலங்கைத்தீவு முழுவதும் தனது இறைமை செயற்படுகிறது எனக்காட்டும் அவசர முயற்சிகளில் அவர் வேகமாக இறங்கியுள்ளார். இதற்காகவே கிழக்கில் ஆயுதமேலாண்மையுள்ள போலித் தேர்தல் ஒன்றை உள்ளூராட்சி சபைகளூடாக நடாத்தினார். அடுத்து ஜனாதிபதி தேர்தலையே தனது இலக்காக கொண்டுள்ள பதவிப்பித்தரான சிறீலங்கா ஜனாதிபதி டி.-பி. விஜயதுங்கா வடக்கில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது விட்டால், சிறீலங்கா ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரமுள்ளவர் (இறைமையுள்ளவர்) என்கிற அரசியல் சாசனம் உண்மையற்றதாகிவிடும்; அதனால் தமிழீழ மக்களின் அரசு நோக்கிய அரசின் சட்ட பூர்வத் தன்மை வலுப்பெற்றுவிடும் என்பதை நன்கறிவார். எனவேதான் எவ்வகையிலேனும் யாழ் குடாநாட்டின் மீதான பெருமளவிலான தாக்குதலை விரைவுபடுத்தியே ஆகவேண்டும் என சிறீலங்கா ஜனாதிபதி துடிக்கிறார். ஆகவே பெரும் யுத்த தந்திரோபாயத்தை தமிழீழம் எந்நேரமும் எதிர் நோக்கி நிற்கிறது. ■

## மக்களுக்கு எதிரா..

மேலும் தேர்தல் நடாத்தப்பட்ட வவுனியா பிரதேசத்தில், காது கேளாத வயோதிபர் ஒருவர் காவலரணைத் தாண்டிச் சென்ற வேளை இராணுவம் ஈவிரக்க மற்ற முறையில் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் அவ்வயோதிபர் தளத்திலேயே இறந்துவிழுந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறு, தான் தேர்தல் நடாத்திவிட்டதாக புளுகிவரும் சிறீலங்கா அரசின் தேர்தல் நடாத்தப்பட்ட பிரதேசங்களில் சிறீலங்கா அரசின் பாதுகாப்புப் படைகள், மக்களுக்கு எதிரான யுத்தத்தையும், யுத்தக் குற்றச் செயல்களையும் தாராளமாகச் செய்துவருகிறது. இக்குற்றச் செயல்களை படுவேகமாக அதிகரிப்பதன் மூலம் மக்களிடையே பயப்பீதியை தோன்றவைத்து ஆயுதத்தால் அடக்கியாள்வதே சிறீலங்கா அரசின் நோக்காக வுள்ளது. ■

## சிறீலங்கா அரசா...

ளால் சிங்களவரிடை ஏற்படக் கூடிய அமுக்கக் குழுக்களை இயங்கவிடாது தடுப்பதற்கு சிறீலங்கா அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்து நடைமுறைச் சாத்தியமற்ற நிபந்தனைகளை விதித்து பேச்சு வார்த்தைக்கான சூழல் உருவாக்கத்திற்கான சந்தர்ப்பங்களை முன்கூட்டியே தவிர்க்கத் தொடங்கியுள்ளது.

இதன் மூலம் சிறீலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். - முகம்மது, மற்றும் நல்லெண்ண நோக்கம் கொண்ட மதகுருமார் போன்றவர்களின் யாழ் விஜயத்துக்கான முயற்சிகளையும் அர்த்தமற்றதாக்கிவிடலாம் எனச் சிறீலங்கா அரசாங்கம் கருதுகிறது. ■

# சாவுக்கு விலங்கிட்ட...

மன்னாரில், பல்லவராயன்கட்டு கிராமத்தில் அவர்கள் குடியேறும் போது, கோபிக்கு பத்தே வயதுதான்.

'சிங்களவர்களோடு தமிழர்கள் ஒருகாலத்திலும் சேர்ந்து வாழ முடியாது' என்பது, ஒரு ஆழமான உண்மையாக, அந்தப் பிஞ்சு நெஞ்சில் அப்போதேயே பதிந்தது.

நன்றாகப் படிக்க வேண்டுமென்றும், நல்ல அறிவாளியாக வளர வேண்டும் என்றும் அந்தச் சிறுவனுக்கு நிறைய ஆசை. அதில் ஊக்கமும் ஆக்கமும் கொண்ட பள்ளிக்கூட மாணவனாக அவன், 9 ஆம் வகுப்பு வரை பாடசாலைக்குப் போனான்.

படம் பார்க்கவென்று அம்மா கொடுக்கும் பணத்தை வாங்கிச் சென்று, படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்கிவந்து சேர்க்கும் அளவுக்கு இருந்தது அவனது கற்கும் ஆர்வம்.

ஆனால், உக்கி உதிரும் கூரையும் சொரிந்து சரியும் திண்ணையுமாக அந்தக் கொட்டில் வீட்டின் ஏழ்மை நிலையினால், அவனது ஆர்வத்திற்கும் முயற்சிக்கும் ஒத்துழைக்க முடியவில்லை.

இந்த வேதனை அவனது மனதைப் பாரமாக அழுத்தும் வேளைகளில் எல்லாம், தாங்கள் அவலமாக ஓடிவந்த அந்த நாள், அவனது நினைவில் உறைக்கும்.

விரிவாக்கம் கண்டுவந்த விடுதலைப் போராட்டத்தில், தானுமொரு தமிழ்க் குடிமகன் என்ற வகையில், தனக்குரிய பங்கை உணர்ந்துகொள்ள அவன் தவறவில்லை.

படித்து முன்னேற வேண்டுமென ஆர்வத்தோடு வாங்கிய பாடப் புத்தகங்களிற்குள், ஒளித்து வாங்கிவந்த போராட்ட நூல்களை மறைத்துப் படிக்க அவன் துவங்கினான்.

அந்தச் சிறுவன் வளரவளர அவனுள் அரும்பியிருந்த விடுதலை உணர்வும் விஸ்வரூபம் எடுத்து வந்தது. அது கட்டாயக் கடமையாகவும் அவனுள் பரவியது.

கடற்புலிகள் அணி அந்த வீரனைத் தனதாக்கிக் கொண்டது 1993 இன் ஆரம்பத்தில்தான்.

எதிரியானவன் சிறந்த சண்டைப் படகுகளுடனும், நவீன ஆயுதங்களுடனும் கடலில் வருகின்றான். எம்மிடமிருப்பது குலையாத ஆன்ம உறுதியும், எமது உயிரும்தான். இவற்றைக் கொண்டு நாங்கள் அவனைச் சந்தித்தேயாக வேண்டும் என்ற கருத்தைச் சுமந்து வாழ்ந்த அந்த வேங்கையின் கரும்புலிக் கனவு நனவாக, சந்தர்ப்பமும் கிடைத்தது.

கிளாலிக் கடலில் எதிரியைத் தேடியலையும் வெடிமருந்துப் படகொன்றுக்கு கோபி சொந்தக்காரனாயிருந்தான்; இன்னொன்றுக்குக் கணேஸ்.

வரதனும் மதனும் உடைத்தபின், நாகதேவன்துறையில் மிஞ்சிக் கிடந்த விசைப்படகுகள் புலிகளின் கைக்கு மாறும்வரை அவைதான் அவர்களின் குறி.

இலக்குகளைத் தேடி அவர்கள் போனார்கள்; ஆனால், இலக்குகள் அவர்களைவிட்டுத் தப்பியோடிக் கொண்டிருந்தன.

கடலலை போல காலமும் கரைய, வந்து சேர்ந்தன 'ஒப்பரேசன் தவளை'யின் நாட்கள் -

கோபியின், கடைசி 48 மணி நேரங்கள் அவை -

யாழ். கடல்நீரேரியின் ஓரத்தோடு -கௌதாரிமுனைக்கும் பள்ளிக்குடாவிற்கும் மேற்கே - இந்துமா சமுத்திரத்தின் ஆர்ப்பரிக்கும் அலைகளை ஊடறுத்து அவனது படகு விரையும்.

அவனைக் காணும் எதிரியின் பீரங்கிப் படகுகள் மண்டைதீவுப் பக்கமாக எட்டத்துக்கு விலகும்.

"உங்களை நம்பியே தரையில் எங்கள் போராளிகள் போரிடுகின்றார்கள். சமர் முடிந்து அவர்கள் முற்றாக வெளியேறும்வரை நேவி இறங்காமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு உங்களிடமுள்ளது".

சண்டைக்கு முன்னர் தலைவர் சொன்னதை ஒவ்வொரு கணமும் அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

நடுக்கடலில் இயந்திரம் பிசகும், படகு உடனடியாகக் கரைக்கு விரையும்; அவனது 'அவசரம்' அவசரப்படுத்தும்; திருத்த வேலை துரிதமாகும்; படகு மீண்டும் புறப்படும். அந்த இரண்டு நாட்களுக்குள் இது அடிக்கடி நடந்தது.

இப்படியாக வந்து வந்து போனவனை -கடைசித் தடவைக்குப் பிறகு -'அதே சிரித்த முகத்தோடு' நாங்கள் காணவில்லை...

எங்கள் கோபி!

"கடலில் நேவி வந்தால் பொடியள் காப்பாத்துவாங்கள்" என்று அம்மாவிடம் சொல்லிவிட்டு வந்தாயா...

எப்படியடா முடியும்?

எங்களால் நெருங்க முடியாத உயரத்தில் நீ;
எங்களால் எட்ட முடியாத உயரத்தில் உனது இலட்சிய வேட்கை!

நண்பா! அந்த இலட்சியத்தை அடையும் வரை -அதே வழிகாட்டலில் -நாம் அணிவகுப்போம்.

சென்று வா! ■

## தென்மாகாண...

சேதங்களும் பொருளாதார நட்டங்களும் நிறுத்தப்படக் கூடிய ஒரு சூழ்நிலையை தோற்றுவிக்க வேண்டுமெனவும் கருத்துப்பட எதிர்க்கட்சிகளின் கூட்டங்களில் பேச்சுக்கள் அடிபட்டன. இவை முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மக்களின் நலன்களுக்கு முன்னுரிமையும் பேணும் தன்மை உள்ள செயற்பாடாகவே காணப்பட்டது.
ஆயினும் சிங்கள பௌத்த வெறித்தனத்தை தனது அரசியல் ஆதாயமாக கொள்ள முனைந்த நிலையில், சிறீலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவுக்கு தேர்தல் மூலம் சிங்கள மக்கள் சரியான பாடத்தை புகட்டியுள்ளனர்.

### யுத்தத்தைத் தொடங்க தயக்கம்

தனது சிங்கள பௌத்த பேரின

## அன்றும் இன்றும்

*" என்ன ஸேர், நீங்கள் தனித்தமிழ் நாடு பற்றிக் கதைக்கிறியள், அரச கடற்படை ஊர்காவற்றுறையிலோ காங்கேசன்துறையிலோ வந்து நின்று பத்து செல் அடித்தால், உங்க தனிநாடு இந்துசமுத்திரத்துக்குள் போகாதோ!"*

*- இது 1968 ஆம் ஆண்டு, ரயிலில் நடைபெற்ற ஓர் உரையாடல். நாடாளுமன்ற உறுப்பினராயும் பிரதிச் சபாநாயகருமாயிருந்த திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள். இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரான திரு.வ.நவரத்தினத்தைப் பார்த்துச் செய்த நகையாடல்!*

*கனடாவில் இருந்து திரு.வ.நவரத்தினம் இப்போது வெளியிட்டுள்ள ஓர் ஆங்கில நூலில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.*

*இது அன்று நடைபெற்ற நிகழ்ச்சி.*

*இன்று............?*

*அவர்கள் பயந்து எண்ணிய அதே படையினரிடமிருந்து, அதே பீரங்கிகள் போரில் பறித்து வரப்பட்டுள்ளன. சண்டைப் படகுகளோடு, கனரக ஆயுதங்களும் ஏராளம்!*

*முன்னைய வெறும்பேச்சு இன்றில்லை -*

*எம் உயிரினும் இனிய தமிழீழத்திற்காக விடுதலைப் போர் - ஆயுதப் போர் -*

*துணிவு, ஈக உணர்வு - இது இன்றைய நிலை.*

# சிங்கள தேசம் எதை விரும்புகிறது?

தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கை நிலைப்பாட்டிலும் -அணுகுமுறை வடிவிலும் சிறீலங்கா ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்கா ஒரு 'தெளிவான' கண்ணோட்டத்தை வைத்திருக்கின்றார்.

இனப்பிரச்சினை என்ற ஒன்று இங்கில்லை என்பதும், இருக்கும் பயங்கரவாதத்தை அரச படையைக்கொண்டு அழிப்பதும் தான் ஜனாதிபதியின் நிலைப்பாடு. 'பேச்சு' என்பதை அதுவும் "புலிகள் இயக்கத்துடன் பேச்சு" என்பதை அவர் அடியோடு - உறுதியாக எதிர்க்கின்றார்.

பேரினவாத வெறியர்களான காமினி திசநாயக்கா பேன்றோரும் இன்னும் பல உள்ளூர் வெளிநாட்டு அரசியலாளர்களும் -இராஜதந்திரிகளும் விஜயதுங்காவின் கருத்துடன் உடன்படாவிட்டாலும், சிறீலங்கா ஜனாதிபதி தனது நிலைப்பாட்டில் தொடர்ந்தும் விடாப்பிடியாகவே உள்ளார். அந்தவகையில் அவரை 'நேர்மையான பேரினவாதி' என்றுகூடச் சொல்லலாம்.

ஆனால் தன்னை ஒரு மிதவாதிபோலக் காட்டிக்கொள்ள விரும்பும் சிறீலங்காவின் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா, போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக குழப்பமான கருத்துக்களை வெளிப்படுத்தி குட்டையைக் குழப்பி வருகிறார்.

முதலில், "புலிகளுடன் பேசி தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தயார்" என்றார்.

பின்னர், "புலிகள் ஒரு தீர்வுத் திட்டத்தை அரசுக்குக் சமர்ப்பிக்க வேண்டும்" என்ற நிபந்தனை விதித்தார்.

அதன்பின், "பிரபாகரன்தான் நேரடியாக வந்து பேச வேண்டும்" என்றார்.

இறுதியில், "புலிகள் ஆயுதத்தை ஒப்படைத்தால் தான் அவர்களுடன் பேசமுடியும்" என்றுள்ளார்.

பிரதமர் ரணிலின் இந்தக் குழப்பகரமான அறிவிப்புக்கள், சமாதான முயற்சி தொடர்பான அவரது தயாரற்ற தன்மையையே புலப்படுத்துகின்றன.

அப்படியாயின் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைக்குரிய சந்தர்ப்பமே இப்போது இல்லையா என்ற கேள்வி, மக்களிடம் எழுவது நியாயமே.

சமாதானச் சூழலை உருவாக்கவென யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் செய்யும் பெருமகன்களும் -மதகுருக்களும், புலிகளிடமுள்ள சமாதான விருப்பை சந்தேகத்துக்கு இடமின்றி அரசிற்கும் -உலகிற்கும் அறிவித்துள்ளனர். ஆனால் சிங்களத் தலைவர்களிடமிருந்து உருப்படியான எந்த ஒரு பதிற் சமாதான சமிக்ஞையும் வரவில்லை.

வெளிப்படையாகச் சமாதான சமிக்ஞைகளை விடுப்பது, இந்தத் தேர்தல் ஆண்டில் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு முடியாததொன்றாக இருக்கலாம்.

ஆனால் புலிகள் இயக்கம் தொடர்பாக -தமிழரின் உரிமைப் போராட்டம் தொடர்பாக, சிங்கள தேசத்தில் இன்று எத்தகைய கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன என்பது, கட்டாயம் கருத்தில் எடுக்கப்படவேண்டியதே.

புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம்போல உருவகப்படுத்தியும், தமிழரின் உரிமைப் போராட்டத்தை சிங்கள இனத்திற்கு வந்த பேராபத்துப்போலச் சித்திரித்துக் காட்டியும் சிங்கள மக்களுக்கு வெறியூட்டிவருகின்றனர். இதில் ஆபத்தான விடயம் எதுவெனில், இந்த வெறிப் பிரச்சாரத்திற்கு நாட்டின் அதி உயர்ந்த பதவி வகிக்கும் ஜனாதிபதியே தலைமை வகிப்பது தான்.

இதனால் தமிழ் - சிங்கள இன முரண்பாடு மேலும் மேலும் சிக்கலடைகிறது.

இதன் விளைவாக ஒரு காலத்தில் சிங்கள அரசியல் தலைவர்கள் புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்கு உடன்பட வேண்டிய தேவை ஏற்பட்டாலும், அதை ஏற்றுக்கொண்டு-ஒத்துழைப்பு வழங்கும் மனநிலையில் சிங்கள மக்கள் இருக்கமாட்டார்கள். சிறீலங்கா அரசைப் பொறுத்தவரை, எதிர்காலத்தில் இது ஒரு ஆபத்தான விடயமாக இருக்கும்.

போர்க்கள யதார்த்தத்தைப் பற்றியும் இன ஒற்றுமையின் அவசியம் பற்றியும், தமிழர்களது உரிமைப் போராட்டத்தின் அரசியல் நியாயத்தையும் மெதுமெதுவாக சிங்கள மக்களுக்கு ஊட்டுவதற்குப் பதிலாக, சிங்கள அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து மக்கள் தொடர்புச் சாதனங்களும், பௌத்த மதத்துறவிகளும், புத்திஜீவிகளும் "புலிகள் அழிக்கப்பட வேண்டும்; போராட்டம் ஒடுக்கப்பட வேண்டும்; அதில் தான் சிங்கள இனத்தின் வாழ்வே தங்கியுள்ளது" என்றவாறாக, சிங்கள மக்களுக்கு வெறியூட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இந்தத் தமிழின விரோதப் பிரச்சாரத்தால் தமிழ்மக்கள் விரக்தியும் -ஏமாற்றமும் -கோபமும் அடைந்துள்ளனர்.

சிங்கள ஆளும் வர்க்கத்தைப் பொறுத்தளவில் தமிழர்களுக்கு உரிமை வழங்கவும் தயாரில்லை; தமிழர்களுடன் இணைந்து வாழவும் விரும்பவில்லை; இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் -குறிப்பாக தென்தமிழீழத்தில் -இன்றும் தொடர்ந்தபடியுள்ள இனப்படுகொலையும், சிங்களக் குடியேற்றங்களும், கொடூரமான அடாவடித்தனங்களும் இதற்கு நல்ல சான்றுகள்.

சிங்கள தேசத்து அரசியல் நிலைப்பாடு இவ்விதம் இருக்கும்போது, இவற்றையெல்லாம் மீறிக்கொண்டு சமாதானத்திற்கு அரசு இசைந்துவிடுமென்று தமிழ்மக்கள் எதிர்பார்ப்பதில், எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை.

தொடர்ந்தும் தமிழினத்தின் தேசிய பலம் வளர்ச்சியடைய வேண்டும். அதுதான் தமிழ்மக்களுக்கு சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்கும். ■

நன்றி: 'விடுதலைப்புலிகள்'

# கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதில்லை

### - சிறில் ரணதுங்க கூறுகிறார்.

"கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவதில்லை. ஓரளவு தமிழ் இளைஞர்கள் சொற்ப காலம் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பின்னர் விடுதலை செய்யப்படுகின்றனர்"

துரதிருஸ்டவசமாக கடற் படைத் தளபதி, பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி மற்றும் சில சாதாரண பிரசைகளும் கொலை செய்யப்பட்டனர். கொழும்பில் பெரும் எண்ணிக்கையில் அப்பாவித் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால், இந்தக் கொலைகளுக்குப் பின்னணியில் இருப்பவர்களை எம்மால் கண்டுகொள்ள முடியாது. ஆகவே, கொழும்பில் வாழும் தமிழ் இளைஞர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க வேண்டியுள்ளது."

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், இலண்டனில் உள்ள சிறீலங்காவின் உயர் ஸ்தானிகருமான சிறில் ரணதுங்க அண்மையில் பி. பி. சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழ் இளைஞர்களைத் தடுத்து வைத்து சித்திரவதை செய்வதில்லை. இந்த விடயங்கள் குறித்து விசாரிப்பதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இராணுவ வீரர்கள் துன்புறுத்தலில் ஈடுபட்டால் அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். நான் முன்பு இராணுவத்திற்குப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியுள்ளேன். இவ்வாறான விடயங்கள் குறித்து முறைப்பாடு கிடைத்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். ■

# 'நொமியனமினுசு' படக்காட்சி படையினருக்கு இலவசம்

'நொமியனமினுசு' (சாகாத மனிதர்கள்) என்ற சிங்கள திரைப்படம் இராணுவத்தினருக்கு இலவசக் காட்சியாக காண்பிக்கப்பட்டது.

கொழும்பு நீகல் படமாளிகையில் காண்பிக்கப்பட்ட இப்படத்தின் காலைக் காட்சி இராணுவத்தினருக்கு இலவசமாக காண்பிக்கப்பட்டதாகவும், ஏனைய காட்சிகளில் இருந்து பெறப்படும் நிதி இராணுவத்தினரின் நலனுக்கு பயன்படுத்தப்பட இருப்பதாகவும் இப்படத்தின் தயாரிப்பாளர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து மேற்படி திரைப்படம் முன்னணி இராணுவ முகாம்களில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ■

# ஆமணக்கு எண்ணை அதிகரிக்க ஆராய்வு

'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' தமிழீழத்தின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு செயற் திட்டங்களை ஆற்றிவருகின்றது. கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்காக அமைக்கப்பட்ட 'கைத்தொழில் அபிவிருத்திக் குழு' ஒன்று அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்று ஒன்றுகூடல் ஒன்றினை நடாத்தியது.

அக்கூட்டத்தில், புதுக்குடியிருப்புப் பகுதியில் ஆமணக்குச் செய்கைக்கு தற்போது இருக்கும் விதை முழுவதையும் நாட்டுவதற்கும், ஆமணக்கை வடித்து எண்ணெய் பெறும் வீதத்தை கூட்டுவதற்கும் செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டன.

மேலும், சிறுபோகத்திற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விதைப்பரம்பல் பற்றியும் ஆமணக்கு, சோயா என்பவற்றிலிருந்து குடிசைக் கைத்தொழிலாக எண்ணெய் வடித்தல் நடவடிக்கையை விரிவாக்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. ■

# பத்திரிகைகளுக்கு தகவல் வழங்கும் இராணுவ அதிகாரிகளுக்கு எச்சரிக்கை

பத்திரிகைகளுக்கு எந்தவித தகவல்களும் கொடுக்கக் கூடாது என கடுமையாக எச்சரித்து இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா அண்மையில் சிரேஸ்ட இராணுவ அதிகாரிகளுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்த உத்தரவை மீறுவோரைக் கண்டறிய தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உதவியைப் பெறப்போவதாகவும், உத்தரவை மீறுவோர் கடும் தண்டனைக்கு உள்ளாவர் எனவும் இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் இராணுவத் தலைமைப்பீடத்திற்கு முரண்பாடுகளை தோற்றுவிக்கக் கூடிய தகவல்களை சிலர் பத்திரிகைகளுக்கு வெளியிட்டதையடுத்தே இராணுவத் தளபதியின் இந்த அறிவுறுத்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் தனது உத்தரவுகளுக்குப் பணிய மறுத்த சிரேஸ்ட அதிகாரி ஒருவருக்கு இராணுவத் தளபதி, கவனமாக நடந்து கொள்ளுமாறு கூறும் கடுமையான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை வடக்கு-கிழக்கு யுத்தம் தொடர்பாக வாராந்தம் நடைபெறும் செய்தியாளர் மாநாட்டை பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகம் சில தினங்களுக்கு ஒத்திவைத்துள்ளது. ■

# தனியார் - அரச கடிதங்கள் தனித்தனியான பொதிகளில்

### ■ சோதனைக்கு வசதியாம்

சோதனைக்கு வசதியாக அரசாங்க காரியங்களுக்குரிய கடிதங்களையும், தனியாருக்குரிய கடிதங்களையும் தனித்தனியாக பொதிகட்டும் செயலில் சிறீலங்கா தபால் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தினூடாக கப்பல்களில் வந்துசேரும் தபால்களை சோதனையிட வசதியாகவே தபால்திணைக்களம் இந் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் கப்பல்களில் ஏற்றப்பட்டு வடபகுதிக்கு கொண்டு செல்லப்படும் தபால் பொதிகள் தனியாருக்குரிய கடிதங்கள் மட்டுமே பிரிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

அரச காரியங்களுக்குரிய கடிதங்களையும், தனியாருக்குரிய கடிதங்களையும் தனியாகப் பிரித்துக் கட்டுவது தற்போது நாளாந்த வேலையாகிவிட்டதாகவும் தெரிகிறது. கொழும்பிலிருந்து வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் கடிதங்கள் பிரிக்கப்பட்டும், சிதைக்கப்பட்டும் இருக்கின்றமை தெரிந்ததே. ■

# மண்ணைக் காப்பது போல எமது மொழியையும் காக்க வேண்டும்

■ இளங்குமரன்

தூயதமிழ் பாவனை குறித்து அண்மையில் யாழ். மாவட்ட அரசியல் துறை செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் இயன்றளவு தூயதமிழ் சொற்பாவனையை ஏற்படுத்துவதற்கான செயலாக்கத்தில் வானொலியும், நாளிதழ்களும் ஏனைய இதழ்களும் பங்காற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டது. வாணிப நிறுவனங்கள் தமது பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் உரை நிகழ்த்துகையில், "தலைவர் மண்ணையும் மக்களையும் காப்பாற்றப் போராட்டம் நடாத்தி வருகின்றார். அதேவேளை எமது விழிபோன்ற மொழியினைப் பேணுவதற்கு நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். அதற்கெனவே கல்வி வளர்ச்சிக் கழகம் உருவாக்கப்பட்டது. எமது இனம் தாழ்ந்ததற்கு முதற்படியாக எமது மொழி தாக்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழில் 70 விழுக்காட்டிற்கும் கூடுதலான பிற மொழிச் சொற்கள் கலந்துள்ளன. மொழி பாதுகாக்கப்படாவிட்டால் எம் இனம் அழிந்துவிடும். மொழியின் மீது பற்றுவைக்காவிடின் எம்மை நாமே அழிக்கும் நிலை தோன்றலாம்" எனத் தெரிவித்தார்.

தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி உரை நிகழ்த்துகையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் மொழி ஒடுக்குமுறையினால் தோற்றம் கண்டது. எமது நாடு விடுதலை அடையும்போது மொழியும் விடுதலை அடையவேண்டும் என்றார். ■

# எங்களால் முடியும் !



எங்கள் கைகள் வலுவுள்ளவை.
உயரத்தூக்கிய துப்பாக்கிகளைச்
சுமந்தபடி
நாம் பேசுவோம்.
எழுதப்படாத வரிகளை
எழுதி நிற்போம்.
காற்றைக் கிழித்த ரவைகள் நடுவும்
ஏட்டில் வடிக்கும் கருவின் நடுவும்
எங்கள் கைகள் வலுவுள்ளவை.
நெருப்பாற்றைக் கடந்து நிமிர்வதற்காய்
அனல் எறிந்த எங்கள் விழிகளின்
வீச்சுக்களை எங்கள்
பேனாமுனைகள் பேசும்.
எங்களால் முடியும் !


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.